
சைதன்யர்

அசோக் சாட்டர்ஜி சாஸ்திரி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

சைதன்யர்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
படஉதவி : நேஷனல் மியூசியம். புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

சைதன்யர்

மூலம் : அசோக் சாட்டர்ஜி சாஸ்திரி

தமிழில் : கே. எஸ். பிரணதார்த்திஹரன்

சாகித்திய அக்காதெமி

Caitanyar - Tamil translation by K.S. Pranatharthiharan of Asoke Chatterjee Sastri's monograph in English, Sahitya Akademi, New Delhi - 1999. Rs. 25

முதல் வெளியீடு : 1999
ISBN - 81-260-0633-1

சாகித்திய அக்காதெமி
தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி - 110 001.

விற்பனை :
'ஸ்வாதி' மந்திர் சாலை, புதுதில்லி - 110 001.

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் - 560 002.

'குணா பில்டிங்', 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா - 700 053.

172, மும்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலயா சாலை,
தாதர், மும்பய் - 400 014.

விலை: ரூ. 25

Laser Typesetting at Ekalaivan Pathipagam
Chennai - 41.

அச்சிட்டோர் : Gee Bee Graphics, Chennai - 21

முன்னுரை

பதினெட்டாம் நூற்றாண்டைய வங்க நாட்டின் சமூக மத மற்றும் இலக்கிய வரலாற்றில் சைதன்யர் முக்கிய அங்கமாக விளங்குகிறார். வங்க நாட்டுக்கலை மற்றும் மதம் பற்றிய இம் முக்கிய வளர்ச்சிப்படி கற்றறிந்தவர்களால் புறக்கணிக்கப் பட்டுள்ளது என்பது வருந்தத்தக்கது. சில நேரங்களில் திறனாய்வாளர்களின் விவாதங்களில் பலமுக இயக்கத்தின் ஒருசில அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. முனைவர் எஸ். கே. டேயின் "வங்க தேசத்தின் வைணவப் பற்றுறுதியும் இயக்கமும் பற்றிய தொடக்க கால வரலாறு" இப்பொருள் குறித்துச் சுருக்கமாக எடுத்துரைத்தாலும் சைதன்யரின் வாழ்க்கையும் பங்களிப்பும் பற்றிய ஒரு மதிப்பீடு கட்டாயமாக தேவைப்படுகிறது. முனைவர் டே அவர்களின் நூல் தற்செயலாகவோ சாதாரண வாசகர் களுக்காகவோ எழுதப்பட்டது அல்ல, என்றாலும் அவ்வியக்கம், அதன் தலைவர். பற்றிப் போதிய அளவு அறிந்து கொள்ள வாசகர்கள் விரும்பலாம். இருந்தபோதிலும் ஒரே நேரத்தில் பல தொகுதிகளையுடைய நூல்களை அவர்களால் படிக்க முடியுமா? ஐந்து நூற்றாண்டுகள் நிறைவு பெற்ற நிலையில் தற்சமயம் சைதன்யவியம் பற்றிய புதிய விழிப்புணர்ச்சி உலகம் முழுவதும் அரும்பியுள்ளது. அமைதி, நல்லிணக்கம், பக்தி ஆகியவற்றைப் பின்பற்றி நடக்கவிருக்கும் மக்களுக்கு அன்பு, பக்தி சம்பந்தப்பட்ட உன்னத செய்தியினை எடுத்துச் சொல்ல இதுவே தருணம். இத்தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நூல் ஒரு சிறு முயற்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு இயன்ற அளவு கௌடிய, வங்காள, வைணவஇய இயல்புகள் பற்றிய பார்வைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வாசகருக்கு ஒட்டு மொத்தமான கருத்தை வழங்க வேண்டுமென்பது கருத்தில் கொள்ளப்பட்டு உள்ளது.

சைதன்ய இயம் என்பதனை மத சம்பந்தப்பட்ட இயக்கமாக மட்டும் கருதக்கூடாது. இத்னை நாம் பல கோணங்களில் காண முடியும். முதலாவதாக இந்த இயக்கத்தின் எழுச்சிக்கான காரணத்தை அறிவதற்கு அக்காலகட்டத்தின் பின்னணியை முழுவதுமாக விவாதிக்க வேண்டும். வங்கத்தின் சமூகம் மதம்

மற்றும் அரசியல் நிலைமைகள் அதுபோன்ற ஓர் இயக்கத்தினை உருவாக்கும் ஆற்றல் வாய்ந்தவையாக அமைந்தன. அரசியல் ஒடுக்கு முறைகள், மதச் சம்பிரதாயங்கள், சமூகவிலங்குகள் போன்ற அனைத்து வகைப்பட்ட குழப்பமான நிலைமைகளினால் வங்கநாடு பாதிக்கப்பட்டு வந்தது. எனவே இது குறித்த சூழலில் பின்னணி மிகவும் முக்கியமாகிறது.

சைதன்யரின் வாழ்க்கை இதற்கு நிகரான ஆவலைத் தூண்டுவதாக உள்ளது. புலமை நிரம்பிய கற்றறிவாளர் நிலையிலிருந்து திருமாலின் அவதாரமாக மாறியது சுவாரசியமானது. மேலும் நவத்வீபா என்னும் இடத்தில் இருந்த அவருடைய தோழர்கள் அவரது நிலைமாற்றத்தை உருவாக்குவதில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தினர். எனவே சமயச் சார்பற்ற போக்கினை அறிய அவரது தொடக்க கால வாழ்க்கை மற்றும் படிப்படியான அடிப்படை மாற்றம் குறித்தவற்றை முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் அவருடைய நெருங்கிய தோழர்களின் பங்களிப்பினையும் மதிப்பீடு செய்ய வேண்டும். அவருடைய நெருங்கிய தோழர்களும் அவரைப் பின்பற்றியவர்களும் (சைதன்யரை) தெய்வத் தன்மையுள்ளவராக்கும் பணியில் ஈடுபட்டனர். இவ்வியக்க முன்னேற்றத்திற்குப் பாடுபட்டனர். மேலும் இலக்கியத் துறையிலும் ஏறத்தாழ புதுயுகத்தைத் தொடங்கினர். சைதன்யர் என்ற பெயரில் முழுமையானதும் தன்னிறைவுடையதும் புதுமையானதுமான பின்னணிக் கருத்துக்கோவை கொண்ட இலக்கியம் உருவாகியது. ஒருபுறம் சைதன்யரின் வாழ்வின் பலவகை நிலைகளைப் படமாக்கி வெளிக்கொண்டுவரும் முழுமையான வரலாறு உருவாகியது. மற்றொருபுறம் சைதன்யரது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் சித்தரிக்கின்ற வாழ்க்கை வரலாறுகள் நிறைவு செய்கின்ற முறையிலும், ஒன்றை மற்றது விளக்குகின்ற முறையிலும் இறைப்படைப்புகள், பக்திக்காதல் தத்துவத்தை முறைப்படுத்துவனவாகவும் படைக்கப்பட்டன. இவையனைத்தும் வங்காள வைணவக் கருத்துப் பள்ளியாக முழுமை பெற்று உருப்பெற ஒருங்கிணைந்து உதவின.

இப்புத்தகத்தில் நான் இப்பள்ளியின் அனைத்துச் சிறப்பியல்புகளையும் பொருத்தமாகவும் தெளிவாகவும் விளங்குகிற வகையில் விவாதிக்கப் பெருமுயற்சி எடுத்துள்ளேன்.

இது சைதன்ய இயம் பற்றி அறிய விரும்பும் வாசகருக்கு முழுமையாகப் புரிந்துகொள்ளும் முயற்சி. இதன் முழுமையான உருவாக்கப் படைப்பில் சிக்கலுக்கோ, தற்புகழ்ச்சிக்கோ உரியன ஏதும் இல்லை. எளிமையானதும் பெருந்தகைமைமிக்க ஆளுமை கொண்டதுமான .சைதன்யரின் தனித்தன்மைக்கு அளிக்கும் எளிய உண்மையான புகழாரம். ஒருநிலையில் அவரது தெய்வபக்தி சார்ந்த கருத்து சிக்கலான ஏனைய அனைத்து மெய்யியல் அமைப்பு முறைகளைக் காட்டிலும் மேம்பட்டு இருந்தது.

இதில் அமைந்துள்ள வெவ்வேறு இயல்களின் சுருக்கப்பொழிவு சுருங்கச் சொல்லி விளக்குவதை உணர்த்தும். இந்த ஆய்வு சைதன்யர் பற்றிய சிறிய பொதுக்குறிப்புடன் தொடங்குகிறது. அடுத்து அவரது வாழ்க்கை வரலாறு பற்றிய விரிவான ஆய்வு மூலங்கள் இயன்றவரை குறிப்பிடப் படுகின்றன. அடுத்து இயக்க எழுச்சிக்குச் செயல் ஊக்கமாகிய பின்னணி குறித்த ஆழமான ஆய்வு இடம் பெறுகிறது. இப்பகுதி மிகவும் முக்கியமானது. ஆய்வுரையில் சமூக மத அரசியல் நிலைமைகள் போன்ற அனைத்து அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. சைதன்யரின் வாழ்க்கை சரித்திரம் தொடரும் அத்தியாயத்தில் தெளிவாக எடுத்து உரைக்கப் பெறுகிறது. இப்பகுதியில் அவரது வாழ்வின் முக்கிய நிகழ்ச்சி, திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்வு முதலியன விடுபடாமல் குறிப்பிடப்பட்டுள்ளன. அவரது இறப்பு பற்றிய மாறுபட்ட கருத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. இது சம்பந்தமாகப் பல வேறுபாடான முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த அத்தியாயத்தைத் தெளிவாக்குவதற்கு இயன்ற அளவில் அண்மைக்கால ஆய்வுகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

சைதன்யரின் வாழ்க்கை ஆன்மீகத் தன்னொளி ஊட்டும் தன்மை வாய்ந்தது. ஆனால் ஆக்கப்பூர்வமான அல்லது முறைப்படுத்திய மதமான ஒரு சிந்தனைப்பள்ளியை நிறுவ அவர் ஏதும் செய்யவில்லை. அத்தருணத்தில் அதுபோன்ற ஓர் இயக்கத்தை ஆவலுடன் மக்கள் எதிர்பார்த்தனர். எனவே நவத்வீபா சங்க உறுப்பினர்களும் பிருந்தாவனச் சீடர்களும் வைணவவிய சிந்தனைப் பள்ளி நிறுவுவதற்குத் தொடக்க முயற்சிகளை மேற்கொண்டனர். இவ்வியக்கத்தின் தலையாய சிற்பிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்த தகுதியுடையவர் ஆவர்.

எனவே அத்வைதம் மற்றும் நித்யானந்தரின் பங்கு தொடர்பான ஒரு சிறு மதிப்பீடு தொடர்கிறது. ஆதலால் இதன் இறையியல் மற்றும் மெய்யியல் அம்சங்களை நிறுவ ஏற்றதொரு உள்ளார்ந்த வாய்பாட்டைக் கண்டறிவதற்கு அவருடைய பிருந்தாவனச் சீடர்கள் அரும்பாடுபட வேண்டியிருந்தது. இவ்வாறு கௌடிய வைணவ இயம் குறிப்பிட்டதொரு நிறுவனரால் வரலாற்று மதமாக வெளிப்படையாக பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் அதன் திட்டவட்டமான அமைப்பு முறைக்ளும் செயல்பாடுகளும் பிருந்தாவன கோஸ்சுவாமிகளால் நடைமுறைக்கு வந்தது. தற்கால பிருந்தாவனம் முதன்மையான அறிவாற்றல் மிக்க சமய மையமாகக் கட்டியெழுப்புவது அவர்கள் தேவையாயிற்று. ஏனெனில் அங்குதான் மெய்யியல், இறையியல், சடங்கியல், அழகியல் போன்றவை நடைமுறையாக்கப்பட்டன. சைதன்யரின் போதனைகளும் சைதன்யவியத்தின் மெய்யியல்களும் அடுத்து வரும் இயல்களில் இடம்பெறுகின்றன.

பற்றுறுதி என்பது அன்பு அல்லது பிரேமை என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டது. அதன் வேர்கள் பாகவதத்தின் இராதாகிருஷ்ண லீலைகளில் (இராதை மற்றும் கிருஷ்ணரின் தெய்வத் திருவிளையாட்டு) அமைந்துள்ளன. இது குறித்த நுட்பமான கொள்கை சுருக்கமான விவரம் இங்கு குறிப்பிடப்படுகிறது.

சைதன்யவியத்தின் முக்கிய பங்களிப்பு ஒருவேளை பக்திச்சுவை அல்லது உணர்வு பூர்வ வழிபாடாக இருக்கலாம். கவிதையியலில் அறிவியல் எல்லையளவுக்கு முழுமையான உணர்ச்சிக் கனிவைப் பெறுமளவுக்கு ஓர் உணர்வுத் தகுதியை ஆறு கோஸ்சுவாமிகளும் உயர்த்தியுள்ளனர். சமயவழிபாட்டு உணர்வு இரசக்கோட்பாட்டின் அமைப்புக்குப் பொருந்துமாறு தகவமைக்கப்பட்டுள்ளது. இறுதி அத்தியாயத்தில் சைதன்யரின் பங்களிப்பு தொகுக்கப்பட்டுள்ளது இயன்றவரை அவர்மீது செல்வாக்கு ஏற்படுத்திய அனைத்து கோணங்களும் சேர்த்தே தொகுக்கப்பட்டுள்ளன.

வெகுசன அளவில் இதுபோல அனைத்தையும் தழுவிய தகுதியான நூல் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. பெருந்தகைமைமிக்க அவரது ஆளுமை, சமய, சமூக இலக்கியத்

தளங்களின் மீது ஏற்படுத்திய தாக்கத்தைச் சுருக்கமாக படைப்பதில் நான் மேற்கொண்ட உண்மையான முயற்சியைத் திறனாய்வாளர்கள் பாராட்டுவர் என்பது எனது நம்பிக்கை.

இதனைக் கூடிய விரைவில் வெளியிட அரும்பாடுபட்டு உதவிய சாகித்திய அக்காதெமி அதிகாரிகளுக்கு நன்றி உடையவன். ஆவேன். தோழர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் சிலரிடமிருந்தும் பெற்ற ஒப்பற்ற சேவையையும் உதவியையும் இங்கு பதிவு செய்யாவிடில் நான் கடமை தவறியவனாவேன்.

எனது சிறப்பான நன்றியை என் மனைவி திருமதி. ஜார்னா சாட்டர்ஜிக்கு உரித்தாக்குகிறேன். இந்நூல் இயன்றவரையில் முழுமைமிக்கதாக வெளிவர அனைத்து ஆர்வத்தையும் அவரே எனக்கு நல்கினார்.

எனது பேத்தி டோயா எல்லா நேரங்களிலும் எனக்கு உற்சாகமூட்டியுள்ளார். அவர் எனது முழுமையான பாராட்டுதல்களுக்கு உரியவர்.

அசோக் சாட்டர்ஜி சாஸ்திரி

சமஸ்கிருதத்துறை
கல்கத்தா பல்கலைக்கழகம்
14-4-88

உள்ளே

முகவுரை

வங்கநாடு மற்றும் இந்திய வரலாற்றில் புது யுகத்தை உருவாக்குவதில் சான்றாகத் திகழ்பவர் மக்களால் பிரபலமாக அறியப்பட்டவரான "மகாபிரபு" (உயர்ந்த அல்லது மேலான இறைவன்) என்கிற சைதன்யரின் எழுச்சி அமைந்துள்ளது. இந்திய மறுமலர்ச்சிக்கு முன்னோடி என அவரைக் குறிப்பிடலாம். ஏனெனில் அவர், தம் சம காலத்தில் வாழ்ந்தவர்களின் எதிர்வினையைப் பெரும்பாலோரின் உள்ளத்தின் நினைவு ஆழத்திலிருந்து வெளிவரச் செய்தவர். அத்தகையோர் அவரவர் துறைகளில் குறிப்பிடத்தக்கவராயிருந்தனர். அவருடைய சீடர்களில் பெரும்பாலோர் ஆன்மீக எழுச்சி மூலமாக தம் வாழ்க்கை பாணியை அடியோடு மாற்றிக் கொண்டு புலன் கடந்த ஞானச் சிகரங்களை எட்டிப் பிடித்தனர். நிமாய் (அவரது செல்லப் பெயர்) இந்த உடல் அமைப்பினை வங்காளியரின் அமிழ்தம் போன்ற இதயங்களிலிருந்து பெற்றார் என யாப்பிலக்கணப் புலவர் அவரைப் பற்றிக் கூறுவது உண்மையே.

அடர்த்தியான அமிழ்தத்தின் சான்றாகச் (வங்காளத்தின் நல்லவை அனைத்தின் மொத்தம்) சைதன்யர் அனைத்து வங்க மக்களின் இதயங்களிலிருந்து தோன்றியுள்ளாரோ என எண்ணத் தோன்றுகிறது. நிரம்பி வழிகிற சைதன்யரது தாக்கம், வைணவ இயக்கத்தின் வளர்ச்சி ஆகியன கிட்டத்தட்ட மூன்று நூற்றாண்டுகள் தொடர்ந்து நீடித்த நெடுங்காலத்தினைக் கொண்டது. (கி.பி. 16ஆம் நூற்றாண்டில் துவங்கி கி.பி. 18ஆம் நூற்றாண்டுவரை) அக்காலக்கட்டம் வங்காள நாட்டில் வேறுபட்ட வெளிப்பாடுகளுக்குக் காரணமாக அமைந்தது. வங்க நாட்டின் சமுதாயம் மற்றும் இலக்கியத்தில் எல்லாவித தாக்கங்களும் கொண்ட தனியொரு ஆளுமை கொண்ட மனிதரைக் காண்பது அரிது. மனித சமூகம் சில நேரங்களில் மகத்தான மனிதர்களின் பிறப்பினை எதிர்கொண்டு இருக்கிறது. அத்தனி மனிதரின் பிறப்பு நிகழ்வு வேறுபட்ட கருத்துக்களின் இருண்ட மேக மூட்டத்தின் இறுகிப்போன எண்ணங்கள் நிலைபெற்ற காலத்தில் நேரிட்டது. அதேபோன்று சைதன்யரின் தோற்றம் பழமையாகி நீர்த்துப்போன மதிப்புகளில் வேரோட்டமான மாற்றத்தினை ஏற்படுத்தியது. மனிதத்தை நிலை

நிறுத்தும் முறையில் உருவாகியது. அவர் மனித நேயக் கோட்பாட்டின் பிரச்சாரகராகவோ, போதகராகவோ இருக்கவில்லை. ஐரோப்பியப் பாணியில் அது மனித நேயக் கோட்பாடு அல்லது சமூக சீர்திருத்தம் என அழைக்கப்படுகிறது. ஆனால் சமுதாயத்தின் அடிமட்டத்தில் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் தீண்டத்தகாத மக்கள் சைதன்யரின் காலத்திற்குப் பிறகு ஓரளவு மரியாதைக்குரிய நிலையினை எய்தினர். அதற்குக் காரணம் அழகு நலம் மிக்க ஆணையுரிமைச் செல்வாக்கு நிறைந்த வருமான பெருமான் சைதன்யரே ஆகும். அவர் அந்தணருக்குரிய சம்பிரதாயங்களுக்கு எதிராக இயங்காதபோதிலும் அந்தணர் அல்லாத ஏனைய வைணவ ஆசான்கள் அப்பெருமகனாரது மறைவிற்குப் பிறகு எல்லா இடங்களிலும் அந்தணர் போலவே கௌரவிக்கப்பட்டனர். அப்பெருமகனார் ஏற்படுத்திய தாக்கத்தாலன்றி அக்கால வங்கச் சமுதாயத்தில் அவ்வாறு நிகழ்வது முற்றிலும் இல்லாத ஒன்றாகும். தாந்திரிக சக்கரத்தில் சாதித்தளை இல்லாதபோதிலும் சமூக வழக்காறுகளில் அந்தணர்கள் வர்க்கப் பாகுபாட்டு முறையைக் கண்டிப்பாகக் கடைபிடித்தனர். அந்தணர் மற்றும் அந்தணர் அல்லாதார் சார்ந்த வர்க்கப் பாகுபாடு பாலா ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு நிலைநிறுத்தப்பட்டது. மேலும் அவ்வர்க்கப் பாகுபாட்டு முறையானது கவனமாக சட்டப் புத்தகங்கள் மூலமாக (வேதசாத்திரங்கள், ஸ்மிருதி சாத்திரங்கள்) முறைபடுத்தப்பட்டு பேணி வளர்க்கப்பட்டது. சைதன்யர் காலத்தில் அம்முறை வேரோட்டமான மாற்றங்களுக்கு எதிராக நின்றது. சைதன்யரின் புரட்சிகரமான தனித்தன்மை ஏற்படுத்திய மாறுதலுக்கேற்ப வைணவ கோஸ்வாமின்கள் (ஆசான்கள்) அவர்களுக்கே உரிய தனி வழியில் முழுவதும் திறமையான வகையில் வேத சாத்திரங்களை (ஸ்மிருதி சாத்திரங்களை) இயற்றினர். இவை, அந்தணருக்கும் அந்தணர் அல்லாதாருக்கும் இடையே உறுதியாக கட்டப்பட்டு ஆழ்ந்த அடித்தளம் கொண்டு இருந்த சுவரில் மிகப் பெரிய அளவில் உடைப்பு ஏற்படுத்திய பிளவினை உருவாக்க உதவின. இவ்வாறாக சைதன்ய மகாபிரபுவின் விரிவான பயணத்தின் செயல் விளைவு காரணமாகவே பழமையான சமூகத்தில் ஒருபுறம் புதிய கருத்துக்கள் அலைமோதின. மறுபுறம் அக்கால வங்கத்தின் புவியியல் குறுகிய தன்மை படிப்படியாக மறைந்தது. இப்பரந்த மனப்பான்மைக்கான காரணம் வங்க நாட்டினை முகலாயர் ஆட்சியுடன் இணைத்ததன் பின்

விளைாவகும் என்பது வரலாற்று ஆசிரியர்கள் கருத்து: ஆனால் முகலாய ஆட்சியின் ஐம்பது ஆண்டுகட்கு முன்பாகவே சைதன்யரும் அவரைச் சார்ந்தவுர்களும் தெற்கு மேற்கு வட இந்தியாவில் தலயாத்திரை மேற்கொண்டனர். வங்கநாட்டு நிர்வாகம் அக்பரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் ஏனைய பகுதிகளுடன் தொடர்பு கொண்டு இருந்தது. இருந்த போதிலும் நெடுநாட்களாகவே வைணவத்தில் நம்பிக்கை கொண்ட வங்கநாட்டு மதகுருமார்கள் இந்திய கலாச்சாரத்தின் கருத்தியல் கோட்பாடுகளை மேற்கொண்டு இருந்தனர். இதன் விளைவாக நீலகலா (அதாவது பூரி) பிருந்தாவனம், மதுரா போன்றவை முக்கியமாக வங்க நாட்டு தீர்த்த 'யாத்திரைப் பகுதிகளாக மாறின. எனவே, வங்கநாட்டில் உருவான சைதன்யரின் தாக்கமானது மதத்தின் மீது மட்டுமல்லாது பெரிய சமுதாய கலாசார கோணத்திலும் அமைந்தது இதனை இறைவனின் திருவருள் என்று கொள்ளலாம். வைணவ இயம் நம்மிடையே ஆழ் மனத்திலிருந்து மனித நேயம் சார்ந்த முற்போக்கு எண்ணங்களைக் கொண்டு வந்தது என்பதை மறுக்காமல் ஒத்துக்கொள்ள வேண்டும். ஆனால் நம்மால் நடைமுறை வாழ்வில் சைதன்யர் போல திறமையாக செயல்பட இயலாது. ஆனால் சைதன்யரின் வாழ்க்கையானது வங்கநாடு முழுமைக்கும் மின்சாரத்தை ஒத்த தாக்கத்தினை ஏற்படுத்தியதோ என எண்ணத் தோன்றுகிறது.

சரியாக ஐநூறு ஆண்டுகட்கு முன்பு ஸ்ரீசைதன்யர் அவரது தெய்வீகமான உறையுளில் இருந்து நம்மிடம் வந்து அவதரித்தார். பிறகு சாதி, சமயம், இனம், பணக்காரன், ஏழை என்ற பாகுபாட்டைப் பொருட்படுத்தாது தெய்வீக ஒருமைப் பாட்டினை நிறுவினார். அவர் தெய்வமாகத் திகழ்ந்தார். ஆனால் மாறுவேடத்தில் தெய்வத்தின் அன்பராகத் திகழ்ந்தார். அவர் தெய்வத்திடம் பூரண உள்ளத்தோடு அன்பு செலுத்தினார். ஒவ்வொரு உயிர் இனத்திலும் இறைஒளியினை உண்மையாகக் கண்டு உணர்ந்தார். அவரிடம் இரு கைகளே இருந்தபோதிலும் தனது அன்பான அரவணைப்பினால் உலகில் உள்ள அனைத்து மக்களையும் ஒருங்கிணைத்து சமூக ஒற்றுமையினை ஏற்படுத்தினார்.

சைதன்யரின் வருகைக்கு முன்பாக இறை அன்பு என்பது அகராதிகளில் மட்டுமே காணப்படும் சொல்லாக இருந்தது. ஆனால் மனித இன வரலாற்றில் இது தெளிவாக புலன்களால்

உணரக்கூடிய மேம்பாடுடன் கூடிய ஒன்றாகத் திகழ்ந்தது. இது சைதன்யரின் தனித் தன்மை ஆகும். சைதன்யரின் அன்பு கலந்த தனித்தன்மை மனிதர்களை மட்டுமல்லாது எப்பொழுது எல்லாம் அவர் கொடிய வனவிலங்குகளைக் கடந்து சென்றாரோ அவை கருத்தூன்றிய பார்வையினை அவர்மீது செலுத்தியபோதும் அவற்றைக் கவரும் வண்ணம் அமைந்திருந்தது. இன்பநிறை உடைய அவரது உடல் உதய சூரியனைப்போல ஒளிவீசும் கிடங்காகத் திகழ்ந்தது. அதேநேரத்தில் அவரது உடல் விண்மண்டலத்துச் சந்திர ஒளி போல இன்னல்கள் நீக்கி ஆறுதல் தருவதுபோல அமைந்தது. அந்த அமைதிப்படுத்தும் தன்மை கொண்டச் சுடர் ஒளி அவரது உடலை செம்மையாக்கியது. அச்சிவந்த மேனி உருக்கி வார்க்கப்பட்டத் தங்கத்தினை ஒத்திருந்தது. அனைத்து எதிர்நிலைப் பண்புகளும் அவரிடம் நம்பவைக்கும் ஆற்றல் உடையதாகவும், ஒருமுகப்படுத்தும் தன்மைகளை உடையதாகவும் விளங்கின. எனவே ஒருவராலும் அவரது உள்ளத்து அறிவின் அகல ஆழத்தினை அளவீடு செய்ய முடியவில்லை. அவர் சிறு குழந்தை போன்று மென்மையானவர். அடக்க ஒடுக்கமானவர். இருந்தபோதிலும் வஜ்ராயுதம்போன்று கடுமையானவர். அவரது ஆழ்ந்த ஞானமும் எளிமையான நடவடிக்கையும் ஒரே நேரத்தில் திகைப்பை ஏற்படுத்தின. அவரது கருணை அளவிடமுடியாத ஒன்று. அது வாழ்க்கையில் எந்த நிலையிலும் உள்ள ஒவ்வொருவரையும் சாதி, நிறம், இனப் பாகுபாடு இன்றி தழுவிக் கொண்டது. அவர் சிறிதளவு அநியாயத்தையும் சகித்துக் கொள்ள மாட்டார். இருப்பினும் பாவிகளிடம் அவரது இரக்க உணர்ச்சி பின்பற்றக் தகுந்த வண்ணம் அமைந்து இருந்தது.

அனைத்து மக்களிடமும் அவர் உண்மையான அன்பினை வெளிப்படுத்தினார். இருப்பினும் தெய்வநிலைக்கு உரிய முடிவினை உணரும்பொருட்டு அவர் தமக்கு நெருங்கிய ஒவ்வொருவரையும் துறந்தார். அவரிடம் உண்மையான தெய்வத்தன்மை இம்மைக்குரிய களங்கம் படிந்த தளத்தில் இறங்கி வந்து அருள் செய்தது. ஆனால் அவரது தத்துவம் கடந்தநிலை அனைத்து அழுக்குகளையும் கடந்து இணையற்றதாகத் திகழ்ந்தது. அவர் நம்மில் ஒருவராக இருந்தார். ஆனால் இயல் நிலையினைக் கடந்தவர். எனவே நம்மில் ஒருவராக இல்லை. அனைத்து உயிரினங்களையும் அவர் தமது இணையற்ற தனித்தன்மை மூலமாக வசப்படுத்தினார். பின் கடவுட் பற்றினைத் தழுவி ஓர் உயர் இறை அன்பில் ஈடுபடுத்தினார்.

சைதன்யரின் வாழ்க்கை வரலாற்று ஆதாரங்கள்

வங்கநாட்டு இடைநிலை கால வரலாற்றில் சைதன்யரது வருகை பொதுவாக மறுமலர்ச்சியின் உதயம் எனக் கருதப் படுகிறது. வங்காள, மொழி இலக்கியத்தில் அம்மறுமலர்ச்சியின் பிரதிபலிப்பும் உணர்வு நிலையின் திடீர் வெளிப்பாடும் தடங்காணா ஆழத்தில் காணப்படுகின்றன. தன்னிலை மறந்த இத்துறவியின் நிலையினை வங்கமொழி இலக்கியத்தின் பார்வையில் மதிப்பீடு செய்யலாம். அதன்மூலம் பக்தி சம்பந்தப்பட்ட அவரது நிலை இணையற்ற அவரது வாழ்வு மூலமாக வியக்கத்தக்க வகையில் வளமூட்டப்பட்டுள்ளது என அறியலாம். எனவே சைதன்யர் ஆங்கில மற்றும் வங்காள் மொழி இலக்கியங்களுக்கு முற்பட்ட காலத்தினை உடைய சிறந்த சிற்பியாகக் கருதப்படுகிறார். அவர் ஒரு வரி கூட இயற்றவில்லை. சைதன்யரின் வாழ்க்கை வரலாறு கவிதை வடிவில் எழுதப் பட்டுள்ளது. அதில் அவர் இயல்நிலையினை கடந்தவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். இயற்கைக்கு அப்பாற்பட்டவராக இயம்பப்பட்டுள்ளார். கிருஷ்ணரின் அவதாரமாக, கவர்ச்சியாகச் சொல்லப்பட்டுள்ளார். இருந்தபோதிலும் அது ஒரு சாதாரண மனிதரின் வாழ்க்கை வரலாறாகும். அவ்வரலாறு இம்மைக்குரிய மனித உணர்வுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் அது மிகவும் சலிப்பு அடைந்த ஏழையின் கண்ணீர் ஊற்றைக் கொண்டது. நமக்கு வைணவ இய இயக்கத்தின் தோற்ற வளர்ச்சி சம்பந்தப்பட்ட விலைமதிப்பற்ற வரலாற்றுச் சான்றுகள் கெளடாவில் முக்கியமாக நவத்வீபா சாந்திப்பூர், கர்நாடகா, நீலக்கலா மற்றும் விரஜ மண்டலா ஆகிய இடங்களில் கிடைக்கும். இவ்வாறாக வங்க நாட்டின் இடைக்காலத்து சமூக வரலாறு பற்றிய விலைமதிக்க முடியாத வழிகாட்டும் தொடர்புகளை அவை நமக்கு அளிக்கின்றன. இருந்தபோதிலும் நாம் அம்மாமனிதனின் முழு வாழ்க்கை பற்றிய மூல ஆதாரச் செய்திகள் எங்கிருந்து திரட்டப்பட்டன என்பதில் கவனம் செலுத்துகிறோம். ஆனால் வரலாற்றுச் சான்றுகளில் விரிவான கவனத்தைச் செலுத்தவில்லை.

சைதன்யரின் மறைவிற்குப் பிறகு அன்னாரின் பெருவாழ்வு பற்றிய சில புத்தகங்கள் வடமொழி மற்றும் வங்காளம் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப்பட்டன. வடமொழியில் இயற்றப் பட்ட புத்தகங்களில் முராரி குப்தா அவர்கள் எழுதிய 'ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய சரிதாம்ருதம்' மற்றும் கவி கர்ணபுரா அவர்கள் இயற்றிய 'சைதன்ய சரிதாம்ருதா' மற்றும் 'சைதன்ய சந்திரோதயா' முதலியன குறிப்பிடத்தக்கவை.

முராரிகுப்தா எழுதிய புத்தகத்தில் நம்பத்தக்க நிலையில் தனிச் சிறப்புப் பண்புகள் காணப்படுகின்றன. அவர் தாமாகவே இறைவனுடன் தொடர்பு கொண்டவர். நவத்வீபத்தில் சைதன்யரின் இறை விளையாட்டுக்களைக் (லீலை) கண்டுகளித்து இருக்கிறார். இக்காரணத்திற்காகவே கவிகர்ணபுரா, தாமோதர பண்டிதர், ஜெயானந்தர், லோசனதாசர், பிருந்தாவனதாசர் மேலும் கிருஷ்ணதாச கவிராஜர் போன்றோர் சைதன்யர் ஈடுபட்ட தெய்வத் தன்மை சம்பந்தப்பட்ட உரையில் முராரிராவ் எழுதிய புத்தகத்தைப் பெரும்பாலும் அதிகாரப்பூர்வமானதாகக் கருதினர். இப்புத்தகத்தில் சைதன்யரின் வாழ்க்கை வரலாறு மற்றும் நவத்வீபத்தில் நிகழ்த்திய இறைலீலைகள் பற்றிய கதை மிகச் சாதாரணமாகவும், கவர்ச்சிகரமாகவும் விரித்துரைக்கப் பட்டுள்ளது. கவிகர்ணபுராவின் புத்தகம் பற்றித் தனியே குறிப்பிடும்படி இல்லை. இப்புத்தகத்தில் சில கவிதை சார்ந்த இயற்கை மீறல்கள் மற்றும் தற்பெருமைச் செய்திகள் நிகழ்ந்துள்ளன. அவற்றைத் தவிர்த்து நோக்கினால் கவிஞரின் இரசதத்துவம் மற்றும் வைணவ இயத்தின் ஆழ்ந்த நுண்ணறிவுத் திறனை இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது.

வங்காள மொழியில் எழுதப்பட்டுள்ள சைதன்யரின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களில் பிருந்தாவனதாஸர் எழுதிய 'சைதன்ய பாகவதம்' என்ற நூலை முதன்மையாகக் குறிப்பிடலாம். இக்கலைப்படைப்பின் காலம் கி.பி. 1533 எனக் கருதப்படுகிறது. (சைதன்யரின் முக்கிய சீடர்களின் ஒருவர்) நித்யாநந்தரின் அகத்தூண்டுதல் காரணமாக பிருந்தாவனதாஸர் இதனை இயற்றினார் எனக் கருதப்படுகிறது. அவரது கலைப்படைப்பு இன்றும் அங்கு உயிர் வாழ்கின்ற இறைவனின் நேரடிச் சீடர்கள் தந்த தகவல்களை முக்கிய ஆதாரமாகக் கொண்டவை. அக்கலைப்படைப்பில் எந்தவிதமான கவிதைக் கட்டுமானமும்

இல்லை. ஆனால் அது ஸ்ரீமத் பகவத்கீதையின் நடையினையும் அமைப்பையும் முன்மாதிரியாகக் கொண்டது. ஏனெனில் கவிஞரின் கண்களில் சைதன்யராகத் தோன்றியவர் புதிய பதிப்பில் ஸ்ரீகிருஷ்ணராகக் காட்சியளித்தார். இதில் நித்யானந்தருக்கு அளவு கடந்த முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. ஏனெனில் அவர் கவிஞரின் ஆசானாகத் திகழ்ந்தார். தெளிவான நடை இக்கலைப்படைப்பின் முக்கிய சிறப்பியல்பு ஆகும். சாதாரண மற்றும் கவர்ச்சியான நடையில் சைதன்யரின் ஆரம்பகால வாழ்க்கை தெளிவாக்கப்பட்டுள்ளது. அனைத்து சிறுபிள்ளைத் தனமான ஒப்பனைகளுடன் அவர் நிமாயாகப் பிரதிநிதித்துவம் பெற்று இருக்கிறார். மேலும் 'சைதன்ய பாகவதமானது' வங்க நாட்டு வரலாற்றின் இடைக்காலத்து சமூகச் செய்திக் கோவையினை உயர்ந்த வகையில் எடுத்துக் கூறுகிறது. மனித ஆர்வத்தை மிக நேர்த்தியாகக் கூறுவது இக்கலைப் படைப்பின் சிறப்பு ஆகும். எனவே, இப்படைப்பு இயற்கையாகவும் உண்மையாகவும் விளங்குகிறது.

காலவரிசை சார்ந்த நிலையில் நோக்கும் பொழுது லோசனதாசர் அவர்கள் இயற்றிய 'சைதன்யமங்களம்' சைதன்யரின் வாழ்க்கைத் தொடர்பு பற்றிய இரண்டாவது படைப்பாக அமைகிறது. இப்படைப்பு இதே தலைப்பு கொண்ட ஜெயநந்தரின் படைப்பிலிருந்து மாறுபடுகிறது. ஜெயநந்தரின் படைப்பு பிற்பட்ட காலத்தில் இயற்றப்பட்டது என்பது தெளிவு. பிருந்தாவனதாசரின் படைப்புகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது இப்புத்தகம் சைதன்யரின் வாழ்வைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது ஆனால் இது ஒரு மக்கள் பாராட்டுக்குரிய படைப்பாகும். இப்படைப்பு சீடர்களால் பங்காளிகள் வழியில் பெரும்பாலும் மங்கள காவியங்களாக படிக்கப்பட்டும், பாடப்பட்டும் வந்தது. ஒரு குறிப்பிட்ட கௌடிய வைணவ இயப்பள்ளியின் செய்திகளையும் அதன் முன்னோர்களையும் விரிவுபட எடுத்துக் காட்டுவதில் இதன் முக்கியத்துவம் அமைந்து உள்ளது. கலைநுட்ப ரீதியில் இதனைக் 'கௌரானகாரவாதம்' எனக் கருதலாம். இருந்தாலும், இப்படைப்பில் கூறப்பட்டுள்ள சரித்திரச் சான்றுகள் புறக்கணிக்கத்தக்கன ஆகும்

ஜெயநந்தரின் 'சைதன்ய மங்களம்', சைதன்யர் உண்மையில் தங்கியிருந்த இடங்கள் பற்றிய செய்திகளை முற்றிலும் மாறுபட்ட

நவீன முறையில் தெரிவு செய்கிறது. இப்புத்தகத்தில் பல உண்மைக்குப் புறம்பான செய்திகள் இடம் பெற்றுள்ளன இப்புத்தகம் திட்டவட்டமாக தெளிவாக்குவது யாதெனில் சைதன்யர் மெத்தப்படித்த உயர் குடிப்பாளர் குடும்பத்தில் அவதரித்தார். ஜெய்ப்பூர் நகரைச் சார்ந்த ஓரிய அந்தணர்; ஓரிய அரசரிடம் அவருக்குக் கருத்து மாறுபாடு ஏற்பட்டது. எனவே, ஸ்ரீஹட்டா (தற்சமயம் பங்களாதேஷில் உள்ள சில்ஹட்) எனும் பகுதிக்குத் தாமே இடம் பெயர்ந்தார். இப்படைப்பு சைதன்யரின் மறைவு குறித்துப் புதிய செய்தியை வெளிப்படுத்துகிறது. அதற்குத் தகுந்த ஆதாரங்கள் கிடைக்காததால் அதனைத் தவிர்த்து விடலாம்.

கிருஷ்ணதாச கவிராஜர் இயற்றிய 'சைதன்ய சரிதாம்ருதம்', சைதன்யரின் வாழ்வினை எடுத்து இயம்பும் அனைத்து படைப்புகளிலும் ஒரு தனித்தன்மை வாய்ந்த கலைப்படைப்பாகும். வங்கநாட்டு வரலாற்று இடைக்காலத்திய பூரண வங்காள இலக்கியத்தின் குறிப்பிட்ட சிறந்த படைப்பாக நாம் கருதுவோமேயானால் அவ்வகையில் 'சைதன்ய சரிதாம்ருதம்' முதன்மையானதாக அமையும். அப்படைப்பு தத்துவம், வரலாறு மற்றும் கவிதை சார்ந்த கூட்டு அமைப்பின் தனித்தன்மை வாய்ந்த ஒருங்கிணைப்பு ஆகும். வங்க வரலாற்று இடைக்காலத்திய வேறு எந்த படைப்பும் இப்புத்தகத்திற்கு ஈடாக அமையவில்லை. அதற்குக் காரணம் இப்படைப்பின் பூர்வாங்க வாசகத்தின் மேன்மை, இயல்பு நடை. தெளிவான சொற்றொடர்கள், உண்மையான பக்தியில் தொடர்புடைய வழிமுறைகள் முதலியன ஆகும். இது வைணவர்களுக்கான உண்மையான படைப்பு. கிருஷ்ணதாச கவிராஜருடைய படைப்பு கவிதை சார்ந்த இயற்கை மீறல்களை கொண்டது; இயல்பு கடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டது; மனிதநேய மூலக்கூறுகளை ஆங்காங்கே வெளிப் படுத்துகிறது. வைணவர்கட்குச் 'சைதன்ய சரிதாம்ருதம்' ஒருவிலை மதிப்பற்ற படைப்பாகத் திகழ்ந்தபோதிலும் அது சைதன்யரின் வாழ்வினை முக்கிய நோக்கமாகக் கொள்ளாது தெளிவான விரிவான போற்றத்தக்க இறையன்பு தொடர்பு கொண்டதாக அமைந்துள்ளது. மேலும் சைதன்யரின் வாழ்வே மனித உருதாங்கிய அவதாரமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. வைணவத்தின் மறைபொருள் தத்துவம் சூத்திர வாய்ப்பாட்டு வழியில் விஞ்ஞான ரீதியில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக

வங்கத்தின் இடைக்காலத்திய சமூகம் மற்றும் கலாச்சார பலதரப்பட்ட செய்திகளைத் தரும் இணையற்ற முடிவு இல்லாத சுரங்கமாக இது திகழ்கிறது. பக்தனின் கண்ணோட்டத்தில் இந்நூலின் மதிப்பு எத்தகையதாக அமைந்தபோதிலும், இம்மிகப் பெரிய படைப்பு கவிதையாகாது என்பது வங்க மொழி இலக்கியத்தில் இந்நூலினை மதிப்பீடு செய்யும்பொழுது உணரலாம். இப்படைப்பு சாஸ்திரீய அறிவு, மரபுவழிப் புலமை, காமவெறி பாவனை, எளிய கலைநுட்பம், அகத்தூண்டுதலற்ற கூர்மதி ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. பொதுவாகக் கூறின் இதில் உண்மை ஏதும் இல்லை.

கோவிந்ததாசர் இயற்றிய 'கட்சா' சைதன்யரின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்பு கொண்ட மற்றொரு படைப்பு ஆகும். இப்படைப்பின் நம்பத்தக்க நிலை மற்றும் பழமை குறித்து திறனாய்வாளர்கள் பெரிதும் கருத்து மாறுபடுகின்றனர். 'கட்சா' காலத்தால் பிற்பட்ட படைப்பு எனத் தெளிவாக வாதாடப் பட்டுள்ளது. வங்காள மொழியில் 'கட்சா' என்பதன் பொருள் நாட்குறிப்பு என ஈண்டு நோக்கத்தக்கது. வங்க நாட்டைச் சார்ந்த வைணவச் சீடர்கள், இப்படைப்பில் கூறப்பட்டுள்ள தன்னியல்பு நிகழ்ச்சிகளைச் சந்தேகித்தனர் எனினும் சில செய்திகளை நாம் கருத்தில் கொள்ளலாம்.

சைதன்ய வெளிப்பாட்டுப் பின்னணி

அன்பின் தத்துவ சக்தியைத் தெளிவாக்குவதற்கு இம்மண்ணுலகில் சைதன்யர் அவதரித்த காலத்தினை அறிய வேண்டும். இந்தியாவில் முகம்மதியர்கள் ஆட்சிக் காலத்தில் வங்க நாட்டில் உள்ள நவத்வீபா எனும் பகுதியில் சைதன்யர் அவதரித்தார். அச்சமயம் வங்க நாட்டின் அரசராக ஹுசைன் ஷா என்பவர் இருந்தார். (தற்சமயம் மால்டாவில் உள்ள) ராமகேலி நகரம் தலைநகராக விளங்கியது. சைதன்யரின் வெளிப்பாட்டினை நாம் சரியாக உணர வேண்டுமானால் நாம் சில நூற்றாண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும். அந்நேரத்தில் வங்கநாட்டு அரசியல் சூழ்நிலை அமைதியற்று இருந்தது. சமூகத்தில் வீழ்ச்சி துவங்கும் பொழுது, அடிப்படை கூறுகள் அழியும் பொழுது மிகப் பழமை வாய்ந்த இறந்த காலத்தில் வீழ்ச்சிக்கான ஆதாரங்களை தேட வேண்டியுள்ளது. வல்லவசேனரின் மறைவிற்குப் பிறகு, லஷ்மண சேனர் வங்க நாட்டில் அரியணை ஏறினார். அவர் அரசாண்ட காலம் பற்றி வரலாற்று வல்லுநர்களிடம் கருத்து மாறுபாடு உள்ளது. கி.பி.1069-இல் லஷ்மண சேனர் கௌட தேசத்து மன்னரானார். இது பெரும்பாலும் கிடைக்கப்பெற்ற சான்றுகள் மூலம் அறியப் படுகிறது. தனிப்பட்ட முறையில் லஷ்மணசேனர் புகழ்மிக்கவராகவும் கற்றறிந்தோரின் காப்பாளராகவும் திகழ்ந்தார். ஆனால் ஓர் அரசனுக்குரிய நிர்வாகச் செயல் திறன் அவரிடம் காணப்படவில்லை. அவரது ஆட்சிக் காலத்தில் வங்க நாட்டிற்கு இஸ்லாமிய மறை ஞானத்தினை போதிப்பதற்கு புகழ்பெற்ற முகம்மதியஃ பகீர் ஷேக் ஜலாலுதீன் தாப்ரீஜீ வந்திருந்தார். அவர் தமது நுண்ணாற்றல் மற்றும் மாய சக்தியின் துணை கொண்டு மக்கள் போற்றும் ரே லெஷ்மானியா என்ற அரசனை அதிகம் கவர்ந்தார். அரசனின் கருணையால் அரச குடும்பத்தினைச் சார்ந்த அறைகளின் உட்புறம் சுலபமாக நுழையும் வாய்ப்பு பெற்றார். அரசுப் பணியில் இருக்கும் அதிகாரம் நிறைந்த அதிகாரிகளின் செல்வாக்கைப் பெற இவ்வாய்ப்பு அவருக்கு பெரிதும் உதவியது. இந்து சமுதாயம் முழுவதும் தனிப்படுத்தப்பட்டது. மேலும் மனமுறிவு நிலையினை எய்தியது. பாலா ஆட்சியில்

பெருமதிப்பிற்குரிய நிலையில் இருந்த புத்தத் துறவிகளும் தலைவர்களும் அவமதிக்கப்பட்டனர். அவர்கள் அவமரியாதை களையும் ஏளனங்களையும் சந்தித்தனர். சமுதாயத்தில் சக்தி வழிபாடு செய்வோர் தங்களின் உயர்நிலை ஆதிக்கத்தைக் காத்துக்கொள்ள பெருமுயற்சி செய்தனர். சமுதாயம் முழுவதையும் அந்தணர்களே ஆதிக்கம் செலுத்தினர். அதற்கு அவர்களால் சுயமாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்மிருதி சாத்திரங்களில் உள்ள சமயவினைகள், சோதிட இலக்கியங்கள், குலகிரந்தங்கள் (உயர் குல மரபு தொடர்பான படைப்புகள்) துணை புரிந்தன. அக்காலம்வரை வைணவர்கள் தோன்றி இருக்கவில்லை. வல்லவ சேனரால் உருவாக்கப்பட்ட 'குலீனதந்திரத்தின்' விரும்பத்தகாத வாதமானது இந்து சமுதாயத்தைப் பிரித்துத் துண்டாக்கிவிட்டது. மதத்திலும் சமுதாயச் சடங்குகளிலும் பரஸ்பரம் வெறுப்பும் குற்றச்சாட்டும் பரவின. 12-ஆம் நூற்றாண்டு கௌட வங்கத்தில் அரசியல் சமூக மத வாழ்வு இல்லை என்பது உண்மை; நிர்வாகத்தில் வீழ்ச்சி முழுமையாக இருந்தது; லஷ்மணசேனரின் இரண்டாவது மனைவி அதிகாரத்தினை விரும்பும் பெண்மணியாக விளங்கினார். மேலும் அரசரின் பெயரில் அரசு ஆணைகளைத் தானே பிரகடனம் செய்தார். இது அரசு அதிகாரிகள் நிர்வாக வேலைகளில் படிப்படியாகப் பரவலாக்குவதற்குப் போதுமானதாக அமைந்தது. இது லஷ்மணசேனரின் அரசவையில் இனப் போராட்டத்திற்கு அடித்தளமாக அமைந்தது. அதே சமயத்தில் மறைந்திருந்த அரச பரம்பரை சார்ந்த நிகழ்ச்சிகள் மக்கள் முன்பு கொண்டுவரப்பட்டன. எனவே, உயர் அரச குடும்பத்தாரின் கண்ணியமானது அழிக்கப்பட்டது. பழிவாங்கப்பட்ட புத்த மதத்தினைச் சார்ந்தவர்கள், வலிய வந்து சண்டை செய்ய இருக்கும் முகம்மதியர்களுக்காக உளவு வேலை பார்த்தனர். சாதிப் பகை, சாதிப் போராட்டம் மற்றும் வல்லவசேன அரசரினால் பாதிக்கப்பட்ட உரிமைகள் சமுதாயத்தினை சீரழித்தன. இதன் விளைவாக நிலமானியம் பெற்றவர்கள் மற்றும் அதிகார மனப்பான்மை கொண்டவர்கள், சேனா அரசர்களின் பூரண அடக்குமுறை நிர்வாகத்தைக் கொண்டு வந்தார்கள். சேனா அரசர்களின் ஆட்சியில் சமுதாயத்து அனைத்து தரப்பினரும் சொல்லொணாத் துயரங்களையும் அநீதிகளையும் அனுபவித்தனர்.

அதன் விளைவாக நவத்வீபத்தில் பக்தியாரின் படையெடுப்பு காரணமாக அந்நியர் ஆட்சி ஏற்பட வழி செய்தது.

சேனா அரசர்குல வீழ்ச்சிக்குப் பிறகு கௌடவங்கா, அதிகாரத்தின்மேல் ஆர்வம் கொண்ட பலதரப்பட்ட அரசர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் எழுச்சியினையும், வீழ்ச்சியினையும் தொடர்ந்து அனுபவித்தது. பல அரசுகளின் ஏற்ற இறக்கங்கள் ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் இருந்தன. நிர்வாகத்தின் நிலையற்ற தன்மை காரணமாக மக்களின் அரசியல் சமூக, பொருளாதார, மத மற்றும் கலாச்சார நிலைமைகள் முழுமையாக வீழ்ச்சி அடைந்தன. சமகால இலக்கியங்களில் எதிர்பாராது நிகழ்கிற முகம்மதியர்களின் அடக்குமுறை நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. பெரும்பாலான இடங்களில் இந்துக் கோயில்கள் பயங்கரமாகத் தகர்க்கப்பட்டன. பெருவாரியான இந்துக் கோயில்களை காலாபாஹாட் என்ற பிரசித்தி பெற்ற இந்து எதிர்ப்பாளன் தரைமட்டமாக்கினான். சமயவெறி கொண்ட இந்து எதிர்ப்பாளர் செய்கைகளால் பாதிக்கப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் பேரரசர் அக்பரின் உதவியினை நாடியதாகத் தெரிய வருகிறது. அச்சமயம் வங்க நாட்டில் ஒழுக்கச் சிதைவு எங்கும் நிலவியது. சேனா அரசர்கள் தங்கள் தாய் நாட்டிலிருந்து (அதாவது கர்னாடகா) ஆடுவதற்கும், பாடுவதற்கும் தகுதியான பெண் ஊழியர்களை (தேவதாசிகள்) இந்து கோயில்களில் நியமிக்கும் மரபினைக் கொண்டு வந்தார்கள். இத்தேவதாசிகள் எந்நேரமும் சிற்றின்ப கேளிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். சமுதாயத்தில் பணக்காரர்களும் செல்வாக்கு நிறைந்தவர்களும் அநீதிச் செய்கைகளில் முழுவதும் மூழ்கினர். ஏறத்தாழ அனைத்துப் பணக்காரர் இல்லங்களிலும் இளவயது வேலைக்காரிகள் இருந்தனர். அவர்கள் அடங்காச் சிற்றின்ப காரியங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டனர்.

கி. பி. 1493-ல் சைதன்யர் பருவ வயதை அடைந்திருந்தபோது ஹுசைன்ஷா கௌட அரியணையில் ஏறினார். வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது வங்காள நாட்டில் ஓரளவு நிலையான அரசியல் ஆட்சி அமைப்பினை ஏற்படுத்திய முதல் ஆட்சியாளர் ஹுசைன்ஷா என்று கூறினால் அது உயர்வு நவிற்சி ஆகாது. எனவே, அந்த அரசர்து பணி குறிப்பிடத்தக்கது. நாம் அறிந்த சமகாலத்துச் சான்றுபடி அரேபிய நாட்டில் உள்ள திருஜ்

சையத் குடும்பத்தில் ஹுசைன் தோன்றினார். அவருடைய தந்தையார் சையத் அஷ்ரப் பிழைப்பிற்காக இந்தியாவுக்கு வந்தார். சந்த பாராவைச் சார்ந்த எளிய மனங்கொண்ட அந்தணர் ஒருவர் வாலிபனான ஹுசைனுக்குத் தங்க இடம் கொடுத்தார். பின்னர் கௌட அரசர் சுபத்திராயிடம் ஹுசைன் வேலைக்காரனாக நியமிக்கப்பட்டார். தன் தலைவனிடம் ஹுசைன் நேர்மையானவராகத் திகழ்ந்தார். அரசர் அவரிடம் ஒரு குளம் வெட்டும் பொறுப்பினை ஒப்படைத்தார். குளத்து வேலைக்காக ஒதுக்கப்பட்ட பெரும் பணம் ஹுசைனால் களவாடப்பட்டது. அக்குற்றத்தை அறிந்த அரசர் அவரை வசைபாடினார். ஹுசைன் ஷா அரசரிடம் கடுமையாக எதிர்வாதம் செய்தார். பின்னர் அரசனை அவர் முகம்மதிய மதத்தைத் தழுவுமாறு வற்புறுத்தினார். மற்றொரு செய்திக் குறிப்பின்படி ஹுசைன் உயர் அரச குடும்பத்தில் சேவகம் செயத்ார். தனது அறிவையும் நிர்வாகத் திறமையையும் போகப் போக நிரூபித்தார். இதற்கு இடையில் அபிசியன் ஆட்சியின் கீழ் வங்க நாட்டில் கடுமையான அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. அச்சமயம் வங்க நாட்டை முஜாபர் ஆண்டு வந்தார். ஹுசைன் அரண்மனை அதிகாரிகள் துணையுடன் முஜாபரைக் கொன்றார். பின் கௌடநாட்டு மன்னரானார்.

வங்காள நாட்டில் ஹுசைன்ஷா அரியணை ஏறியதும் சில படையெடுப்புகள் மூலமாக தமது ஆட்சியை விரிவு செய்தார். நாட்டில் அமைதியையும் நிலையான ஆட்சியையும் ஏற்படுத்தினார். அவரது ஆட்சி கி.பி.1493 - கி.பி.1519 வரை நீடித்தது. அவரது மகன் நஸரத்ஷா கி.பி.1519 முதல் கி.பி.1533 வரை ஆட்சி செய்தார். அக்காலம் இடைக்காலத்து வங்கநாட்டு வரலாற்றில் பொற்காலமாகக் கருதப்படுகிறது. அந்நேரத்தில் முகம்மதியர்களின் அடக்குமுறை மற்றும் கொடுங்கோன்மை இந்துக்கள் மீது தீவிரமாக அமையவில்லை. அரசு நிர்வாகங்களில் பொறுப்புமிக்க உயர் பதவிகளில் மாலாதரபாசு, ரூபா, சனாதனா போன்ற இந்துக்கள் நியமிக்கப்பட்டனர். செல்வாக்கு மிக்க இந்து மற்றும் முகம்மதிய சமூகத்தினர் பரஸ்பரம் நெருங்கி பழகினர். இதன் விளைவாக பரகல்கான் போன்ற உயர்மட்ட முகம்மதியர்கள் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றை விரும்பிக் கேட்டனர். கற்றறிந்த இந்துக்களும் அரேபிய பாரசீக மொழிகளை கற்றனர். அரசவை நிர்வாகம் மற்றும் கலாச்சாரம் காரணமாக இந்துக்களும் சில முகம்மதிய வழக்கங்களை மேற்கொண்டனர். நாட்டில் நிலவிய அர்சியல் அமைப்பு, படித்த

இந்துக்களுக்குப் புதிய சட்டப்புத்தகங்களை (சாத்திரங்கள்)யும் அதற்கான வருணனைகளையும் புதுமையான உள்ள வேட்கையுடன் இயற்ற உதவியது. ஹுசைன்ஷாவின் பாராட்டத் தக்க அம்சங்களாக சமயச் சகிப்புத் தன்மையும் அவரது பெருந்தன்மையும் விளங்கின. இருப்பினும் நசரத்ஷா இந்துக்களிடம் அதிகமாக பகைமை கொண்டார்.

குடிமகனின் உயர் அதிகார செழுமையை நாடு அறிந்தது. பொருளாதாரம் புறக்கணிக்கத்தக்க வகையில் அமைந்தது. மக்களின் மனத்தில் கயமை மற்றும் கீழ்த்தரமான எண்ணங்கள் நிலவின. இலக்கியங்களில் புதிய கருத்துக்கள், சமயச் சார்பற்ற சிந்தனை மற்றும் தத்துவம் ஆகியன பெரும்பாலும் நடைமுறை வாழ்க்கையில் இல்லாத ஒன்றாக அமைந்தன. அதிகம் படித்தவர்கள், பண்டிதர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் 'நவ்ய ந்யாய' என்று கருதப்படும் வாத விவாதமிக்க தர்க்க முறை ஏடுகளுக்கு வருணனைகளையும் பொருளுரை களையும் எழுதுவதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இப்பண்டிதர்கள் மற்றவர்களின் வாதங்களில் தவறு காண்பதில் திறமைசாலிகள். ஆனால் தங்களோடு வாழும் மக்களிடையே அவர்களது வாழ்வியல் முறைகளும் தனிப்பட்ட ஒழுகலாறுகளும் போலிவாதம் கொண்டவைகளாகவும் நேர்மாறுபாடு உடையதாகவும் அமைந்து இருந்தன. பிரம்மனின் தனித் தன்மையான ஈடு இணையற்ற முதன்மை பற்றி விவாவதத்திற்கு இடமாகச் சமயஉரை எவ்வாறு நிகழ்த்த வேண்டும் என்பதை அவர்கள் அறிந்து இருந்தார்கள். ஆனால் தனிப்பட்ட வாழ்வில் அவர்கள் அக்கால இந்து சமூகத்தால் வெளியேற்றப்பட்ட தீண்டத்தகாதவர்கள் அருகே செல்ல தயக்கம் காட்டினர். மரபுவழி வர்ணாசிரம தர்மம் இந்து சமூகத்தினை பல பிரிவுகளாகப் பிரித்து வைத்துள்ளது.

நவத்வீபத்தின் புனித கங்கையின் அகன்ற இருகரைகளிலும் புலமை பெற்ற கற்றறிவாளர்களும் அவர்களது சீடர்களும் பல்லாயிரக்கணக்கில் இருந்தனர். அவர்கள் தங்களது பெரும்பாலான நேரத்தை வாதவிவாதங்களில் செலவு செய்தனர். கடுஞ் சிக்கலான பகுத்தறிவு சார்ந்த விவாதங்களில் ஈடுபட்டனர். ஒருபுறம் விளக்க உரைகளும் கருத்துரைகளும் குவியத் துவங்கின. மேலும் மறுபுறத்தில் உயர்ந்த சாதியினரிடமிருந்து தாழ்ந்த சாதியினரைப் பிரிப்பதற்கான இமாலய அளவு தடை அரண் உருவாக்கப்பட்டது. பண்டிதர்கள் மாறாத தன்மை வாய்ந்த

பொருள் (வியாப்தி) பற்றி நுணுக்கமான விளக்கங்களை மேற்கொண்டனர். முகம்மதியர்களால் சாதியற்ற சமுதாயம் போதிக்கப்பட்டதால் ஆயிரக்கணக்கான இந்துக்கள் முகம்மதிய மதத்தை தழுவினர்.

அந்தண ஏகாதிபத்திய மற்றும் நிலச் சொந்தக்காரர்களின் கொடுங்கோன்மை, அநீதி ஆகியவற்றால் மக்கள் கடுமையான தாக்கத்திற்கு உள்ளாயினர். அவர்கள் சமூக நீதி மற்றும் மனித உரிமை வேண்டினார்கள். ஆனால் அவை அவர்களுக்கு மறுக்கப்பட்டன. மனித இனத்தின் மீது பேரன்பு கொண்ட அத்வைதாச்சாரியார் சாதாரண மக்கள் படும் வேதனையினை உணர்ந்து வேறு எவ்வித பரிகாரமின்றி இறைவனை மனமுருக வேண்டினார். ஒடுக்கப்பட்ட மக்களின் மீட்பராக இவ்வையகத்தில் இறைவன் அவதரிக்க வேண்டுமென வேண்டினார். அவரது பிரார்த்தனைக்குப் பதில் கிடைத்தது. மேலும் இறைவன் தனித்தன்மை மற்றும் நற்குணம் கொண்ட சைதன்யராக அவதரித்தார்.

நாட்டு மக்கள் அனைவரும் இத்தகைய ஓர் அருள் நிறைந்த மனிதருக்காக ஏங்கிக் கொண்டு இருந்தார்கள். அவர் உண்மையிலேயே ஓர் அன்புக் கடலாக விளங்கினார். அவர் அனைத்து மக்களிடமும் தடம் காணா ஆழம் கொண்ட பரிவினை வைத்து இருந்தார். சைதன்யர் போதித்த விரிவான கோட்பாடுகள் மற்றும் அவரது அன்பான இதயத்தின் பெருந்தன்மையும் இணைந்து ஓரளவு பேரின்ப ஊற்றினைக் கொணர்ந்தது. எனவே மக்கள் அமைதியான சூழ்நிலையில் இறை அமைதியை சுவாசித்தனர். சைதன்யருக்கு முன்பாக அத்வைதாச்சாரியார் வைணவ சமுதாயத்தை நடத்தினார் என்று தோன்றுகிறது. வங்க நாட்டில் சைதன்யர் வருகைக்கு முன்பாகவே தம்மை முழுவதும் அர்ப்பணம் செய்து கொண்ட வைணவர்களின் சீடர் பரம்பரை நிலவியது என உறுதியாக நம்பப்படுகிறது. அவர்களது செய்கைகள் வீட்டிற்குள் ஹரிநாமத்தை இசையோடு பாடுவதில் அமைந்தது. முகம்மதிய கொடுங்கோலனிடம் ஏற்பட்ட பயத்தின் காரணமாக மத சம்பந்தப்பட்ட பேருரைகள் சில ஆங்காங்கே மறைமுகமாக நடத்தப்பட்டன.

சைதன்யரின் காலத்திற்கு முன்பு இந்திய மக்களின் ஆன்மீக வாழ்வு துயரம் தரத்தக்கதாக அமைந்தது. இறைவனின் இருப்பிடம், சடங்கு மற்றும் மரபு வழக்குகள் ஆகியவற்றால்

ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது; மேலும் மதம் மற்றும் பாசாங்கு செயல்களால் மறைக்கப்பட்டு இருந்தது. உண்மையானது பொய்யாலும் நல்லவை கெட்டவையாலும் அனைத்திற்கும் மேலான இறைவனது இருப்பிடமானது அர்த்தமற்ற சமூக சடங்குகளால் மாற்றப்பட்டு இருந்தன.

தென்னிந்தியாவில் ஸ்ரீயமுனாச்சாரியார் மற்றும் இராமனுஜாச்சாரியார் ஆகியோரால் போதிக்கப்பட்ட மதம், எங்கும் பரவிய செல்வாக்கு மிக்க தனித்தன்மையான மாயாவாத கோட்பாடாகப் பறைசாற்றப்படுகிறது. ஸ்மிருதி புத்தகங்களில் வழங்கப்பட்டுள்ள சடங்குகளை விஞ்சும் வண்ணம் இராமானுஜ தொழிற்கூட சமூக சடங்குகள் அமைந்தன. இராமானுஜ சீடர்களுக்கு இடையே ஒரு குறுகிய சாதி அமைப்பு நிலவியது. சைதன்யர் காலத்திற்கு முன்பாகவே மதம் சார்ந்த மக்கள் இருந்தனர். ஆனால் மதம் என்பதற்கு அவர்கள் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கிருஷ்ணரின் புனித நாமத்தினை பக்தியுடன் இசைப்பண் அமைத்துக் கேட்பதற்கு நாட்டம் கொண்டவராகத் திகழவில்லை. மேலும் நல்லோர்கள் மற்றும் ஒழுக்கமானவர்களுடன் சேரவில்லை. அவர்கள், மதத்தின் முக்கிய குறிக்கோளாக நினைத்தது யாதெனில் தீர்த்த யாத்திரை மேற்கொள்வது ஆகும். ஜமாயத் அல்லது ரமாயத் வைணவ இயப் பள்ளியானது இராமானந்தரால் நடத்தப்பட்டது. அது குறிப்பாக ஒரு வகையில் முன்பு இருந்த பள்ளிகளைவிட மாறுபட்டு இருந்தது. இராமானந்தரின் சீடர்கள் சாதி இன பேதமின்றி தங்களது மதத்தைப் பரப்பினர். மேலும் கபீர்தாசர் இராமனந்தரின் சீடர்களில் ஒருவராவார். மத மற்றும் இந்திய சமூக வரலாற்றில் அவரின் பங்கு சிறப்பான பாராட்டு பெறுகிறது. கபீர்தாசர் முகம்மதிய நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர். இந்து முகம்மதிய மக்களிடையே நிலவிய பகையைப் போக்குவதற்குப் பெரும்பாடுபட்டார். கபீர்தாசர் எழுதிய சிறு பாடல்கள் "தோஹா" என்று அழைக்கப்படுகிறது. இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் இறைவன் ஒருவனே. இரு மதங்களின் தனி மனிதக் கொள்கைகளில் எவ்வித வேறுபாடும் இல்லையென அவரது தோஹாக்கள் தெரிவு செய்கின்றன.

சீக்கியமதத்தைத் தோற்றுவித்த நானக் பற்றி இங்கு குறிப்பிடுதல் அவசியமாகிறது. கபீர்தாசரின் முக்கிய தனி மனிதக் கொள்கையின் அடிப்படையில் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில்

நானக் சீக்கிய மதத்தை நிறுவினார் என ஒரு சிலர் கருத்து தெரிவிக்கின்றனர். இருப்பினும் இந்துக்களும் முகம்மதியர்களும் ஒருவருக்கொருவர் எதிர்ப்படும்போது நானக் வெளிப்பட்டார். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் சில நீதிக் கொள்கைகளை நானக் தேர்ந்தெடுத்தார். இரு பிரிவினருக்குமிடையே பகைமையைப் போக்க ஓர் அரசியல் மதத்தை உருவாக்கினார் என்று கருதப் படுகிறது. உண்மையில் சீக்கிய இயம் காலத்தின் கட்டாயத்திற்கு ஏற்ப உருவானது. அது பலவகையான முரண்பாடான கோட்பாடுகளின் கதம்பமாக விளங்கியது. இராமானந்தரும் கபீர்தாசரும் வட இந்தியாவில் தோன்றினர். நானக் பஞ்சாபில் தமது மதத்தினைப் பிரச்சாரம் செய்தார். அவர்கள் அனைவரும் முறையே தங்களின் சமயக் கோட்பாடுகளினால் இந்து மற்றும் முகம்மதியர்களிடையே நிலவிய பகைமையைத் தணிப்பதற்குப் பெருமுயற்சி செய்தனர் ஆனால் அவர்கள் பெருமுயற்சி தோல்வியினைத் தழுவியது என வரலாறு எடுத்துக் கூறுகிறது.

அக்கால இந்தியாவின் மதவான மண்டலம் முழுவதும் பாசாங்கு, பொறுமையின்மை, எதிரிடை பகைமை ஆகிய நெருக்கமான மேகங்கள் சூழ்ந்து இருந்தன. நடைமுறையில் மதம்; அரசியல் கிளர்ச்சி மற்றும் ஒழுக்கப் பண்புகள் ஆகியவற்றில் முழுவதும் பூண்டோடு சரிந்து அழியும் நிலையில் வங்கநாடு இருந்தது. மத சம்பந்தப்பட்ட புலநெறி வழக்கப்பண்பு உருவாக்கிய அரிக்கும் தன்மை சமூகத்தின் உயிர்நாடியினை ஒவ்வொரு மூலையிலும் விழுங்கியது. இவ்வதிக மாறுபாட்டு நிலையானது சைதன்யரின் வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரால் விரிவாக எடுத்து உரைக்கப்பட்டுள்ளது.

ஒருவர் மீது மற்றவர் தீமை செய்வதில் ஈடுபட்டனர் எவ்விடத்திலும் கிருஷ்ண நாமம் ஒலிக்கவில்லை. கிருஷ்ண நாமத்தினை நீராடும்போது செப்பினால் மேன்மையடையலாம். இதனை உணர்ந்த பக்தர்களும் ஒழுக்க சீலர்களும் கூட அந்நாமத்தினைக் கூறவே பயந்தனர். சீடர்களும் ஆசிரியர்களும் மறை இயம் சார்ந்த விதண்டாவாதத்தில் ஈடுபட்டனர். அவர்கள் பெரும்பாலும் உடல் சார்ந்த மகிழ்வினைத் துய்ப்பதில் நேரம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டனர். ஒருவரும் கிருஷ்ணரின் நாமத்தை கேட்கக்கூட கவலைப்படவில்லை. அத்தகைய சூழலில் சைதன்யர் ஒடுக்கப்பட்ட மனித இனத்தின் மீட்பராக யுக புருஷராக வெளிப்பட்டார்.

சைதன்யரின் மூதாதையர் மரபு

சைதன்யர் ஜெகன்னாத மிஸ்ராவின் மகனாகவும் உபேந்திர மிஸ்ராவின் பேரனாகவும் இருந்தார். அவரது முன்னோர்கள் ஒரிசாவில் உள்ள ஜெய்ப்பூரை பூர்வீகமாகக் கொண்டவர்கள். அத்வைதாச்சாரியாரின் தந்தை குவேர பண்டிதர் ஸ்ரீஹட்டம் எனும் இடத்தில் அதிக நாட்கள் வாழ்ந்தவர். அவ்விடம் கிழக்கு வங்க நாட்டின் (தற்சமயம் பங்களாதேஷ்) கலாச்சாரம் அதிகம் நிறைந்த மாவட்டங்களில் ஒன்றாகும். குவேர பண்டிதர் ஸ்ரீஹட்டாவில் வந்து தங்குமாறு உபேந்திர மிஸ்ரரை வேண்டினார். அவரும் அழைப்பை ஏற்று தக்கா தஷிணில் வந்து குடியேறினார். அது சில்ஹட் மாவட்டத்தில் உள்ள சிறிய நகரமாகும். அவ்விடத்தில் சைதன்யரின் மூதாதையர் வீட்டினை இன்றும் காணலாம். இருந்தபோதிலும் உபேந்திர மிஸ்ரரின் தாத்தாவிற்குத் தாத்தாவான ஜிதமிஸ்ரர் ஸ்ரீஹட்டத்தில் குடியேறி பரோகஸ்கா நதிக்கரையில் வாழ்ந்தார் என சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

ஜெகன்னாதர் உபேந்திர மிஸ்ரரின் ஏழாவது மகன் ஆவார். ஜெகன்னாதரின் தாயார் கலாவதி ஆவார். அவர் மிகவும் அழகாக இருந்ததால் எல்லோரும் அவரை ஷோபாவதி என அழைத்தனர். (வைரத்திற்கு இணையான அழகு) ஜெகன்னாத மிஸ்ரர் நீலாம்பரச் சக்கரவர்த்தியின் மகளான சசிதேவியை மணந்தார். நீலாம்பரச் சக்கரவர்த்தி ஸ்ரீஹட்டத்தில் வாழ்ந்து வந்தார். சசிதேவி எட்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். அனைவரும் சிறுவயதில் இறந்தனர். அவர் ஒன்பதாவதாக ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

அக்குழந்தைக்கு விஸ்வரூபன் என்று பெயரிட்டனர். விஸ்வரூபர் பத்துவயதை அடைந்தபோது சசிதேவியின் கருவில் சைதன்யர் தோன்றினார். அச்சமயம் சைதன்யரின் பாட்டி ஷோபாதேவி ஒரு கனவு கண்டார். அக்கனவு மூலமாக இறைவனே இம்மண்ணுலகில் கங்கை நதிக்கரையில் சசிதேவியின் மகனாக அவதரிப்பார் என உணர்ந்தார். எனவே ஷோபாதேவி தனது மகன் ஜெகன்னாதரையும் சசிதேவியையும் நவத்வீபத்திற்கு வரும்படி கேட்டுக் கொண்டார். மேலும் ஆண் குழந்தை பிறந்தவுடன் அவரிடம் காட்ட வேண்டும் என்ற தன்

விருப்பத்தினைத் தெரிவு செய்தார். சசிதேவியும் அவ்வாறே செய்வதாக வாக்களித்தார். ஜெகன்னாதரும் சசிதேவியும் நவத்வீபத்தில் வந்து தங்கினர் சசிதேவியின் வாக்கினைக் காப்பாற்ற கிழக்கு வங்க நாட்டில் தங்கி இருந்தபோது தனது பாட்டி ஷோபா தேவியைக் காணச் சைதன்யர் சில்ஹட் சென்றார் என்பது நன்கு அறிந்த செய்தியாகும். அவர் தனது பாட்டிக்குப் பரம்பொருள் இராதாகிருஷ்ண உருவச்சிலையை அன்பளிப்பாகக் கொடுத்தார். அச்சிலையானது இன்றுகூட நாம் காணும் பொருட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஜெகன்னாத மிஸ்ரர் ஒரு சிறந்த அறிவாளியாக விளங்கினார். அனைத்துப் பண்டிதர்களாலும் அவருக்குப் புரந்தரர் என்ற பட்டம் வழங்கப்பட்டது. எனவே அவரை அடிக்கடி மிஸ்ர புரந்தரர் என அழைத்தனர்

சைதன்யர் இம்மண்ணுலகில் சக ஆண்டு 893 பங்குனி மாதம் 27ஆம் நாள் சனிக்கிழமையன்று அவதரித்தார் இப்பூவுலகில் அவர் நாற்பத்தெட்டு ஆண்டுகளே வாழ்ந்தார் பின்னர் பூரியில் டோடா கோபிநாத் ஆலயத்தில் சங்கீர்த்தன உற்சவம் நடைபெற்றுக் கொண்டு இருந்தபோது கி.பி.1534 ஆம் ஆண்டு நம்மை விட்டுப் பிரிந்தார். அங்கு அவரது மறைவு பற்றிய மர்மம் நிலவுகிறது.

அவர் வாழ்ந்த காலத்தில் லோடி வம்சத்தைச் சார்ந்த பல்லால், சிக்கந்தர், இப்ராஹீம் ஆகிய ஆப்கான் நாட்டு அரசர்களும் முகலாய மன்னர்களான பாபர் மற்றும் ஹீமாயூன் ஆகியோர் தில்லி அரியாசனத்தில் அமர்ந்து இந்தியாவில் ஆட்சி செய்தார்கள். வங்கநாட்டை ஆட்சி செய்த சமகால சுல்தான்கள் பார்பக், பெர்ரோஷ் ஷா, நசுருதீன் முகம்மது ஷா, முஸாபர் ஷா, ஹுசைன் ஷா மற்றும் ஜியாசுதீன் ஷா ஆகியோர் ஆவர். சைதன்யரின் வாழ்நாளிலேயே போர்ச்சுகீசு நாட்டைச் சார்ந்தவரும் புகழ்மிக்க ஆய்வுப் பயணம் செய்தவரும் திறமைவாய்ந்த கப்பலோட்டியுமான வாஸ்கோடகாமா இந்தியாவின் மேற்குக் கரையை வந்து அடைந்தார் அவர் ஐரோப்பாவிலிருந்து கடல் மார்க்கமாக நன்னம்பிக்கை முனையினைக் கடந்து வந்து இந்தியாவிற்கும் கிறித்துவ ஐரோப்பியாவிற்கும் இடையே நேரடியான வாணிப மற்றும் கலாச்சார தொடர்பினை உருவாக்கினார்

வாழ்க்கை

புனித கங்கை இசையுடன் சந்தத்துடன் பாய்ந்து கொண்டு இருந்தது. பசும்புல் தரை சந்திர ஒளியில் புன்முறுவல் செய்தது. அது ஒரு அமைதியான மாலைப் பொழுது. அந்நேரத்தில் கி.பி.1486ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ஆம் நாள் சனிக்கிழமையன்று மாயாபுரத்தில் சைதன்யர் அவதரித்தார். கற்றறிந்தோர் உலகில் நவத்வீபம் வங்க நாட்டின் ஆக்ஸ்போர்டு என்று கருதப்பட்டது. சைதன்யர் அவதரித்த நேரத்தில் நற்சகுனம் தோன்றத் துவங்கியது. நவத்வீபம் பகுதி முழுவதும் அச்சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணரின் புனித இசைப்பண் எதிரொலித்தது. அதற்குக் காரணம் சந்திரகிரஹணம் ஏற்பட்டது.

பிறந்த குழந்தைக்குப் பல பெயர்கள் வைக்கப்பட்டன அவரது தாயாரால் சைதன்யர் நிமாய் என்று அழைக்கப்பட்டார். அதற்குக் காரணம் அவர் வேப்பமரத்தின் அடியில் பிறந்தது மற்றும் எமனின் துன்பத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் ஆகும். எமன் அவரது தாயிடமிருந்து எட்டு குழந்தைகளைப் பறித்து விட்டான். குழந்தைப் பருவத்தில் மிக அழகாக காட்சி அளித்ததால் அக்கம்பக்கத்தில் உள்ள பெண்கள் அவரை கௌரங்கா என்று அழைத்தனர். அவரது தாய் வழி தாத்தா நீலாம்பர சக்கரவர்த்தி அவரை விஸ்வம்பரா என்று அழைத்தார். குழந்தையின் அனைத்து உறுப்புகளிலும் மாமனிதருக்குரிய குறியீடுகளைக் கண்டார். குழந்தை பிறந்தபோது கோள்களின் நிலை மற்றும் பிறப்புக் குறிப்பு முதலியவற்றை ஆராய்ந்து ஏற்றத்திற்கான அறிகுறிகளைக் கூறினார். மேலும் சைதன்யர் பிரபஞ்சத்தின் மீட்பராக மூல ஆதாரமாக விளங்குவார் என அவ்வாறு அழைத்தார். அச்சமயம் நாட்டில் நிலவிய பற்றாக்குறை சைதன்யரின் வெளிப்பாட்டினால் மறைந்துவிடும் என்றும் சைதன்யரின் இறையன்பு நாத்திகத்தை விரட்டி விடும் என கருத்துத் தெரிவித்தார்.

புதிதாக பிறந்த குழந்தையின் விருப்பம், சமூகச் சடங்குபடி ஆராயப்பட்டது. குழந்தையின் முன்பு நெல், வறுத்த சாதம், மண்கட்டி, தங்கம், வெள்ளி மற்றும் புத்தகம் போன்ற

பொருட்கள் வைக்கப்பட்டன. இக்குழந்தை பிறந்த சூழ்நிலையில் மேலே குறிப்பிட்ட பொருட்களுடன் இந்துக்களின் புனித புத்தகமான ஸ்ரீமத் பாகவதத்தின் ஒரு பிரதியும் இருந்தது. இந் நிகழ்ச்சியில் பங்கு கொள்ள பலர் வந்திருந்தனர். குழந்தை தன் பிஞ்சுக்கரங்களை நீட்டி ஸ்ரீமத் பாகவத்தினைத் தழுவிக் கொண்டதைக் கண்டவர்கள் பேராச்சரியம் கொண்டார்கள். இந்நிகழ்ச்சி, குழந்தையின் எதிர்கால வாழ்க்கையை தெளிவாக்கியது என ஒருசாரார் கருதினர்.

குழந்தைப் பருவத்திலிருந்தே பையனின் வினோதமான நடவடிக்கை ஆராயப்பட்டது. குழந்தை ஹரியின் புனித நாமத்தைக் கேட்காவிட்டால் அழத்துவங்கியது. எனவே எப்பொழுதும் ஜெகன்னாதரின் குடும்பத்தினர் ஆனந்தத்துடன் ஹரியின் நாமத்தைக் கூறினர். அப்புனித நாமாவளியை கேட்கும் பொழுதெல்லாம் சைதன்யரும் அழகாக ஆடுவார். அவ்வழகிய நடனத்திற்கேற்ப அக்கம்பக்க பெண்கள் பாடுவது வழக்கம். நிமாய் அப்பெண்களுடன் ஹரியின் நாமத்தை இடையறாது பாடி ஆடினார்.

நிமாயின் ஆரம்பகால வாழ்க்கையில் அவர் செய்த சிறுபிள்ளைத்தனமான குறும்புகள் வீட்டில் உள்ளோரையும் அக்கம் பக்கத்தில் இருந்தோரையும் வருத்தமடையச் செய்தன. ஆனால் அவரது சகோதரர் விஸ்வரூபரின் (விஸ்வம்பரர்) அன்பான குறுக்கீடு அனைத்து வேற்றுமைகளையும் கட்டுப் படுத்தியது. விஸ்வரூபர் குழந்தை நிமாயை கிருஷ்ணராகவே கருதினார். எனவே அவரிடம் அளவு கடந்த அன்பு செலுத்தினார். நிமாய் கங்கை ஆற்றில் நீராடும்பொழுது அங்கு குழுமியுள்ள மக்களைத் தமது விளையாட்டுத்தனமான செய்கைகளால் திகைப்படைய செய்வது வழக்கம். அவருக்கு எதிராக விஸ்வரூபரிடம் பலமுறையீடுகள் செய்யப்பட்டன. அப்பொழுது நிமாயை அவர் மென்மையாகக் கண்டிப்பார். அக்கண்டிப்பு நிமாயின் பண்பில் பல வியக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது. விஸ்வரூபர் இடையறாது அறிவு சார்ந்த செயல்களிலும் சமயம் சார்ந்த பேருரைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அச்சமயத்தில் நவத்வீபம் வங்கநாட்டின் ஆக்ஸ்போர்டாக விளங்கியது. அங்கு வழிவழி மரபான கலைப்பயிற்சிப் பணிகள் (ஸ்மிருதி) நவ்ய நியாய மற்றும் தத்துவத்தின் ஏனைய பிரிவுகள்

தங்கு தடையின்றி மேற்கொள்ளப்பட்டன. அதுபோன்று மரபுவழி கல்வி மையம் (பொதுவாக பாடசாலை அல்லது சதுஸ்பதி) அத்வைதாச்சாரியாரின் வீட்டில் அமைந்து இருந்தது. ஸ்ரீமத் பாகவதத்தின் பேருரைகள் இடையறாது பக்தர்களால் நிகழ்த்தப்பட்டன. அத்வைத பாடசாலைக்கு நிமாய் வருவது வழக்கம். அந்நேரத்தில் அத்வைதாச்சாரியாரும் அவர்களது சீடர்களும் நிமாயின் ஒப்பற்ற அழகினை கண்டு மகிழ்ந்தனர். எனவே அவர் மீது தனி கவனம் செலுத்த முற்பட்டனர்.

சிறு வயதிலிருந்தே நிமாய் தனது தனித்தன்மை துணையுடன் இயற்கை மீறிய செயல்களை செய்து காட்டினார். அச்செயல்பாடுகள் பெற்றோரை வியப்பில் ஆழ்த்தின. படமெடுத்து ஆடும் பாம்புப்படுக்கையின் மீது அவர் அமர்தல், வெறுங்காலுடன் அவர் நடக்கும்போது எழும் சிலம்பொலி, நிமாயின் படுக்கை அறையில் ஏற்பட்ட விஷ்ணுவின் பாதச்சுவடுகள் முதலிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம்.

இதற்கிடையே ஜெகன்னாதரின் குடும்பத்தில் ஓர் எதிர்பாராத இடையூறு ஏற்பட்டது. விஸ்வரூபர் ஜெகன்னாதரின் பெரிய மகன் ஆவார். அவர் தனது திருமணத்திற்கு முதல் நாள் மாலை உலக வாழ்க்கையில் நாட்டம் கொள்ளாது சங்கராச்சாரியர் அமைப்பின் கீழ் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். இதனை அவர்களது பெற்றோர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் மீளாத் துயரில் ஆழ்ந்தனர். இத்திடீர் எதிர்பாராத சம்பவத்தினால் பக்தர்கள் தங்கள் குருவின் பாத அடிகளைப் பின்பற்றினர். ஆனால் அத்வைதாச்சாரியார் அவ்வாறு செய்யவில்லை. இருப்பினும் விஸ்வரூபரின் துறவு அமைதியற்ற நிமாயின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது விளையாட்டுத்தன்மை பெருமளவில் மறைந்து விட்டது. அவர் தனது தன்மையான வார்த்தைகளினாலும், இனிமையான செய்கைகள் மூலமாகவும் துயரம் அடைந்த பெற்றோரை உற்சாகப் படுத்தினார்.

நிமாயின் விதிவிலக்கான அறிவாற்றல் கூடிய விரைவில் அவரது இயல்பில் மறக்க முடியாத குறியீட்டை ஏற்படுத்தியது அவர் தனது பாடங்கள் அனைத்திலும் வெகுவிரைவிலேயே சிறந்து விளங்கினார். கூர்மையான அறிவாற்றல் மற்றும்

அதிசயிக்கத்தக்க நினைவாற்றலுடன் தனது படிப்பில் ஈடுபட்டார். அவரது அண்ணன் விஸ்வரூபரும் அதேபோன்று கல்வி மற்றும் ஏனைய செய்கைகளில் திறமையாக விளங்கியிருந்தார். நிமாயின் ஆழ்ந்த புலமைகண்டு ஜெகன்னாத மிஸ்ரர் பயந்தார். ஏனெனில் விஸ்வரூபர் உலகில் நிலவும் நிலையாமையினை உணர்ந்து துறவு வேடம் பூண்டார். எனவே வருத்தமடைந்த தந்தை ஜெகன்னாதர் நிமாயின் படிப்பை நிறுத்த முடிவு செய்தார். அதன் விளைவு பயங்கரமாக இருந்தது. இந்தத் தடை நிமாயை மேலும் பிடிவாதக்காரராக, கோபமுடையவராக மாற்றியது.

தந்தையால் நிறுத்தப்பட்ட தனது படிப்பைத் தொடர நிமாய் சில உத்திகளைக் கையாண்டார். ஒரு நாள் நிமாய் உடைந்த மெல்லிய சமையல் பானைகள் மீது அமர்ந்தார். இந்துப் பெண்கள் அவற்றை சுத்தமற்றதாகக் கருதினர். அப்பானைகள் தனியே கழுவப்பட்டு சுத்தம் செய்யப்பட வேண்டியவைகளாக விளங்கின. இந்நிகழ்ச்சி மூலமாக நிமாய் நல்லது கெட்டது சுத்தம் அசுத்தம் பற்றி அறிந்த விவரத்தை அவரது வாழ்க்கை வரலாறு எழுதிய வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள். அவரது தாயார் அவ்விடத்தை விட்டு அகலச் சொன்னபோது நிமாய் மறுத்துப் பேசியது யாதெனில் "நீங்கள் சமைத்த இப்பானைகளில் அழுக்கு ஏதுமில்லை. நீங்கள் விஷ்ணுவிற்காக படையல் செய்துள்ளீர்கள். மற்ற பகுதிகள் இப்பானையின் மீது பட்டதால் அவை புனிதமடைந்தன.'' அவர் தனது பெற்றோரை நச்சரித்ததற்குக் காரணம் மீண்டும் படிப்பை தொடர்வதற்கே ஆகும். "நீங்கள் எனது படிப்பைத் தொடர அனுமதிக்காவிட்டால் நான் இந்த அழுக்கு மூட்டையிலிருந்து வெளி வரமாட்டேன்" என்று தன் அம்மாவிடம் கூறினார். பெற்றோர்கள் தங்கள் தவறை உணர்ந்தனர். பின்னர் அவரது சந்தோஷத்திற்காக படிப்பைத் தொடர அனுமதி அளித்தனர்.

இதற்கிடையில் நிமாய்க்கு அவரது தந்தையால் பூணூல் அணிவிக்கப்பட்டது. அச்சடங்கு முடிந்தவுடன் ஜெகன்னாதர் அவரை கங்கதாசரின் இலக்கணப் பள்ளியில் சேர்த்தார் நிமாய் மிகக் குறுகிய காலத்திலேயே இலக்கணத்தின் அனைத்து வகைகள், தர்க்கம், அணியிலக்கணம் போன்றவற்றில் சிறந்து விளங்கினார். மேலும் கல்வியில் தனது அறிவாற்றலை வெளிப்படுத்தினார். இதனால் ஆசிரியராலும் மாணவர்களாலும்

ஒருமிதமாக பாராட்டப்பட்டார். அப்பள்ளியின் வயது மூத்த மாணவர்களான முராரி குப்தா, முகுந்த தத்தா, கிருஷ்ணானந்தா, கமலா காந்தா ஆகியோர் நிமாயிடம் தர்க்கம் செய்து தோல்வியடைந்தனர். வயதில் இளையவரான அளவு கடந்த அறிவுமிக்க தோழரிடம் எதிர்வாதம் செய்ய இயலாது நின்றனர். நிமாயின் மேதைத்தன்மை அவரது பதின்மூன்றிலிருந்து பத்தொன்பது வயதிற்குள்ளாக ஓர் உச்சநிலையினை அடைந்தது. அந்த வயதில் சர்வவர்மன் இயற்றிய புதிர் நிறைந்த புகழ் வாய்ந்த வடமொழி இலக்கண நூலான கலாப வியாகரணத்திற்கு விளக்கவுரை எழுதினார். அவ்விளக்கஉரை தற்சமயம் இல்லை என்பது வருந்தத்தக்க செய்தி ஆகும்.

நிமாய் மீண்டும் இரண்டாவது முறையாக கங்கதாசர் பள்ளியில் படிப்பினைத் தொடர்ந்தார். அந்நேரத்தில் எதிர்பாராத வண்ணம் ஜெகன்னாத மிஸ்ரர் மரணமடைந்தார். திடீரென நிகழ்ந்த இத்துயரச் சம்பவம் தாய் சேய் இருவரையும் அளவு கடந்து வருத்தமடையச் செய்தது. நிமாய் தன்மையான சொற்களால் தனது தாயாரைத் தேற்றினார். ஜெகன்னாதரின் மறைவு நிமாயின் மனத்தளவில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியபோதும் படிப்பில் எவ்வித கவனக் குறைவும் ஏற்படத்தவில்லை. அவரது அன்னை, கணவர் இழந்த துயரத்தை தனது அன்பு மகனின் பார்வையில் மறந்தார் அவர் அன்பு மகனின் சேவைக்காகவே தம்மை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டார்.

தனது படிப்பினை முடித்ததும் நிமாய் ஒரு பள்ளி நடத்தினார். அம்மரபு பள்ளி நவத்வீபத்தின் பணக்காரரான முகுந்த சஞ்ஜயா அவர்கள் வீட்டில் நடந்து வந்தது. அவர் மாணவர்களுக்குப் பாடம் நடத்துவதிலும் பயிற்சி அளிப்பதிலும் சிறந்து விளங்கினார். நவத்வீபத்தில் பண்டிதர்களால் பயிற்றுவிக்கப்பட்ட பழைய முறையினைமாற்றினார். தாமே உருவாக்கிய விஞ்ஞான ரீதியான பயிற்று முறையினைக் கொண்டு வந்தார். எனவே அவர் சிறந்த ஆசிரியராகப் போற்றப்பட்டார். அவரது புகழ் எங்கும் பரவியது. அவரது பள்ளியில் சேர நாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் வந்தனர். அச்சமயம் நவத்வீபம் பலதுறைகளில் கணக்கற்ற அறிஞர்களின் அரணாக விளங்கியது. இவ்வாறாக பெற்ற புகழினால் நிமாய்

ஊக்கம் பெற்றார். எனவே சமகாலத்து அறிஞர்களை அடிக்கடி வரவழைத்து இலக்கிய விவாதங்களை நடத்தினார். ஒரு சிலரே அவருடன் வாதாட முன் வந்தனர். அவரது அறிவாற்றல், சான்றுகளோடு கூடிய சொற்போர், மற்றும் ஆழ்ந்த புலமை ஆகியன எதிர்வாதம் செய்வோரை தோல்வி காணச் செய்தன.

இதற்கிடையில் வல்லபச்சாரியாரின் மகளான லெஷ்மி தேவியுடன் நிமாயின் திருமணம் நடைபெற்றது. லெஷ்மிதேவி அவருக்கு ஏற்ற மனைவியாக விளங்கினார். வீட்டு வேலைகளில் அவரது மாமியாருக்கு உதவி செய்தார். கணவரின் தேவையறிந்து அவரது புனித சேவையில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டார்

காலம் செல்ல செல்ல நிமாயின் புகழ் எல்லா திசைகளிலும் ஆசிரியராகவும் புலவராகவும் பரவியது. நவத்வீபம் புலமை மையமாக விளங்கியது. எனவே நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பண்டிதர்கள் வரத் துவங்கினர். ஒருநாள் ஸ்ரீஈசுவரபுரி என்ற பெயர் கொண்ட ஒரு வைணவத்துறவி நிமாயிடம் விருந்தினராக வந்தார். அவர் மாத்வ பற்றீடுபாடு கொண்டவர் மற்றும் ஸ்ரீமாதவேந்திரபுரியில் சீடராக விளங்கியவர். நிமாய் அத்துறவி இயற்றிய 'ஸ்ரீகிருஷ்ணலீலாம்ருதா'வின் உள்ளார்ந்த குணநலன்களைப் பாராட்டிப் பேசினார். நூலாசிரியர் புத்தகத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி விளக்கம் கேட்டார். அதற்கு நிமாய் ஸ்ரீகிருஷ்ணரின் உண்மைச்சீடரின் படைப்பில் எவ்வித குறைபாடும் இருக்காது என அறிவித்தார். ஏனெனில் கிருஷ்ணரின் தூண்டுதலால் அவர் அப்புத்தகத்தை எழுதியுள்ளார். இவ்வைணவத்துறவியும் இறைவனிடம் கொண்ட பற்று, ஆழ்ந்த அறிவு மற்றும் பக்திப் பரவசம் மூலமாக நிமாயின் இதயத்தில் ஓர் இடத்தைப் பிடித்தார். அவர் தினமும் நிமாயை சந்தித்து மதசம்பந்தப்பட்ட விளக்கவுரைகளை நிகழ்த்தினார் இத்துணையானது நிமாயின் பக்தி உணர்விற்குத் தூண்டுகோலாக அமைந்தது பின்னாளில் இந்த ஈஸ்வரபுரியினை தனது ஆன்மீக குருவாக நிமாய் ஏற்றுக்கொண்டார்.

கேசவபட்டருடன் ஏற்பட்ட சந்திப்பு நிமாயின் வாழ்வில் ஒருமைல் கல்லாக அமைந்தது. அச்சந்திப்பு மதச்சார்பற்ற புலமை மற்றும் கல்வியில் அவருக்கு மாபெரும் வெற்றியைக் கொடுத்தது.

காஷ்மீர நாட்டைச் சார்ந்த கேசவபட்டர் அக்கால இந்தியாவின் தலைசிறந்த அறிவாளியாக விளங்கினார். அவர் தமது தொடர்வெற்றிப் பயணத்திற்கிடையே பெரும் பணத்துடன் யானை, குதிரை புடை சூழ நவத்வீபத்தை அடைந்தார். அவர் எதிரிகளை வென்று வெற்றிவாகை சூடியுள்ளார். எதிராளிகளின் இணங்கிப்போகும் தன்மையானது அவருக்குப் பல பரிசுப் பொருட்களை அளித்தது. அந்த முதன்மை பெற்ற புலவரின் வருகை அந்நகருக்கு கற்றவர் சபையில் சவாலாக அமைந்தது. நவத்வீபத்தைச் சார்ந்த அறிஞர்கள், அவர் வெல்ல இயலாதவர் என எண்ணினார்கள். ஒரு மாலைப்பொழுதில் இளைஞரான நிமாய் தமது மாணாக்கர்களுடன் கங்கைக் கரையில் அமர்ந்து இருந்தார். அப்பொழுது அங்கு அப்புலவர் வந்தார். நிமாய் அவரிடம் கங்கையைப் புகழ்ந்து பாடுமாறு கேட்டுக் கொண்டார். உடனே புலவர் கவிதைத் திறமையை வெளிப்படுத்தும் வகையில் தற்பெருமையுடன் நூறு சுலோகங்களைச் சொல்லத் துவங்கினார். நிமாயால் மேற்கோள் காட்டப்பட்ட ஒரு செய்யுளின் குறைகளையும் நிறைகளையும் விளக்குமாறு கேட்கப்பட்டபோது கேசவபட்டர், நிமாயின் நினைவு ஆற்றலைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார். அவரது செய்யுளில் குறையொன்றும் இல்லை என வாதித்தார். நிமாய் அச்சுலோகத்தில் உள்ள ஐந்து வகை நிறைகளைக் கூறினார். இருந்தபோதிலும் செய்யுளின் ஆரம்ப, மத்திய, இறுதிப் பகுதிகளில் ஐந்து வகையான குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார். நிமாய் மேலும் கூறியது யாதெனில் "கவிதை நல்ல இயல்புகள் மற்றும் உணர்வுகளின் உச்சநிலையைக் கொண்டிருந்தாலும் ஒரு குறை ஏற்பட்டால் முழுவதும் வீணாகி விடும். அது ஆரோக்கிய உடலில் அருவருக்கத்தக்க வகையில் தோன்றும் தொழுநோயை ஒத்ததாகும்." இத்தோல்வி அப்புலவரின் மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அதுவே அவரது ஆன்மீக வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அவர் நிம்பார்க்க சமயக் கோட்பாடு முறையைச் சார்ந்தவர். அவர் கலைமகளை தினமும் வழிபாடு செய்தவர். வாணியின் கருணையினால் அவர் நாடுமுழுவதும் உள்ள எதிரிகளைச் சொற்போர் வாத விவாதத்தில் வென்றவர். அன்று இரவு அவரது கனவில் கலைமகள் தோன்றினாள். அப்புலவர் நிமாயின் பாதக் கமலங்களில் அவர் முழுவதும் சரணடைய வேண்டும். நிமாய் இறைவனே அன்றி வேறு யாரும் இல்லை. அவர் இம்மண்ணுலகில் வளமானவர்

களின் நற்குடிப்பிறப்பு மற்றும் கல்விச் செருக்கு உள்ளவர்களின் கர்வத்தினை தடுத்து நிறுத்த அவதரித்துள்ளார். இருப்பினும் திடப்பற்றுடைய இணக்கமான அன்புமிக்க சீடர்கள் அவரை அடையலாம் என்று கூறி வானில் மறைந்தார் மறுநாள் தோல்வியைத் தழுவிய அந்த வெற்றியாளர் நிமாயைச் சந்தித்தார். நிமாய் அவருக்குக் கீழ்கண்ட நீதியை விளக்கினார்.

"உடல், பொருள், ஆன்மா மற்றும் செல்வம் ஆகியவற்றை நல்ல காரியத்திற்கு ஈடுபடுத்த வேண்டும். ஸ்ரீ கிருஷ்ண சேவையே உண்மை அறிவின் உயர்ந்த குறிக்கோளாகும். இறுமாப்பைத் தவிர். பணிவாக இரு. மேலும் ஸ்ரீ கிருஷ்ணரின் கமலம் போன்ற பாதங்களைத் தொழ, முழு மனத்துடன் உன்னை ஈடுபடுத்து. அனைத்து உயிர்களிடத்தும் (ஜீவன்கள்) அன்பாக இரு". பின் நிமாய் அவரை நெஞ்சாரத் தழுவினார். எனவே, உண்மையான தவம், பக்தி மற்றும் ஞானம் அப்புலவரிடம் புலர்ந்தன. அவர் நிமாயால் ஆசீர்வதிக்கப்பட்டார்.

முதன்மையாகத் திகழ்ந்த கேசவபட்டரை இலக்கியம் சம்பந்தப்பட்ட வாதப்போரில் நிமாய் வெற்றி பெற்றார். எனவே, நிமாயின் பெயர் நாடு முழுவதும் பரவியது. இவ்வெற்றியின் மூலமாக அவர் வாதிசிம்மன் (அவரது எதிரிகளுக்குச் சிங்கம் போன்றவர்) என்ற பட்டத்தை பெற்றார். அதன்பின் அவர் அக்காலத்தில் முன்னணிப் புலவராக விளங்கினார்.

நிமாய் கிட்டத்தட்ட இருபதாம் வயதிலேயே இளம் பருவத்திலேயே கிழக்கு வங்காள நாட்டின் நீண்ட தூர பயணத்தை மேற்கொண்டார். அச்சமயம் மாணவர்களுக்கு நிலையான குறிக்கோள் கொண்ட கல்வியை வழங்க முற்பட்டார் அப்பயணத்திற்கு முன்பு தலைசிறந்த இலக்கண நூலான கலாபவியாகரணத்திற்கு உரை எழுதினார். அந்நூல் நாடு முழுவதற்கும் பாடபுத்தகமாக இருந்தது. எனவே, அவரது புகழ் கற்றவர், பயிலும் மாணவர்களிடையே நல்ல உரை ஆசிரியராக பரவியது அவர் சென்ற இடங்களில் எல்லாம் கல்வி கற்பித்தார் எனவே, அன்பான உபசரிப்பைப் பெற்றார். கிழக்கு வங்காள நாட்டில் சமயப் பணியில் ஆர்வமுடைய செல்வர்கள் இருந்தனர் அவர்கள் நிமாயினது இனிமையான பண்பு மற்றும் தனித் தன்மையினால் பெரிதும் கவரப்பட்டார்கள் நிமாயினது கல்வி

கற்பிக்கும் நேர்த்தியினைக் கண்டு வியந்தனர். எனவே, விலை மதிப்பற்ற தங்கள் செல்வத்தை நிமாய்க்கு அளித்தனர். இவ்வாறாக நிமாயின் கிழக்கு வங்கநாட்டுப் பயணம் அவரை புகழ்மிக்கவராகவும் செல்வாக்கு மிக்கவராகவும் மாற்றியது.

இக்கல்விப் பயணத்தின்போது ரகுநாத பட்டரின் தந்தை தபனமிஸ்ரர் என்ற அந்தணர் ஒரு கனவினால் உந்தப்பட்டு நிமாயிடம் வந்தார். அவ்வந்தணர் நிமாயிடம் மனித வாழ்க்கையின் பயன்கள் மற்றும் இறுதிநிலை பற்றிய முடிவினை அறிய வந்திருந்தார். இக்காலத்தில் கடைசி நிலையை மனிதன் அடைவதற்கு ஸ்ரீ கிருஷ்ணரின் நாமங்களைப் பண்ணிசைத்துப் பாடுவதே (சங்கீர்த்தனம்) ஒரே வழி என ஐயமற்ற தெளிவான சொற்கள் மூலமாக அந்த அந்தணருக்குத் தெளிவு செய்தார். முக்தியை அடைவதற்கு வேறு வழி இல்லை. அவ்வந்தணரது ஆன்மீக முன்னேற்றத்திற்காகவும் மன மேம்பாட்டிற்காகவும் வாரணாசியில் சென்று தங்குமாறு நிமாய் அவரிடம் கேட்டுக் கொண்டார். இந்த தபனமிஸ்ரர் பின்னாளில் சைதன்யரின் மீது தீவிர பற்று கொண்ட சீடராக மாறினார்.

நிமாய் கிழக்கு வங்க நாட்டில் பயணம் மேற்கொண்டு இருந்தார். அச்சமயம் அவரது துணைவியார் லெஷ்மிதேவி நவத்வீபத்தில் அவளது மாமனார் வீட்டில் பாம்பு கடித்ததால் திடீரென மரணமடைந்தார். இந்த எதிர்பாராத இடையூறு நிமாயை மீண்டும் நவத்வீபத்திற்கு அழைத்து வந்தது. நிமாய் கற்பித்ததன் மூலம் அவரது மாணவர்கள் மற்றும் அன்புச் சீடர்களால் அளிக்கப்பட்ட திரளான செல்வத்துடன் வீடு திரும்பினார். லெஷ்மிதேவியின் திடீர் மறைவு கணவர் மற்றும் மாமியாரை வருத்தமடையச் செய்தது. இருந்தபோதிலும் தாயாரின் வேண்டுகோளுக்கு இணங்கி இரண்டாவது திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார். அரசவைப் பண்டிதர் சந்தான மிஸ்ரரின் புதல்வி விஷ்ணுபிரியா தேவியை இரண்டாவது தாரமாக மணந்து கொண்டார். இது ஒரு பிரம்மாண்டமான திருமணமாக அமைந்தது. நவத்வீபத்தைச் சார்ந்த செல்வமிக்க சீமானான புத்திமந்தக்கான் அனைத்து செலவுகளையும் தாமே மேற்கொண்டார். விஷ்ணுப்பிரியா தனது கணவனுக்கு ஏற்ற வகையில் அழகாக இருந்தது ஓர் அரிய பொருத்தமாக இருந்தது. மேலும் அவரது துணைவியாரின் தனிச்சிறப்பு யாதெனில்

இரக்கம், பரிவு, அறச்செயல்களில் விருப்பம் மற்றும் தன்னலமற்ற பக்தி ஆகிய மனித நேயத் தகுதிகளை அவர் பெற்றிருந்தார்.

நவத்வீபத்தின் முன்னணிப் புலவராக நிமாய் திகழ்ந்தார். அவர் புகழ் ஏணியின் உச்சியில் இருந்தார். எனவே, மறைந்த தனது தந்தை மற்றும் முன்னோர்களுக்கு ஈமக்கிரியை செய்ய விரும்பினார். ஆகவே, சில மாணவர்களுடன் கயாவிற்குப் பயணமானார். பகால்பூர் எனும் இடத்தில் உள்ள மந்தார குன்றுகளில் உள்ள புராதனம் வாய்ந்த புனித ஸ்ரீமதுசூதனர் சிலையை வணங்கினார். அங்கு வந்தவுடன் அவர் ஆலய கருவறைக்குள் நுழைந்தார். அங்கு அமைந்திருந்த இறைவர் கடாதரின் பாத கமலங்களைக் காண விழைந்தார். அச்சமயம் அந்தண குருமார்கள் இறைவனை சூழ்ந்து இருந்து இறைவனின் புகழ் பாடினர். இதனைக் கேட்ட நிமாய் தன்னிலை மறந்தார். அவர் நிலையான பேரின்பத்தில் திளைத்தார். அவர் மெய்ம் மறந்த நிலையில் இருந்தபோது அவர் உடலில் இருந்து எட்டு வகையான குறியீடுகள் தோன்றின. அவை தனிச்சிறப்பு வாய்ந்தவை. அதனைக் கண்ட குழுமியிருந்த அந்தணர்களுக்கு மகிழ்ச்சியும் ஆச்சரியமும் ஒருங்கே ஏற்பட்டன. அந்நேரத்தில் ஸ்ரீ ஈஸ்வரபுரி அங்கு வந்து சேர்ந்தார். அவர் முன்பு மாயாபுரத்தில் நிமாயால் பாராட்டப் பட்டவர். தன்னிலை மறந்த நிலையில் இருந்த நிமாயைக் கண்டதும் ஈஸ்வரபுரி அளவிலா ஆனந்தம் அடைந்தார். இருவரும் ஒருவரையொருவர் நெஞ்சாரத் தழுவிக் கொண்டனர். கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ஒருவரை யொருவர் வாழ்த்திக் கொண்டனர். உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருந்த நிமாய், ஈஸ்வரபுரியிடம் கீழ்கண்டச் சொற்களைக் கூறினார்.

உன்னைப்போன்ற பெருஞ்சீடர்கள் புனிதத் தலங்கள்போல் ஆவர். ஏனென்றால் இறைவன் கடாதரர் எப்பொழுதும் பக்தர்களின் இதயங்களில் குடிகொண்டுள்ளார். எனவே, அச்சீடர்களின் தலயாத்திரை அவர்களை மேலும் புனித மாக்குகிறது. அச்சீடர்களுக்குத் தல யாத்திரை தேவையில்லை. நினது பாதக்கமலங்கள் அனைத்து புனிதக் தலங்களின் கருவறையாகும். நீ கருணை உள்ளவனாக இருப்பாயாக. 'ஓ ஈஸ்வர புரீ! நீ என் அகக்கண்களைத் திறந்து உள்ளாய். இவ்வுலக மக்கள் அறியாமை இருளில் காலம் காலமாக மூழ்கியுள்ளார்கள்.

அவர்களின் துயரைப் போக்குவதற்கு சம்சார பந்தத்திலிருந்து விடுபட போதிய அறிவினை அளிப்பதற்கு நான் செய்திகளை கூற வேண்டும் என நீ பிரியப்படுகிறாய்.

நிமாயினது வேண்டுகோளுக்கு ஈஸ்வரபுரி இவ்வாறாக விடை கூறினார் 'ஏ பண்டிதரே! "தங்களது நேர்த்தியான தனித்தன்மை, ஈடு இணையற்ற புலமை மற்றும் களங்கமற்ற நல்ல குணம் முதலியன எனக்கு சொல்ல ஒண்ணாத ஆனந்தத்தைத் தருகிறது. தாங்கள் கடவுளைத் தவிர வேறு யாரும் அல்லர் என எண்ணத் தோன்றுகிறது. தங்களை நான் மாயாபுரியில் சந்தித்தேன். அன்றிலிருந்து கவர்ச்சியான தங்களின் தனித்தன்மை மற்றும் இனிமையான அன்பு நடத்தை தவிர வேறு எதையும் நான் சிந்திக்கவில்லை. அவை எனது உள்ளத்தில் நிறைந்துள்ளது."

ஈஸ்வரபுரியிடமிருந்து நிமாய் தனது ஆன்மீக வாழ்வின் துவக்கத்திற்குப் பிரார்த்தனை செய்தார். ஈஸ்வரபுரி சொல்லிக் கொடுத்தப் பத்து எழுத்துக்களைக் கொண்ட கோபால மந்திரத்தினை நிமாய் தியானம் செய்தார். எனவே, நிமாய் தாமாகவே கிருஷ்ணனை நினைத்து இறை அன்பில் திளைத்தார். நிமாய் ஒரு குருவிடமிருந்து எவ்வித உந்துதலையும் பெறவில்லை. இருந்த போதிலும், ஒரு குருவிடமிருந்து பெற்ற தாக்கம்போல எளிமையாக மக்களுக்குப்புரியும் வகையில் குருவாக இறை லீலைகளைக் காட்டினார். மக்களும் ஒரு உண்மையான குருவிடமிருந்து (சத்குரு) கிருஷ்ணனின் அன்பைப் (கிருஷ்ணபிரேமா) பெற விரும்பினர். அவரது செயல் ஓர் உந்து சக்தியாக அமைந்தது. கிருஷ்ண பிரேமா இன்றியமையாத சேவையாக அமைந்தது. அதன் மூலம் முக்தி அடைய விரும்பினர். என்வே, மக்கள் நிபந்தனையற்ற ஆன்ம சமர்ப்பணத்திற்குத் தயாராயினர்

நிமாயின் நடத்தையில் இத்துவக்கம் ஒரு முழு மாற்றத்தை ஏற்படுத்தியது ஸ்ரீகிருஷ்ணருக்காக இறையன்பால் அவர் உள்ளம் நிறைந்து இருந்தது திடீரென்று தொடப் பெற்ற மந்திரக்கோல் போல அவரது உள்ள உணர்வு வெளிப்படலாயிற்று. அவர் எல்லா இடங்களிலும் ஒவ்வொரு வினாடியிலும் கிருஷ்ணரைக் கண்டார் ஸ்ரீ கிருஷ்ணரைக் காண வேண்டும் என்ற வெறி அதிகமாக இருந்தது. நிமாய் கயாவிலிருந்து திரும்பும்போது ராஜ்மஹாலுக்கு

அருகே கானைனாட்ஷாலா எனும் இடத்தில் அமைந்த அவரது அன்பான கிருஷ்ணரை தரிசித்தார். ஆனால் அந்த கிருஷ்ணரின் பிரிவால் உள்ளத்தில் உண்டான துயரத்தை அத்வைதாச்சாரியார் ஸ்ரீவாஸா, முராரிகுப்தா, முகுந்த குப்தா, கடாதரர் ஆகிய ஏனைய அனைத்து சீடர்களுக்கும் தெரிவித்தார். தமது அன்பான கிருஷ்ணரை எவ்வாறு எங்கு எப்பொழுது காண முடியும்? என்று கேட்டார். கிருஷ்ணரது பிரிவு அவருக்கு நடைப்பிண வாழ்க்கையாக அமைந்தது. புனிதமான கிருஷ்ணருடைய நாமாவளியைச் சொல்லுவதே சிறந்த பாடம் என்று மாணவர்களுக்குக் கூறினார். மேலும் அவரே கிருஷ்ண கீர்த்தனைங்களைப் பண்ணிசைத்துப் பாட மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தார். அவர்களது தாயிடம் வரையறைக்கு உட்பட்ட ஆன்மா (ஜீவாத்மா)க்களின் அச்சம்தரும் துயரங்களை விளக்கினார். அவை தாயின் கருப்பையில் மீண்டும் மீண்டும் பிறப்பு மறு பிறப்பு என்று தோன்றக் கூடியவை. அவர் ஸ்ரீகிருஷ்ணரின் நாமத்தினை இடைவிடாது இன்னிசைத்துப் பாடுமாறு தனது தாயாரைக் கேட்டுக் கொண்டார்.

தனது நவத்வீபத்துச் சீடர்களுடன் ஸ்ரீகிருஷ்ணரின் புனித நாமாவளிகளைக் கூறிய வண்ணம் நிமாய் ஸ்ரீவாஸரின் வீட்டில் இரவு முழுவதும் பொழுதைக் கழித்தார். இந்த இரவு நேர இன்னிசை கூட்டு வழிபாடு உண்மையான சீடர்களின் துணையுடன் ஓராண்டு தொடர்ந்தது. அந்நிகழ்ச்சி சீடர்களை ஆனந்தக்கடலில் ஆழ்த்தியது.

இவ்வுலக மக்கள் பக்தியற்ற நிலையில் இருந்தனர். அச்சமயம் அத்வைதாச்சாரியாரின் தலைமையின் கீழ் மக்கள் ஒரு நிலைக்குக் கொண்டு வரப்பட்டனர். வைணவர்கள் அவரது தெய்வத்தன்மையினை உடனடியாக வெளிக் கொணருமாறு வேண்டினார்கள்: அதன்படி நிமாயும் ஸ்ரீவாஸருடைய விஷ்ணு கோயிலில் தாமே கடவுளாக ஒரு நாள் விளங்கினார். பின்னர் அவர்கள் கேட்ட வரங்களை வழங்கினார். அது கடவுளின் மதிப்பு வாய்ந்த வெளிப்பாடாக கருதப்படுகிறது. அது கிட்டத்தட்ட 21 மணி நேரம் நீடித்தது. ஏழை ஸ்ரீதரன் வருந்தி வேண்டிய வரம் அதாவது சைதன்யரின் இடையறாத சேவை, ஹரிதாசருக்குப் பிரகலாதனாகத் தாமே காட்சி அளித்துத் தந்த பரிசு, சுசீ (நற்பேறுடையவள்) என்று அழைக்கப்பட்ட ஸ்ரீவாஸரின்

வேலைக்காரி பெற்ற ஆசிகள் முதலியன உலகத்தாரின் பார்வையில் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தன. இறையருள் ஏழைகளின் ஏழைகளாகக் கருதப்படுவோர் மீது வீசப்பட்டது. இறைவனின் உண்மையான பக்தனுக்கு (அவன் அல்லது அவள்) இறைச் செல்வம் அளிக்கப்படும். நான்கே வயதான நாராயணீ என்று ஸ்ரீவாஸரின் மருமகள் மற்றும் சைதன்ய பாகவதத்தை இயற்றிய பிருந்தாவனதாஸரின் தாயார் ஆகியோர் சைதன்யர் இறைவனின் பிரசாதத்தைப் பெறும்பேறு பெற்றனர். இது சொர்க்கத்தில் இருக்கும் அநேகம் பேருக்குக்கிட்டாத அரிய பேறாகும்.

நித்யானந்தர் சைதன்யருடன் இணைந்து ஸ்ரீகிருஷ்ணரின் புனித நாமாவளியினைப் பரப்பினார். இது வைணவர்களின் வரலாற்றில் ஒரு குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சியாகும். சைதன்யரால் ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீகிருஷ்ண நாமாவளி இசைப்பண்ணோடு சேர்ந்து எல்லா திசைகளிலும் பரவியது. அப்பொழுது சைதன்யரின் மாற்று நானாகக் கருதப்படும் நித்யானந்தர் அவருடன் இணைந்தார். நித்யானந்தர் உச்ச இறைவனாம் ஸ்ரீகிருஷ்ணரினைக் காணும் வேட்கையில் இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டார். ஹரிதாசருடன் ஆன்மீகப் பயணத்தினை நித்யானந்தர் விரும்பி ஏற்றுக் கொண்டார். அப்பொழுது அவர்கள் நாத்திகர்களால் பல சொல்லமுடியாத துன்பங்களுக்கு ஆளாக நேர்ந்தது.

சைதன்யர் தினமும் ஸ்ரீவாஸரின் வீட்டில் இரவு நேரங்களில் ஸ்ரீகிருஷ்ண நாமாவளிகளை (நாமயக்ஞம்) தொடர்ந்து நடத்தி வந்தார். இசைப்பண் நடத்தப்படும்பொழுது ஸ்ரீவாஸரின் வீட்டு வளாகத்தில் எவ்விதமான தேவையற்ற ஊடுருவல்களும் அனுமதிக்கப்படவில்லை. ஸ்ரீவாஸரின் மாமியார் பக்தி மார்க்க கொள்கைக்கு எதிராக செயல்பட்டார். அதன் காரணமாக அவர் தாமாகவே ஒருபுறம் அமர்ந்து இருந்தார். இருந்தபோதிலும் ஸ்ரீவாஸர் அவரை அனுமதிக்கவில்லை. ஸ்ரீவாஸர் மாமியாரும் வெளியேற்றப்பட்டார். கெடுமதி கொண்ட மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனை அறிந்த அவர்கள் சைதன்ய சீடர்களின் அப்பழுக்கற்ற நடத்தைக்கு எதிராக அவதூறு கூறினார். அதனைச் சைதன்ய சீடர்கள் பொருட்படுத்தவில்லை. இவ்வாறாக ஓர் அந்தணருக்கு கூட்டு

வழிபாட்டில் பங்குகொள்ள அனுமதி மறுக்கப்பட்டது. அவ்வந்தணர் இழி சொற்கள் பேசும் வழக்கம் உள்ளவர். அவர் சைதன்யரிடம் சீற்றம் கொண்டார். கோபத்தில் பூணூலை அறுத்து எறிந்தார். இப்பூவுலகில் சைதன்யரின் ஆட்டம் .ஒரு முடிவுக்கு வந்துவிடும் என்று சாபம் கொடுத்தார். சைதன்யரும் பெருமையுடனும் பொறுமையுடனும் அப்பழி சொற்களை ஏற்றுக் கொண்டார்.

இந்நாட்களில் சைதன்யர் கிருஷ்ணரின் புனித நாமாவளிகளைப் பண்ணிசைத்துப் பாடினார். தமது சீடர்களுடன் ஆடிப்பாடி பரவசம் அடைந்தார். அவ்வாறாக மெய்ம்மறந்த நிலையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். திடீரென ஓர் இரவில் ஸ்ரீவாஸரின் ஒரே மகன் மரணம் அடைந்தார். அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்களால் துக்கத்தை தாங்க இயலவில்லை. இருப்பினும் சைதன்யரின் பக்திப் பரவசம் பாதிக்கப்படக்கூடாது என எண்ணினர். எனவே, அழுகை ஒலியினைக் கட்டுப்படுத்தினர். ஸ்ரீ வாஸர் சைதன்யரிடம் அதிக அன்பு செலுத்தினார். எனவே, தனது ஒரே மகன் மறைந்தும் கூட தன் கட்டுப்பாட்டினை இழக்கவில்லை. அகால மரணம் ஏற்பட்ட நிலையில் கூட தன் பொறுமையினை இழக்கவில்லை. சைதன்யரும் இந்த எதிர்பாராத இடையூறை பின்னிரவில் உணர்ந்தார். பின்னர் தனது நண்பர்களுடன் அந்த இடத்தை அடைந்தார். அன்னாரது பிரிவால் வாடும் குடும்பத்தினரை தேற்றினார். இதனால் ஸ்ரீவாஸர் குடும்ப உறுப்பினர்கள் துக்கத்திலிருந்து மீண்டார்கள்.

நித்தியானந்தரும் ஹரிதாசரும் இறைவனது அன்பின் சித்தாந்தக் கூறுகளைப் பரப்பினர். அச்சமயம் அவர்கள் அநேக இன்னல்களைச் சந்தித்தனர். அவர்கள் தங்கள் மதநெறிகளைப் பரப்பும்பொழுது ஜெகாய், மாதாய் போன்றோரை எதிர்கொண்டனர். ஜெகாய், மாதாய் ஆகிய இருவரும் வைணவர்களுக்கு எதிராக அநேக தீமைகளைச் செய்தனர். அவை அச்சம் தரத்தக்க வகையில் அமைந்தன. இவை தவிர வேறு எந்த பாவங்களையும் அவர்கள் செய்யவில்லை. ஸ்ரீ ஹரியின் புனிதநாமாவளிகளைக் கேட்டவுடன் அவர்கள் இறைவனது அன்பினை எளிய முறையில் எடுத்துக்கூறும் ஏதுமறியா சமய பரப்பாளர்களை ஏவுகணைகள் கொண்டு தாக்கினர். அதன் விளைவாக நித்யானந்தரின் நெற்றியிலிருந்து அதிக இரத்தம்

வெளியேறியது. இச்செய்தி உடனே சைதன்யருக்குத் தெரிவிக்கப் பட்டது. சைதன்யர் அந்த இடத்திற்கு விரைந்தார். குற்றவாளிகளை உடனே தண்டிக்க நினைத்தார். நித்யானந்தர் அவருடன் பேசி அந்த குற்றவாளிகளை மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டார். முடிவாக அவரது அளவு கடந்த கருணையினால் வசப்படுத்தப் பட்ட அக்கயவர்கள் சைதன்யரின் நம்பிக்கைக்குரிய சீடர்களாக மாறினார்கள். இவ்வாறாக இரும்பு சொக்கத் தங்கமாக நிலை மாறியது. அதற்குக் காரணம் அந்த ஞானியின் செய்கையே ஆகும். ஜெகாய் மாதாய் ஆகியோரின் மாற்றம் பெரு வியப்பினை அளித்தது. இது நித்தியானந்தர் இரத்தம் சிந்திய காரணத்தினால் உருவானது. இது சைதன்யருக்கும் அவரது தோழமைக்கும் அதிக பாராட்டுதல்களைப் பெற்றுத் தந்தது.

சைதன்யரின் ஆசிகளைப் பெற இயலாத நிலையில் அத்வைதாச்சாரியார் அதிக மனத்துயரம் கொண்டார். அவரது கருணையைப் பெறுவதற்கு ஒரு திட்டம் தீட்டினார். இந்த ஆசையினை மனத்தில் வைத்துக் கொண்டு அவர் தனது சொந்த ஊரான சாந்திபூர் எனும் இடத்தை அடைந்தார். அங்கு தமது சீடர்களுக்குச் சங்கராச்சாரியரின் கோட்பாடுகளை விவரமாக எடுத்து உரைக்கத் துவங்கினார். அக்கோட்பாடுகள் மாயை சம்பந்தப்பட்டவை. இதனை அறிந்த சைதன்யர் அந்த இடத்திற்கு விரைந்து வந்தார். மேலும் கோபம் கொண்டு தன்னிலை மறந்து அவரை அடிக்க முற்பட்டார். பின்னர் கூறலானார். "ஆச்சாரியரே, உத்தம மனிதராம் ஸ்ரீகிருஷ்ண பக்தியினைக் காட்டிலும் வறண்ட மறையியல் சார்ந்த ஞானம் மேம்பட்டது என ஏன் தங்களுக்குத் தோன்றியது? இந்த காரணத்திற்காகவா தாங்கள் எனது மேம்பட்ட பிருந்தாவன ஆட்சிக்குள் வந்து வேண்டி நின்றீர்கள்? எனக்கு எதிராக ஏன் செயல்பட வேண்டும்?" ஸ்ரீ சைதன்யரின் அன்பான வார்த்தைகளினால் ஆச்சாரியரது மனம் ஆனந்தம் அடைந்தது. இவ்வாறாக அத்வைதரின் ஆசை நிறைவேறியது. மேற்கூறிய நிகழ்ச்சி கூறும் கருத்து யாதெனில் சைதன்யர் இவ்வுலகம் முழுவதும் இறையன்பு எனப்படும் மதத்தினைத் தோற்றுவிக்க அவதரித்துள்ளார். அவர் அத்வைதாச்சாரியாரையும் விட்டுவைக்கவில்லை. சைதன்யர் அத்வைதாச்சாரியாரை மிகவும் விரும்பினார். (ஏனையோரைப் பற்றிக் கூறவே வேண்டாம்). இவ்வாறாக தூய பக்திப் பாதையிலிருந்து சைதன்யரின்

கோட்பாட்டிற்கு எதிராக ஆச்சாரியார் மக்களை திசை திருப்ப முயல்வதை அறிந்தார். இவ்வாறாக இறையன்பின் சிறந்த மதப்போதகராக சைதன்யர் வெளிப்பட்டார்.

இதற்கிடையில் சிட்டகாங்கின் புண்டரீக வித்யாநிதி மாயாபுரத்தைச் சுற்றிப் பார்க்க வந்தார். அவர் தீவிர கிருஷ்ண பக்தர். புண்டரீகரின் வருகை தன்னை மறந்த நிலையில் இருந்த சைதன்யரால் அவரது சீடர்களுக்கு தெரிவு செய்யப்பட்டது. வித்யாநிதி மிகச் சிறந்த பக்தராக விளங்கினார். ஆனால் அவரது பகட்டான புறத்தோற்றத்தின் மூலம் அவரது இயல்பான அன்பின் ஆற்றலை கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தது. பெரும்பாலும் அதிகமான பக்தியில் ஈடுபட்ட ஆன்மீக மக்கள் தங்களது புறத்தோற்றம் மற்றும் மயக்கும் செய்கைகள் மூலமாக தாமே பொதுமக்கள் பார்வையிலிருந்து விலகி நிற்பர். முகுந்தர் வித்யா நிதியை முன்பே அறிந்தவர். எனவே, தனது நெருக்கமான நண்பரான கடாதரர் துணையுடன் அவரைப் பார்க்கச் சென்றார். கடாதரர் தமது வாழ்நாள் முழுவதும் மனத்தால் துறவறம் மேற்கொண்டவர். அவர் இவ்வுலகப்பற்றிலிருந்து விடுபட்டவர் அவர் புண்டரீக வித்யாநிதி, உலகப் பற்றுள்ளவர் என நினைத்து அவருக்கெதிராக ஒரு தவறு செய்தார். அந்த தவறிலிருந்து கடாதரரை மீட்பதற்கு முகுந்தர் ஸ்ரீமத்பாகவதத்தில் இருந்து ஒரு சுலோகத்தினை மேற்கோள் காட்டினார் வித்யாநிதியின் அன்பு கிருஷ்ணரிடம் எவ்வளவு ஆழமாக இருந்தது, என்பதனை அச்செயலால் உணர முடிந்தது. அந்த சுலோகத்தைக் கேட்டவுடன் வித்யாநிதி தன்நிலை மறந்தார்; பக்திப் பரவசம் அடைந்தார் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார். அவரது உடலில் தெய்வீக உணர்வின் குறியீடுகள் தாமாகவே தோன்றின வித்யாநிதிக்கு எதிராகத் தான் செய்த தவறை உணர்ந்த கடாதரர் அதனை சரிசெய்ய எண்ணினார். எனவே, தாமாகவே சைதன்யரிடம் சென்று அவரது அன்பான வேண்டுகோளை வெளிப்படுத்தினார் சைதன்யரும் அதற்கு ஒத்துக் கொண்டார். பின்னர் கிருஷ்ணர்மீது வித்யாநிதி கொண்ட கள்ளம் கபடமற்ற அன்பின் அடையாளமாக அவருக்கு பிரேமநிதி (அன்பின் கருவூலம்) என்ற பட்டம் சைதன்யரால் வழங்கப்பட்டது.

ஓர் இரவில் சைதன்யர் ஈடு இணையற்ற நாடகத்தினை நடத்தினார். அச்செயல் திட்டம் இறைவனுக்காக அர்ப்பணிக்கப்

பட்டது. தானலீலா என்று கருதப்பட்டது. அந்த நாடகம் சைதன்யரின் மூத்த சீடர்களில் ஒருவரான சந்திர சேகராச்சாரியா அவர்கள் வீட்டில் நடைபெற்றது. அந்நாடகத்தில் ஸ்ரீ அத்வைதாசாரியார், நித்யாநந்தர், ஸ்ரீவாஸர், ஹரிதாசர், கடாதரர் போன்றோர் நடிகர்களாக இருந்தனர். சைதன்யரிடம் இறையன்பு இருந்தது. அதனை உந்து சக்தியாகக் கொண்டு ஒவ்வொருவரும் மேடையில் தங்கள் பங்கினைச் செய்தனர். சைதன்யர் துவாரகை நாட்டு மன்னரான கிருஷ்ணரின் துணைவியான ருக்மணி வேடத்தில் நடித்தார். இது வங்காள மொழி மற்றும் இலக்கியத்தின் அற்புதமான செயலாகும்.

தேவநந்தர் என்பவர் குலியா (நவத்வீபா என்னும் இடத்தில் உள்ள ஒன்பது தீவுகளில் ஒன்று) என்ற இடத்தில் ஒரு பாடசாலையினை நடத்தி வந்தார். அங்கு வரும் பெரிய கூட்டத்திற்கு முன்பு அவர் பாகவதத்தினைப் படிப்பது வழக்கம். ஒரு நாள் தேவநந்தரின் பாகவத உரையை கேட்பதற்கு ஸ்ரீவாஸர் அங்கு வந்திருந்தார். ஸ்ரீகிருஷ்ணரின் இறை லீலைகளைக் (கிருஷ்ணலீலைகளை) கேட்டவுடன் ஸ்ரீவாஸர் தன்னிலை மறந்தார். இறையன்பில் மூழ்கினார். கிருஷ்ணரின் பிரிவில் அழத்துவங்கினார். தேவநந்தரால் இதனை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவர் அதனை ஒரு தொல்லையாகக் கருதியதால் ஸ்ரீவாஸரின் செய்கையை விரும்பவில்லை. எனவே தம் மாணவர்கள் மூலமாக அவரைப் பழித்து உரைத்து வளாகத்திற்கு வெளியே அனுப்பினார். மற்றொரு முறை தேவநந்தர் பாகவதம் பாராயணம் செய்து கொண்டிருந்தபோது சைதன்யர் அவ்வழியே செல்ல நேர்ந்தது. சைதன்யர் கோபமடைந்து அவ்விடத்திற்குச் சென்று தேவநந்தரிடம் கூறியது யாதெனில், பாகவதத்தை பாராயணம் செய்ய உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது? தவறான விளக்கங்களை தந்து மக்களை ஏன் ஏமாற்ற வேண்டும்? இப்புத்தகம் இறைவன் சம்பந்தப்பட்டது என அவர் அறியவில்லை. சாதாரண மனிதர்களின் நிலைக்கு அப்பாற்பட்டு இருப்பது ஆகும். ஒரு பக்தரால்தான் இதனை உணர்ந்து கொள்ள முடியும். தூயசேவை செய்வோர், ஆசானிடம் பக்தி கொண்டோர் மட்டுமே இப்புத்தகத்தின் உண்மையான அர்த்தம் புரியும். தேவநந்தர் மேலே குறிப்பிடப்பட்ட குணநலன்களைப் பெற்றிருக்கவில்லை. ஒருமுறை ஸ்ரீவாஸரை பழித்துப் பேசி தவறு

செய்து விட்டார். இவ்வாறாக சைதன்யர் தேவநந்தரின் செய்கைகளை வன்மையாகக் கண்டித்தார். அது தேவநந்தரின் மனதைப் பெரிதும் உறுத்தியது. அவர் சைதன்யரின் கமலபாதங்களில் விழுந்து வணங்கி மன்னிப்பு கேட்டார். சைதன்யர் ஸ்ரீவாஸரிடம் சென்று மன்னிப்பு கேட்குமாறு கூறினார். அவரும் அவ்வாறே செய்தார். அதிலிருந்து குலியா என்ற பகுதியானது ஒரு வைணவருக்கு எதிராக செய்த குற்றத்திற்கு மன்னிப்பு வழங்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப் பட்டது. (அபராத பஞ்ஜனர் பாத்)

சைதன்யர் தமது சீடர்களுடன் புனித நாமாவளிகளைப் பண்ணிசைத்துப் பாடும் கோட்பாட்டினை முக்கிய நகரங்களிலும் கிராமங்களிலும் பரப்பினார். அச்செயலைத் தன் வாழ்நாள் முழுவதும் கடைபிடித்தார். இதன் விளைவாக ஆயிரக்கணக்கான மக்கள் அவரைப் பின்பற்றத் துவங்கினர். மேலும் அவர்கள் தங்களது ஆன்மா பற்றி அறிந்து கொள்ள இயல்பான ஈடுபாடு கொண்டனர்.

இவரது கோட்பாடுகள் மாபெரும் வெற்றியடைந்தன. அதனால் இவரது பெயரும் புகழும் நாடு முழுவதும் பரவின. மேலும் நவத்வீபம் என்னும் பகுதியைச் சேர்ந்த சில பண்டிதர்கள் பக்தி எதிர்ப்பு அமைப்பினை ஏற்படுத்தினர். இயல்பாகவே அவர்கள் மனதில் கேடான எண்ணங்கள் நிறைந்து இருந்தன. எனவே, நகரத்தின் அக்கால ஆளுநராகி விளங்கிய சந்தகாஸியிடம் (மௌலானா சிராஜ்ஜுதீன்) சைதன்யருக்கு எதிராகப் புகார் கொடுத்தனர். அந்த காஸி வைணவர்களை அதிகம் கொடுமைப் படுத்தினான். அவர்கள் மீது குற்றம் சாட்டினான். புனிதமான நாமாவளிகளைப் பண்ணிசைப்பதனையும், பிரசாரம் செய்வதனையும் ஏளனம் செய்தான். மேலும் சங்கீர்த்தன குழுவினரின் மிருதங்கம் என்று அழைக்கப்படும் மண்ணாலான முரசுகளையும் உடைத்து எறிந்தான். இந்த நிகழ்ச்சி யோகபிதா என்ற இடத்திற்கு வடக்கே சுமார் இருநூறு மீட்டர் தொலைவில் நடந்தது. அவ்விடம் சைதன்யர் அவதரித்த தலமாகும். அப்பகுதி கோல்பாங்கார் டாங்கா என்று இன்றும் கருதப்படுகிறது. அதாவது மண்ணாலான முரசுகள் உடைக்கப்பட்ட பகுதி என அழைக்கப்படுகிறது. பின்னர், அன்று மாலை நேரத்தில் சைதன்யர் சங்கீர்த்தனக் குழுவினரின் மிகப் பெரிய ஊர்வலத்தை நடத்தினார்.

அந்த ஊர்வலத்தினை முறையே ஹரிதாசர், அத்வைதாச்சாரியார் மற்றும் சைதன்யர், நித்யானந்தர் ஆகியோர் மூன்று பிரிவுகளாகத் தலைமை தாங்கி நடத்திச் சென்றனர். அந்த ஊர்வலம் கங்கை நதி செல்லும் வழியாகச் சென்று கங்கா நகர், பரோகோனாகாட் மற்றும் சிமுலியா ஆகிய கிராமங்களைக் கடந்து கடைசியில் காஸியின் வீட்டை அடைந்தது. விண்ணைப்பிளக்கும் புனிதமான நாமாவளிகள் மற்றும் பெரிய ஆர்ப்பாட்டத்தால் பயந்த காஸி வீட்டிற்குள்ளே ஒளிந்து கொண்டார். சைதன்யர் காஸியைக் காணச் சென்றார். காஸி அவர்களை வரவேற்காததைச் சுட்டிக் காட்டினார். காஸி வெளியே வந்து சைதன்யரைச் சந்தித்தார். சைதன்யர் காஸியின் பாதுகாப்பிற்கு உறுதி அளித்தார். எனவே, காஸி சில முக்கிய தலைப்புகளில் சைதன்யருடன் நீண்ட உரையாடல்களை நடத்தினார். அவரது ஆத்திக எதிர்ப்பு பிரச்சாரத்தை கைவிட்டதற்கான காரணத்தினை சைதன்யர் வினவினார் அதற்குக் காஸி விடை கூறினார். அதாவது தூங்கும் பொழுது தமது மார்பில் கோபத்துடன் கூடிய சிங்கமுகம் தாங்கிய மனித உருவத்தின் (நரசிம்மதேவா) கைகளால் பெற்ற நகக்கீறல் தண்டனையை மறைக்காது வெளிப்படுத்தினார். சங்கீர்த்தன குழுவினர் மிருதங்கங்களை உடைத்து எறிந்த இரவிலேயே நரசிம்மதேவர் தோன்றியதாகக் கூறினார். அவரது கடைநிலை ஊழியர்களின் பெயர்கள் கிருஷ்ணர், இராமர், ஹரி என்று இருந்ததால் நாளொன்றுக்கு மூன்று முறை கிருஷ்ணா என்ற புனித நாமாவளியை சொன்னதால் மனமாற்றம் ஏற்பட்டதாகக் கூறினார். அவர் சைதன்யரின் கருணைக்காக மன்றாடினார். சைதன்யருக்கு எவ்வித இடையூறும் அளிப்பதில்லை என்று உறுதியாகச் சொன்னார். சைதன்யக் கோட்பாட்டின் உண்மை, அழகு மற்றும் நல்லிணக்கத்தால் ஈர்க்கப்பட்ட காஸி மகிழ்ச்சியுடன் அவரது தலைமையினை ஏற்றுக் கொண்டார். காஸி மற்றும் அவரது சீடர்கள் பல தலைமுறைகளாக சைதன்யரின் சீடர்களாக விளங்கினார்கள். மாயாபுரி அருகே காஸியின் சமாதியை இன்றும் காணலாம். பல யாத்ரிகர்கள் இன்றும் அப்புனித தலத்தைக் காண வருகிறார்கள். சந்த் காஸியின் நிலைமாற்றம் நவத்வீபா பகுதி முழுவதும் ஒரு புல்லரிப்பையும் உந்துதலையும் ஏற்படுத்தியது அதோடு மட்டுமல்லாது ஆயிரக்கணக்கான நம்பிக்கை இல்லாதோரையும் கவர்ந்தது. அவர்கள் சைதன்யரின் நாம சங்கீர்த்தனக் குடையின் கீழ் ஒன்று சேர்ந்தனர்.

காஸியினது நிலைமாற்றத்திற்குப்பிறகு சைதன்யர் நவத்வீபா பகுதியில் உள்ள நெசவாளர்கள் மற்றும் சங்கு விற்போரின் பகுதிகளைக் கடந்து கடைசியில் ஸ்ரீதரின் இருப்பிடத்தை அடைந்தார். ஸ்ரீதரர் ஒரு வாழை இலை வியாபாரி. சைதன்யர் தனக்கே உரிய பாணியில் பழைய இரும்புத் தவலையிலிருந்த நீரை ஒரே மூச்சில் குடித்தார். இதனால் வருத்தமடைந்த ஸ்ரீதரர் 'என்னால் எதுவும் செய்ய முடியவில்லை' என்று புலம்பினார். சைதன்யர் அவருக்கு தமது அன்பு நிறைந்த ஆசிகளை வழங்கினார். மேலும், விஷ்ணு பக்தியானது இரு வைணவ பக்தர்களுக்கு இடையே பாலமாக அமைகிறது. எனவே, வைணவரிடமிருந்த நீரைக் குடித்ததாக சைதன்யர் கூறினார். இந்நிகழ்ச்சி சைதன்யரின் மதி நுட்பத்தினையும், அனைவரது உணர்வுகளையும் மதிக்கும் அவரது பண்பினையும் நிரூபிக்கும் சான்றாக அமைந்தது. இச்சான்று தாமே உருவாக்கிய மதம், நாடு முழுவதும் உருவான பக்தி உணர்வு மற்றும் நாட்டு நலன் ஆகியவற்றில் வெற்றியடைய அவருக்கு உதவியது.

சைதன்யரது அவதாரநோக்கம், நவத்வீபா பகுதியில், நாத்திக மக்களிடையே ஏற்படும் நையாண்டி மற்றும் ஏளனம் முதலியவற்றை உணர்ந்த சைதன்யர் உலக வாழ்வை துறக்க நினைத்தார். தமது எண்ணத்தினை நித்யானந்தர், கடாதரர் மற்றும் ஹரிதாசரிடம் தெளிவாகக் கூறினார். அவரது துறவுக்கோல அங்கியானது அவர்களது கடுமையான இதயங்களையும் மென்மையாக்கும் என்று கூறினார். அவர்கள் பணிவுடனும் மரியாதையுடனும் சைதன்யரது உரையினைக் கேட்டால் அவர்கள் நல்ல நிலையை அடைவர் என்று தெரிவித்தார். அவர் துறவறம் மேற்கொள்ளும் நிகழ்ச்சி நகரத்தில் காட்டுத்தீ போல பரவியது. தாயார் சசிதேவி, அவரது அன்பு மனைவி விஷ்ணுபிரியா மற்றும் அன்புச் சீடர்களான நித்யானந்தர், கடாதரர், ஹரிதாசர், ஸ்ரீவாஸர் முகுந்தர் மற்றும் ஏனையோரை சமாதானப்படுத்தும் சைதன்யரது முயற்சி தோல்வி அடைந்தது. ஒரு குளிர்கால காலை நேரத்தில் உயிருக்கு உயிரான சைதன்யர் அவர்களை விட்டு சென்றதை அனைவரும் உணர்ந்தனர். எந்நேரமும் அவரையே சார்ந்து இருக்கும் சைதன்யரின் தாயாரும் சைதன்யரிடம் பக்தி கொண்டு உள்ள அவரது மனைவியும் அவரது பிரிவினைத் தாங்க மாட்டாமல் அழுது அரற்றினார்கள். இந்நிகழ்ச்சியால்

சைதன்யரிடம் கருத்து மாறுபாடு கொண்டவர்களின் கொடிய மனத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்கள் சைதன்யருக்கும் அவரது சீடர்களுக்கும் இழைத்த அநீதிகளுக்கு மன்னிப்பு கேட்டனர்.

இந்நிகழ்ச்சி சைதன்யரின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு மாற்றத்தை அளித்தது. சைதன்யர் நவத்வீபா பகுதியிலிருந்து 40 கி.மீ. தொலைவில் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கட்வா எனும் இடத்தை கங்கையாற்றினை நீந்திக் கடந்து அடைந்தார். அங்கு பாரதி வழியினைப் பின்பற்றும் கேசவ பாரதி என்ற துறவியிடமிருந்து சந்நியாசம் பெற்றுக் கொண்டார். பின்னர் ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் என்று பெயர் பெற்றார். (அனைவரின் இதயங்களிலும் கிருஷ்ணரின் உணர்வை விழிப்படைய செய்பவர்) இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் பிருந்தாவனத்தை நோக்கி, கிருஷ்ணரைத் தேடி பயணம் மேற்கொண்டார்.

"பண்டை காலத்து முனிவாகள் செய்ததுபோல் நானும் உச்ச இறைவனான முகுந்தனின் கமலத் திருவடிகளை வணங்கி சேவை செய்து பயங்கரமானதும் ஆழமானதுமான பிறவிப் பெருங்கடலைக் கடப்பேன்" என்று உதட்டில் உச்சரித்தபடி சென்றார்."

இராதையின் இடத்தில் (தற்காலத்தில் வர்த்தமானம் எனும் அழைக்கப்படும் பகுதியில்) மூன்று நாட்கள் தொடர்ந்து உணவு மற்றும் ஓய்வு இன்றி தன்னிலை மறந்த நிலையில் கிருஷ்ணரை இரவும் பகலும் தேடினார். கடைசியில் நித்யானந்தரால் உந்தப் பட்டு சாந்திப்பூரில் உள்ள அத்வைதாச்சாரியாரின் இருப்பிடத்தை அடைந்தார். சைதன்யர் அங்கு பத்து நாட்கள் தொடர்ந்து தங்கினார். அங்கு தன்னை மறந்த நிலையில் அளவில்லா ஆனந்தம் அடைந்தார். புனித நாமாவளிகைளப் பண்ணிசைத்துப் பாடினார். நவத்வீபா பகுதியில் இருந்த அவரது தாயாரும், சீடர்களும் சைதன்யரின் பிரிவால் இறக்கும் தருவாயில் இருந்தனர். அவரைக் காணும் வாய்ப்புப் பெற்றவுடன் புத்துயிர் பெற்றனர். அவர் ஒப்பற்ற அழகுடனும் தெய்வீகக் களையுடனும் விளங்கினார். ஆனால் துறவிக்கோ குழந்தை குட்டிகளுடன் நாட்களை கழிக்க விருப்பம் உண்டாகவில்லை. எனவே, சசிதேவி தனது மகன் நிமாய் ஒரிசா பகுதியில் உள்ள பூரி எனும் இடத்தில் தங்குவதை

விரும்பினார். அங்கு நவத்வீபா பகுதியில் உள்ள அவரது அன்பான சீடர்கள் இறைவன் ஜெகன்னாதர் தேரோட்டத் திருவிழா நேரத்தில் சைதன்யரைக் காண வாய்ப்பை பெறுவார்கள் என எண்ணினார்கள்.

இச் செய்தியைக் கேள்விப்பட்டதும் சீடர்கள் அளவற்ற ஆனந்தம் அடைந்தார்கள். ஆனால் இறைவனின் தீர்ப்பு வேறுமாதிரி இருந்தது. மீண்டும் பிரியும் நாள் வந்தது நித்யானந்தர், ஜெகதாநந்தர், முகுந்தர், கடாதரர் மற்றும் பிரம்மானந்தருடன் சைதன்யர் சாந்திபூரிலிருந்து பூரி நோக்கிப் பயணமானார். சைதன்யர் அடிஸாரா, சத்ரபோகா மற்றும் ஜலேஸ்வரா ஆகிய பகுதிகளைக் கடந்து சைதன்யர் பலேஸ்வரம் எனும் இடத்திற்கு அருகேயுள்ள ரெமுனா என்னும் இடத்தில் உள்ள கோபிநாதரைத் தரிசித்தார். கோபிநாத ஆலயத்தில் உள்ள ஊழியர்கள் சைதன்யரின் அன்பைக் கண்டு ஆச்சரியமடைந்தனர். அவருக்கு ஷீரப்பிரசாதத்தினை (பால்பாயசத்தினை) அளித்தனர். அங்கு அவர் ஓர் இரவு தங்கினார். கீர்த்தனைகள் பாடினார். கோபிநாதர் ஆலயத்தில் மங்கள ஆரத்தியை கண்ணார இரசித்து விட்டு மறுநாள் காலை கட்டாக் நகருக்குப் பயணமானார். சைதன்யர் ஜெய்ப்பூர் மார்க்கமாக கட்டாக் வந்தடைந்தார். அங்கு சாக்ஷி கோபாலனைக் கண்டார். அவரது இணையற்ற அழகு அவரை ஆனந்தப் பரவசத்தில் மூழ்கடித்தது. எனவே, தன்னிலை மறந்து பாடத்துவங்கினார். இது கோபாலரின் ஊழியர்களை வியப்பில் ஆழ்த்தியது. தமது சீடர்களுடன் கட்டக்கிலிருந்து புவனேஸ்வரா மற்றும் அதாரனாலா மார்க்கமாக பூரியினை வந்தடைந்தார். ஸ்ரீ ஜெகன்னாத தேவரின் மிகப் பெரிய கோயிலை அடைந்தவுடன் தமது அன்புக் கிருஷ்ணரின் உருவச்சிலையினைத் தழுவிக் கொள்ள ஓடினார். நீண்ட நாள் பிரிவிற்குப் பின் ஒன்று சேர்வதால் தன்னை மறந்து ஆனந்தப் பரவச நிலையில் மயக்க மடைந்தார். மெய்ம்மறந்த நிலையில் இருந்த சைதன்யரை அதிர்ஷ்டவசமாக அவ்விடத்திற்கு வந்த வாசுதேவ சார்வபௌமர் தம் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார் இதற்கிடையில் பயணத்தில் ஏற்பட்ட விபத்து சீடர்களைப் பின்தங்க வைத்தது. நித்யானந்தர் சைதன்யரின் கைப்பிரம்பை மூன்றாக உடைத்து ஆற்றில் வீசி எறிந்து விட்டார். எனவே, அந்த பகுதி தண்டபங்கா எனும் பெயர் பெற்றது. சைதன்யர் இந்நிகழ்ச்சியால் பாதிக்கப் பட்டார். பின்னர் நித்யானந்தர் மற்றும் ஏனைய சீடர்களிடமிருந்து பிரிந்து வந்தார். எனவே, முன்கூட்டியே பூரி

எனும் இடத்தை அடைந்தார். அவரது சீடர்கள் பூரியினை அடைந்ததும், கோபிநாதாச்சாரியாரைச் சந்தித்தனர். அவர் சைதன்யரின் சீடரும் வாசுதேவ சார்வபௌமரின் மைத்துனரும் ஆவார் அவர் மூலம் சைதன்யர் சார்வ பௌமரின் வீட்டில் இருப்பதை அறிந்து அங்கு அனைவரும் விரைந்தார்கள். சைதன்யர் அவ்விடத்தில் தன்னை மறந்த நிலையில் தரையின் மீது படுத்திருப்பதைக் கண்டனர். பின்னர் அவர்கள் சைதன்யரின் காதுகளில் கிருஷ்ணநாமாவளியினை பண்ணிசைத்துப் பாடினர். அதனைக் கேட்டவுடன் மதிய நேரத்தில் சைதன்யர் சுய உணர்வு பெற்றார். கிட்டத்தட்ட முக்கால் நாள் சைதன்யர் அங்கு தன்னை மறந்த நிலையில் இருந்தார்.

வாசுதேவ சார்வபௌமர் அந்தக் கால இந்தியாவின் தலைசிறந்த அளவைநூல் ஆசான் ஆவார். அவர் உடல் வேறு மனம் வேறு என்பதை ஒத்துக் கொள்ளாதக் கோட்பாட்டை உடைய சங்கராச்சாரிய பள்ளியின் புலமை நிரம்பிய அறிவாழம் வாய்ந்த கல்வியாளர் ஆவார். அவரது பெரும் புலமையினைப் பாராட்டி பிரதாபருத்ரன் என்ற அரசன் தனது அரசவையில் அவைப்புலவர் பதவி கொடுத்து மரியாதை செய்தார். பிரதாபருத்திரன் ஒரிசா பகுதியின் தனித்தன்மை வாய்ந்த சுதந்திர ஆதிக்கம் பெற்ற அரசனாவான். ஸ்ரீ சைதன்யரின் இறைத் தன்மையில் சார்வபௌமர் நம்பிக்கையினைப் பதியச் செய்ய கோபிநாதாச்சாரியார் முயற்சி செய்தார். வெறும் பேச்சை மட்டும் நம்பாத தன்மை வாய்ந்த சார்வபௌமர் சைதன்யரை அறிந்து கொள்ளவில்லை. அவரை சாதாரண துறவியாகவும் விளையாட்டுப் பிள்ளையாகவும் தவறாகக் கருதினார். அக்கல்வியாளர் பிரம்ம சூத்திரத்தின் நூற்பாக்களை அவருக்கு விரிவாக விளக்கிக் காட்டினார். ஒருவார காலம் சங்கர பள்ளியின் தனி நபரைச் சுட்டாத விளக்க வரிகளை விளக்கினார். சைதன்யர் பதிலேதும் கூறாது மௌனமாக இருந்தார். ஏனெனில் சார்வபௌமரின் விளக்கங்கள் இலக்கைவிட்டு விலகிச் சென்றது. சார்வபௌமரும் சைதன்யரிடம் தோன்றிய மாற்றத்தை உணர்ந்தார். பின் அதற்கான காரணத்தை கேட்டார். உடனே சைதன்யர் பூரண இறைமைக் கோட்பாட்டின் அடிப்படையில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் அந்நூற்பாக்களுக்கு விளக்கம் அளித்தார். சைதன்யரின் அழகான அமைதியான விளக்கம் சார்வபௌமரை வியப்பு அடையச் செய்தது. அவர்

உண்மையிலேயே அந்த விளக்கங்களால் கவரப் பட்டார். பின்னர் அவர் முன்பு சார்வபௌமர் தலைகுனிந்து நின்றார். பிறகு சைதன்யரைப் போற்றி அழகான பாசுரங்களை இயற்றினார். சைதன்யரின் பலகோண விளக்கங்கள் சார்வபௌமரின் இதயத்தில் பயபக்தியுடன் கூடிய வியப்பை உருவாக்கியது. அவர் சைதன்யரின் மறுப்பை வேண்டினார். சைதன்யரும் தமது இறையமைப்புக்களைக் காட்டினார். முதலில் நான்கு கைகள் உடைய விஷ்ணு, பின்னர் குழல் ஊதும் கிருஷ்ணரின் வடிவங்களைக் காட்டினார். சைதன்யரின் ஆறு கைகள் கொண்ட வடிவத்தை பூரியில் உள்ள ஜெகன்னாதரின் ஆலயத்தில் இன்றும் காணலாம். இந்த காட்சி காரணமாக சார்வபௌமர் சைதன்யரின் பாத கமலங்களில் விழுந்து வணங்கினார். பின்னர் அவரது தீவிர சீடராக மாறினார். இருந்தபோதிலும் ஒரு சிலர் வாசுதேவ சார்வபௌமர் வைணவஇய கருத்தை ஏற்றுக் கொண்டதை சந்தேகிக்கின்றனர். சார்வபௌமர் வேதாந்தியாக விளங்கியவர். ஆனால் மரபுவழி மதிப்பீட்டின்படி ஆர்வம் மிக்க இளையவரின் பூரண சம்மதத்திற்கு ஒப்புக்கொள்ள மாட்டார் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் சைதன்யர் தமது அறிவு விளக்கத்தினை இறைவன் ஸ்ரீகிருஷ்ணராக வெளிப்படுத்தினார். எனவே, வாசுதேவ சார்வபௌமர் சைதன்யரால் வெல்லப்பட்டார் அற்புதங்களைத் தவிர என்ன பெரும்பாலும் நிகழ்ந்தது எனில் வறண்ட கோட்பாட்டு வழியிலிருந்து பக்தி உணர்ச்சிக்கு சார்வபௌமர் கட்டுப்படுத்தப்பட்டார். இறைமையியல் வாதங்களினால் அல்ல, தடுக்க முடியாத சைதன்யரின் உணர்ச்சி மயமான மதத்தின் தனித்தன்மையால் கடைசியில் வெற்றி கொள்ளப்பட்டார்

சார்வபௌமரின் நிலைமாற்றம் சைதன்யருக்கும் அவரது சீடர்களுக்கும் மிகப் பெரிய வெற்றியாக அமைந்தது இந்நிகழ்ச்சி ஒரிசா பகுதி முழுவதையும் சைதன்யரின் காலடியில் கொண்டு வந்தது. சார்வ பௌமர் பக்தி மார்க்கத்தில் ஈடுபடாதவர். எனவே முதல் சந்திப்பிலேயே அவரால் ரே ராமானந்தரை அறிந்துகொள்ள முடியவில்லை. ரே ராமானந்தர் அந்த காலத்தில் வித்யா நகரப் பகுதிக்கு ஆளுநராக இருந்தவர் மேலும் உச்ச கடவுளாம் ஸ்ரீ கிருஷ்ணரின் ஒரு சிறந்த சீடராகத் திகழ்ந்தவர். சைதன்யர் தெற்கு திசையில் மக்களை மீட்பதற்குப் புறப்பட்டார் சைதன்யர் ரே ராமானந்தரை அங்கு சந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்

தென்னிந்தியாவில் உண்மையான ஆத்திகம் வட இந்தியாவை விட அதிகமாக இருந்தது. கடுமையான சாதிச் சட்டங்களும் குறுகிய சமய மனப்பான்மையும் இதற்குக் காரணங்களாக அமைந்தன. தென்னிந்திய மக்களை இத்தகைய தற்கொலைக்கு ஒப்பான மூட நம்பிக்கையிலிருந்து மீட்பதற்குச் சைதன்யர் தெய்கு நோக்கிப் பயணம் மேற்கொண்டார். அவருடன் கிருஷ்ணதாசர் என்பவரும் கூடவே வந்தார். சைதன்யர் பிரம்மகிரியில் ஆழ்வார் நாதனைச் சந்தித்தார். பின்னர் கஞ்ஜம் மாவட்டத்தில் உள்ள சிகாகோல் எனும் இடத்திற்கு அருகே உள்ள குர்மாசலத்தில் குர்மதேவரையும் சந்தித்தார். அங்கு குர்ம என்ற பெயருடைய அந்தணருக்கும் வாசுதேவர் என்ற பெயரை உடைய அந்தண தொழு நோயாளிக்கும் மீட்பை அளித்தார். விசாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள சிம்ம அசலத்தில் நரசிம்ம தேவரை வணங்கினார். கோதாவரி நதிக்கரையில் சைதன்யர் ரே ராமானந்தரைச் சந்தித்தார். மேலும் அவருடன் ஒரு சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். அது தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது ஆகும். மனிதனின் வாழ்க்கை ஆரம்ப காலம் முதல் முடிவு வரை எவ்வாறு அமைந்துள்ளது என்பது பற்றியும் முக்திநிலை அடைய என்ன வழி? என்பது பற்றியும் விவாதம் நடந்தது.

சைதன்ய சரிதாம்ருதா என்னும் புத்தகத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ள எட்டாவது பகுதியில் இந்த விளக்கவுரை இடம் பெற்றுள்ளது. இது புகழ் வாய்ந்த ஒன்றாகும். வைணவ இய தத்துவ வான மண்டலத்தின் ஒளி வீசும் நட்சத்திரமாக விளங்குகிறது மனித நல மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. இச்சிறந்த உரையாடல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இதில் சைதன்யர் கேள்விகளைக் கேட்கிறார். ரே ராமானந்தர் பதில் சொல்கிறார்.

கேள்வி : 1 உலகிலேயே மிகவும் உயர்ந்த அறிவு எது?

பதில் : கிருஷ்ணபக்தியைத் தவிர வேறு எந்த உண்மை அறிவும் இல்லை.

கேள்வி : 2 ஜீவனின் மிக உயர்ந்த பேரின்பம் எது?

பதில் : கிருஷ்ணரின் சீடராக இருந்து நன்மதிப்பைப் பெறுதல்

கேள்வி : 3 மனித சொத்துக்களின் செல்வமாக கருதப்படுவது எது?

பதில் : எவன் ஸ்ரீ ராதாகிருஷ்ணரிடம் அன்பு செலுத்துகிறானோ அவன் பெரிய பணக்காரனாகக் கருதப்படுகிறான்.

கேள்வி : 4 அனைத்துத் துன்பங்களிலும் கடுமையானது எது?

பதில் : கிருஷ்ணரின் சீடரிடமிருந்து பிரிந்து இருத்தலைக் காட்டிலும் மிகப் பெரிய துன்பம் இல்லை.

கேள்வி : 5 யார் உண்மையிலேயே விடுவிக்கப்பட்டவனாகக் கருதப்படுகிறான்?

பதில் : பூரண இதயத்துடன் கிருஷ்ணரிடம் அன்பு செலுத்துபவனே முதன் முதலில் விடுவிக்கப் படுகிறான்.

கேள்வி : 6 அனைத்து ஆன்மாக்களில் ஒரு ஜீவாத்மாவின் இயற்கை செயலை குறிக்கும் பாடல் எது?

பதில் : இராதா மற்றும் கிருஷ்ணரைக் குறிக்கும் அறிவெல்லை கடந்த காதலிக்கும் பாங்கை தெரிவு செய்யும் அந்தப் பாடல்தான் ஒரு ஜீவாத்மாவின் நிலையான செயலாகத் திகழ்கிறது.

கேள்வி : 7 அனைத்து ஜீவாத்மாக்களிலும் நிலவும் மிக உயர்ந்த நல்ல பண்பு எது?

பதில் : கிருஷ்ணருடைய சீடர்களின் குழுவைவிட வேறு எதுவும் உயர்ந்தது ஆகாது.

கேள்வி : 8 எதை தினமும் அனைவரும் இடைவிடாது தியானிக்க வேண்டும்?

பதில் : நினைவு கொள்ளத்தக்க முக்கியமான விவரங்கள் யாதெனில், நாமாவளிகள், அமைப்புகள், இயல் பான பண்புகள், தோழர்கள் மற்றும் காதலிக்கும் பாங்கு உள்ள ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகள்.

கேள்வி : 9 தியானப் பொருட்களில் எதை ஒவ்வொருவரும் தியானிக்க வேண்டும்?

பதில் : ஸ்ரீ ராதாகிருஷ்ணரின் பாதகமல தியானமே மிகவும் உயர்ந்தது.

கேள்வி : 10 அனைத்தையும் விட்டு விட்டு ஒருவன் எங்கு தங்க வேண்டும்?

பதில் : என்றும் நிலைத்து நிற்கத்தக்க வகையில் ராசலீலை நிகழ்த்திக் காட்டப்பட்ட இடமான பிருந்தாவனம் எனும் புகழ் பெற்ற இடத்தில் தங்க வேண்டும்.

கேள்வி : 11 எப்பொழுதும் கேட்டுக் கொண்டே இருக்கத்தக்க மிகச் சிறந்த பொருள் எது?

பதில் : ஒரு ஜீவனின் காதுகளுக்கு ஸ்ரீராதா கிருஷ்ணரின் காதல் களியாட்டமே அதிக ஆனந்தம் தரத்தக்கதாகும்.

கேள்வி : 12 வழிபாட்டிற்குரிய மிக உயர்ந்த பொருள் எது?

பதில் : மிகவும் போற்றுதற்குரிய இறை தம்பதியான ஸ்ரீராதா கிருஷ்ணரின் புனித நாமமே வழிபாட்டிற்கு உரிய மிக உயர்ந்த பொருளாகும்.

கேள்வி : 13 விடுதலை செய்பவர் மற்றும் மகிழ்ச்சியை அளிப்பவர்கள் ஆகியோர் முறையே பயண இலக்குகளை எவ்வாறு அடைகிறார்கள்?

பதில் : விடுதலை செய்பவர்கள் அசையாத அஃறிணை பொருட்களான கற்கள் போன்ற நிலைபேறு உடைய இயல்புச் சாதனங்களுக்கான இலக்கை அடைகிறார்கள். மேம்பாடு உடையவர்கள் இறைவனது ஆட்சி எல்லையில் அவர்களது தெய்வீக உடலில் வாசம் செய்கிறார்கள்.

இவ்வாறாக சைதன்யர் ரே ராமானந்தருடன் பத்து நாட்கள் ஸ்ரீ கிருஷ்ணர் பற்றிய இனிய விவாதத்தில் ஈடுபட்டார் அவர் ரே ராமானந்தருக்குத் தமது உண்மையான சொரூபத்தினைக்

காட்டினார். அதில் சிருங்கார ரசத்தின் உச்ச உணர்வில் ராதையும் கிருஷ்ணரும் ஒன்றாகத் திகழ்ந்தனர்.

பின்னர் சைதன்யர் குண்டூர் மாவட்டத்தில் உள்ள மங்கலகிரி, கர்நூல் மாவட்டத்தில் உள்ள அஹோபிலம், சித்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பதிக்கும் பயணம் மேற்கொண்டார். பின்னர் தமிழ்ப்பகுதிகளில் உள்ள எல்லா கோயில்களுக்கும் சென்று தரிசனம் செய்தார். மேலும் காஞ்சீபுரம், ஸ்ரீரங்கம், மதுரை, சியாலி, கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் வழிபட்டார். அதன் பின்னர் வர்கலாவிற்கு அருகேயுள்ள ஜெனார்த்தனர் திருவனந்த புரத்திலுள்ள ஸ்ரீ அனந்த பத்மநாபர், திருவட்டார் கிராமத்தில் உள்ள ஆதிகேசவர், குமரி முனையில் உள்ள கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களில் வழிபாடு நடத்தினார். பின்னர் பயஸ்வினிக்குப் பயணமானார். தென்னிந்தியாவில் உள்ள அநேக ஆலயங்களை தரிசித்தார்.

அரங்கக்ஷேத்திரத்தில் (திருச்சிராப்பள்ளி அருகே உள்ள ஸ்ரீரங்கத்தில்) சைதன்யர் நான்கு மாதங்கள் தங்கினார். அச்சமயம் மழைக்காலமாக இருந்தது. சாதுர்மாஸ்ய விரதத்தை மேற்கொண்டார். (சாதுர்மாஸ்யம் என்பது நான்கு மாதங்கள் தொடர்ந்து நிகழ்த்தப்படும் புனித செயல் ஆகும்). சைதன்யர் வைணவ சம்பிரதாயங்களை மேற்கொள்ளும் திருவேங்கட பட்டர் அவர்களின் வீட்டில் தங்கினார். திருவேங்கட பட்டர் இராமனுஜரின் வழிபாட்டு முறையை நடத்தினார் சைதன்யர் ஸ்ரீமத் பாகவதத்தினை அடிப்படையாகக் கொண்டு விவாதம் நடத்தினார் அதனால் வேங்கட பட்டர் குடும்பம் உச்ச கடவுளான ஸ்ரீ கிருஷ்ணர் வழிபாட்டினை மேற்கொண்டனர். கிருஷ்ணரும் நாராயணரும் ஒரே இயல்பானவை, ஒரே கொள்கையினை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் இறை அன்பில் கிருஷ்ணர் நாராயணனை விட ஒருபடி மேலாக விளங்குகிறார். கோபால பட்டர் வேங்கடரின் புதல்வராவார். அவர் ஆறு கோஸ்வாமிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். பிருந்தாவனத்துத் தூய நினைவில் நிலைத்து இருக்கிறார்.

சைதன்யர் மைசூரில் உள்ள சிருங்கேரி எனும் தலத்தை தரிசனம் செய்தார் பின்னர் தென் கர்னாடகப் பகுதியைச் சேர்ந்த

உடுப்பி, வட கர்னாடகத்தைச் சார்ந்த கோகர்னா மற்றும் மேற்குக் கடற்கரையில் அமைந்து உள்ள அனைத்து ஆலயங்களையும் வழிபட்டார். அவரது தென்னிந்தியப் பயணம் குறுகியதாக அமைந்தது. அந்நேரத்தில் கௌடிய வைணவ இயத்தைச் சார்ந்த இரு இலக்கிய படைப்புகளை முயன்று பெற்றார். அவை விலை மதிப்பு வாய்ந்தவையாகும். அவையாவன :

1. (திருவாங்கூர் கேரளா) திருவட்டாரை ஆதிகேசவ ஆலயத்தில் இருந்து பெற்ற பிரம்மசம்ஹிதை மற்றும்

2. கிருஷ்ண வென்வாவிடமிருந்து பெற்ற கிருஷ்ண கர்ணாம்ருதம்.

சைதன்யர் சென்ற இடங்களில் எல்லாம் ஸ்ரீ கிருஷ்ண நாமவளியின் மேன்மையையும், பக்தியின் பல்வேறு நிலைகளையும் போதனை செய்தார். மேலும் புத்தர்களையும் சமணர்களையும் மாயாவாதிகளையும் ஸ்மார்த்தர்களையும் உச்ச கடவுளாம் ஸ்ரீ கிருஷ்ணரின் தூய பக்தி வழிக்கு மாற்றினார்.

சைதன்யர் வித்யாரண்யம், ஆழ்வார் நாதம் ஆகிய பகுதிகளின் வழியாக பூரியினைச் சென்று அடைந்தார். அந்த இடத்தில் நித்யானந்தர், ஜெகதானந்தர் மற்றும் வாசுதேவ சார்வ பௌமர் ஆகியோரைச் சந்தித்தார். அங்கு அவர் சார்வபௌமரைப் பாராட்டிப் பேசினார். சைதன்யர் தங்குவதற்கு காசிமிஸ்ரரின் வீட்டை சார்வபௌமர் ஏற்பாடு செய்து இருந்தார். சைதன்யருக்கு ஒரிசாவில் உள்ள சீடர்களை அறிமுகம் செய்தார். அவர்களில் காசி மிஸ்ரர், ரே ராமானந்தர், பரமானந்தபுரி கோவிந்தபுரி (ஈஸ்வரபுரி பகுதியைச் சேர்ந்த சீடர்) ஆகியோர் அடங்குவர். பிரம்மானந்த பாரதி என்பவர் தமது உயர்ந்த ஆடையினை அப்புறப்படுத்தினார். பின்னர் காவிவுடை அணிந்து சைதன்யரைச் சந்திப்பதற்கு பூரியினை அடைந்தார்.

நவத்வீபா எனும் பகுதியில் இருந்த புருஷோத்தம பட்டாச்சாரியா என்பவர் சைதன்யரின் நெருக்கமான தோழராவார். அவர் சைதன்யரின் சந்நியாசக் கோலத்தை அறிந்தார். எனவே அவர் உலக வாழ்க்கையைத் துறந்து சந்நியாசியானார். வாரணாசியில் இருந்த தமது குருவான சைதன்ய ஆனந்தரிடமிருந்து சந்நியாசம் வாங்கிக் கொண்டார். ஸ்ரீதாமோதர ஸ்வருபராக அவர் பெயர் பெற்றார். அவர் வேதாந்தத்தில் சிறந்த புலமை பெற்றிருந்தார். அவர் சிறந்த

நடுநிலையாளராக விளங்கினார். அவர் கிருஷ்ணர் மீது அதிக பக்தி கொண்டு இருந்தார். எனவே, அவர் கிருஷ்ண பக்தியில் சைதன்யருக்கு அடுத்த நிலையில் இருந்தார். சைதன்யரின் 'மாற்று நான்' ஆக விளங்கினார். அவர் சாஸ்திரீய புலமையில் இரண்டாவது பிரஹஸ்பதியாகவும், இசையில் ஒரு முழுமையாக தேர்ச்சி பெற்ற கந்தர்வராக இருந்தார். தனது பாடல்கள் மூலம் சைதன்யரை மகிழ்வித்தார். அப்பாடல்கள் இறைவன் சம்பந்தப்பட்டவை ஆகும். ஜெயதேவர் இயற்றிய கீதகோவிந்தம், சண்டிதாஸர் மற்றும் வித்யாபதி இயற்றிய தெய்வீகப் பாடல்கள் அவற்றுள் அடங்கும். சைதன்யர் அப்பாடல்களால் பெருமகிழ்ச்சி அடைந்தார். எப்பொழுதும் அவரைத் தன் அருகிலேயே இருக்குமாறு கேட்டுக்கொண்டார். அவர்கள் காஸி மிஸ்ரரின் வீட்டில் (கம்பீரம்) சேர்ந்து இருந்தனர்.

பிரதாப ருத்ர கஜபதி என்ற அரசர் ஒரிசா பகுதியில் ஆட்சி நடத்தி வந்தார். அவர் சைதன்யரைச் சந்திக்க விரும்பினார். ஆனால் சைதன்யர் சந்திப்பதற்கு அனுமதி மறுத்து விட்டார். அதற்கும் ஒரு காரணம் இருந்தது. சந்நியாசி உணர்ச்சி வசப்படக்கூடாது. மேலும் அரசன் மற்றும் பெண்ணை சந்திப்பது நன்றாயிராது. அவ்வாறு சந்திப்பது விஷத்தை விழுங்குவதைவிட கொடுமையான விளைவைக் கொடுக்கும் என்று கூறினார் ஆனால் அரசன் கடவுள் மீது பக்தி கொண்டு இருந்தான். ஜெகன்னாதரின் தேரோடும் வீதியை பெருக்கிச் சுத்தம் செய்வதைப் பணிவான ஒரு கடமையாகவும் ஏற்றுக் கொண்டு அரசன் செய்தான். சைதன்யரின் ஆசிகளைப் பெறாவிட்டால் தன் வாழ்வை முடித்துக்கொள்ள அரசன் முடிவு செய்தான். சைதன்யர் இவ்வுலகை மீட்பதற்காக அவதரித்துள்ளதாக எண்ணினான். கடைசியில் நித்யானந்தர், ரே ராமானந்தர் மற்றும் வாசுதேவ சார்வபௌமர் துணையுடன் சைதன்யரை அரசன் சந்தித்தான். அப்பொழுது சைதன்யர் அரசனை ஆரத் தழுவிக் கொண்டார். பிறகு அரசனை ஆசீர்வதித்தார். இவ்வாறாக பிரதாப ருத்ர பிரஜாபதி தனது குடும்ப அங்கத்தினர்களுடன் சைதன்யரது தீவிர சீடராக மாறினார்.

வங்காள நாட்டு ஏராளமான பக்தர்கள் பூரியில் சைதன்யரைச் சந்தித்தனர். அக்குழுவினரின் தனிப்பட்ட பக்தியை சைதன்யர் பெரிதும் பாராட்டினார். அந்த பக்தர்கள் கூட்டத்தில் ஹரிதாசர் என்ற ஒருவர் இருந்தார். ஹரிதாசர் பணிவின் சிகரமாக இருந்தார். சைதன்யர் அவருக்குத் தமது தோட்டத்தில் ஒரு

பகுதியான சித்தவகுல என்ற தனிமையான இடத்தைக் கொடுத்தார். அங்கு ஹரிதாசர் நாமாவளிகைளப் பண்ணிசைத்துப் பாடினார். நாமபஜனை நிகழ்த்தப்பட்டது. தினமும் சைதன்யர் அவரை அங்குச் சென்று சந்தித்தார்.

வாசுதேவதத்தர் என்பவர் சைதன்யரின் மிகப் பிரிய சீடர்களில் ஒருவர். அவர் எல்லோரும் நலம் வாழ இறைவனை வேண்டினார். சைதன்யர் அவரை ஆரத்தழுவி ஆனந்தம் அடைந்தார். வாசுதேவதத்தர் அனைத்து நிலை தடுமாறிய ஆன்மாக்களின் மோட்சத்திற்காக இறைவனை வேண்டினார். ஏனெனில் அந்த பாவப்பட்ட ஆன்மாக்கள் பல பிறவிகளில் பல பாவங்களைப் புரிந்து மீளா நரகத்தில் ஆழ்ந்துள்ளன. அவற்றுக்கு இறை அருள் கிடைக்க வேண்டி பிரார்த்தித்தார். அவர்கள் செய்த பாவங்களைத் தன்மீது ஏற்றுக் கொண்டு பிரார்த்தனை செய்தார். சைதன்யர் அவரது பிரார்த்தனையை ஏற்றார். இவ்வாறாக வாசுதேவ தத்தர் தமது செய்கையால் இம்மண்ணுலகில் பிறருக்காக வாழும் மக்களையும், பிறர் நலனுக்காக உழைப்பவர்களைக் காட்டிலும் உயர்ந்து நிற்கிறார்.

இறைவன் ஜெகன்னாதரின் தேரோட்டத் திருவிழா நெருங்கிக் கொண்டு இருந்தது. நீலகலா என்னும் பகுதிக்குக் கிழக்குத் திசையில் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் சுந்தராசலத்தில் குண்டிசமந்திரம் என்னும் இடம் உள்ளது. அந்த இடம் இறைவன் ஜெகன்னாதர் தேரில் பவனி வரும் பயண இலக்காக அமைந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஒன்பது நாள் திருவிழ அங்கு நடைபெறும். அந்த சமயத்தில் சைதன்யர் அங்கு தங்குவது வழக்கம். அப்பொழுது அவர் தமது சீடர்களுடன் தேரோட்டத் திருவிழாவை முன்னிட்டு கோயிலை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபடுவது வழக்கம். அச்செயல் மூலமாக கீழ்க்கண்ட கோட்பாட்டினை கடைபிடித்தார் குண்டிசமந்திரம் ஒரு சீடரின் இதயமாக விளங்குகிறது. சீடன் கிருஷ்ணரை இதய பீடத்தில் வைக்க விரும்பினால் முதலில் புறத்தூய்மையும் அகத்தூய்மையும் வேண்டும். அதற்கும் சைதன்யரின் துணை வேண்டும் தேரோட்டம் முடிவு அடைந்த நான்கு மாதங்களுக்கும் சைதன்யர் தமது சீடர்களுடன் ஆனந்தப் பரவச நிலையில் இருந்தார் ஒரு நாள் நித்யாநந்தர் மற்றும் அத்வைதாச்சாரியாரிடம் வங்க நாட்டிலும் இறை அன்பு ஏற்படுத்த வேண்டும் என்று

விரும்பினார். அதற்கு சாதி மத நிற வேறுபாடின்றி அமைய வேண்டும் என்று விரும்பினார். ஸ்ரீவாஸர் மூலமாக அவரது தாயாருக்கு மகாபிரசாதங்களையும் தெய்வீக சம்பந்தமான பொருட்களையும் அனுப்பினார்

ஒரு விஜயதசமியன்று சைதன்யர் வங்க நாட்டை நோக்கிப் பயணமானார். அவர் தமது பயணத்தை பானிஹெட்டி, குமாரஹட்டா, பராஹநகர் மார்க்கமாக மால்டா மாவட்டத்தில் உள்ள ராமகேலி மற்றும் பிருந்தாவனம் வழியாக மேற்கொண்டார். அக்காலத்தில் வங்க நாட்டில் முகம்மதியரான ஹுசைன் ஷா அரசராக இருந்தார். அவரது அமைச்சர்களான தவீர்தாஸ் மற்றும் சாகார்மாலிக் ஆகிய இரு சகோதரர்களையும் தடுத்து ஆட்கொண்டார். அது முதற்கொண்டு அவர்கள் முறையே ஸ்ரீரூபா மற்றும் ஸ்ரீசனாதனா என்று அழைக்கப்பட்டனர். அவர்களை பிருந்தாவனத்திற்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். ஸ்ரீகிருஷ்ணர் அன்பே வடிவானவர். அக்காலத்தில் கிருஷ்ணர் நடனமாடிய இடங்களைக் காணவும் சீரழிந்த கோயில்களை செப்பனிடவும் அவர்களை அனுப்பினார். ஸ்ரீசனாதனரின் வேண்டுகோள்படி சைதன்யர் கனைனஷாலா வழியாக சாந்திப்பூர் எனும் இடத்தினை அடைந்தார் தனது மிகப்பெரிய பரிவாரங்களுடன் பிருந்தாவனம் செல்லும் எண்ணத்தை விட்டு விட்டார். உண்மையான யுக்த வைராக்கியத்தை மேற்கொள்ளுமாறு இரகுநாத தாசரிடம் கேட்டுக்கொண்டார். அதன்பின் சைதன்யர் பூரிக்குத் திரும்பினார்.

பின்னர் சைதன்யர் ஜாரிகாந்தா எனும் காட்டு வழிப் பாதையில் (சோட்டா நாக்பூர்) பிருந்தாவனத்திற்குப் பயணமானார். அவருடன் பாலபத்திர பட்டாச்சாரியா என்ற எளிய அந்தணரும் பயணம் செய்தார். பயணமானது அடர்ந்த காட்டு வழியில் அமைந்தது. அச்சமயம் அவர் கிருஷ்ணரின் நாமாவளிகளைக் கூறிக் கொண்டே இருந்தார். காட்டுவாசிகள் அவரது மலர்ந்த முகத்தைப் பார்த்தனர் இறைவனின் நாமாவளிகளைக் கேட்டனர். தங்களின் மிருக குணங்களை மறந்தனர் பின்னர் அம்மக்கள் தீராத ஆசையுடன் சைதன்யரைப் பின் தொடர்ந்தனர். அக்காட்சியானது புலி ஒன்று மானை முத்தமிடுவதுபோல் இருந்தது அதற்குக் காரணம் இறை அன்பு ஆகும் இவ்வாறாக அவர் வாரணாசியை அடைந்தார் சில

நாட்கள் தபனமிஸ்ரர் வீட்டில் தங்கினார். பின்னர் மதுரா நகருக்குப் பயணமானார். அவ்விடத்தில் அவர் கிருஷ்ணதாஸர் என்பவரைச் சந்தித்தார். கிருஷ்ணதாசர் சனோகிய அந்தணர் மரபைச் சார்ந்தவர். அவர் மாதவேந்திரபுரியின் சீடராகத் திகழ்ந்தவர். சைதன்யர் அவர் அளித்த விஷ்ணு பிரசாதத்தை ஏற்றுக் கொண்டார்.

கிருஷ்ணர் மீது அன்பு கிருஷ்ணரின் பரிவால் அதிகமானது. எனவே, கிருஷ்ணரைத்தேடி பிருந்தாவனம் மற்றும் மதுரா நகரங்களில் உள்ள பன்னிரெண்டு இடங்களையும் சுற்றி வந்தார். ஓர் இரவில் யமுனை நதிக்கரையோரம் நடந்து கொண்டு இருந்தார். அங்கு இருந்த ஒரு மீனவனைக் கிருஷ்ணராகவும், அவனது படகைக் காளிங்க நாகமாகவும், படகின் மீது இருந்த விளக்கை பிடரிச்சிவிகையில் இருக்கும் கொண்டை ஆபரணமாகவும் தவறாக நினைத்துவிட்டார். அந்த நேரத்தில் பாலபத்திர பட்டாச்சாரியாரின் மன மயக்கத்தை நீக்கினார். பின்னர் அவர் மதுரா நகரில் இருந்து கிளம்பி பிரயாகை மார்க்கமாக வாரணாசியை அடைந்தார்.

சைதன்யர், வரும் வழியில் வியாலிகான் என்ற பெயருடைய பதான் அரசரை சந்தித்தார். அந்த அரசருக்குப் படிப்படியாக கிருஷ்ணரின் அன்பை வெளிப்படுத்தினார். அவரது சீடர்கள் பிற்காலத்தில் பதான் வைணவர்கள் என்று அழைக்கப் பட்டார்கள்.

பின்னர் சைதன்யர், ஸ்ரீபுரகோஸ்வாமியையும் அவரது இளைய சகோதரர் வல்லபரையும் (அனுபமா) சந்தித்தார். அவர்கள் சைதன்யரைப் பாராட்டிப் பேசினார்கள். அவரிடம் பணிவுடன் நடந்து கொண்டார்கள். பின்னர் வைணவ இயப்பள்ளியில் புஷ்டிமார்க்கத்தை நிறுவிய வல்லப பட்டர் ஸ்ரீ ஸ்சைதன்யரைச் சந்தித்தார். அவருக்கு ஸ்ரீரூபரையும் அனுபமரையும் சைதன்யர் அறிமுகப்படுத்தினார். வல்லபபட்டர் சைதன்யரது பக்தி, சக்தி, நம்பிக்கை, அழகு மற்றும் முகத்தில் தோன்றும் தேஜஸ் (பொலிவான களை, ஒளி) முதலியவற்றைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கினார். பின்னர் சைதன்யரையும் அவரது சீடர்களையும் தமது சொந்த வீட்டிற்கு ஒரு படகில் அழைத்துச் சென்றார். அவரது வீடு அலகாபாத் கோட்டைக்கு எதிர்ப்புறம்

அமைந்திருந்த அடெயில் கிராமத்தில் அமைந்து இருந்தது. யமுனை நதி நீர் நீல நிறத்தில் பளபளப்பாக இருந்தது. இதனைப் பார்த்ததும் சைதன்யர் நதியில் குதித்து விட்டார். அனைவரும் பரபரப்படைந்தனர். அவரை உடனே தண்ணீரில் இருந்து காப்பாற்றினார்கள். ஆர்வமிகுதியால் பட்டர் அவரை தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அவருக்கு நல்ல உடை மற்றும் மேலங்கியினைக் கொடுத்தார். பின்னர் பட்டர் அவரது பாதங்களை அலம்பி பாதபூஜை நடத்தினார். சைதன்யர் அவரது வீட்டில் உணவு உண்டார். இரவு நேரத்தில் அவரது உணவு மஹா பிரசாதமாக ஸ்ரீரூபர், அனுபமா மற்றும் கிருஷ்ணதாசரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன்பின்னர் வல்லப பட்டர் அவரை ஒரு படகில் ஏற்றி யமுனை நதியைக் கடந்தார். அவர்கள் பிரயாகையை அடைந்தார்கள். சைதன்யர் கூட்டத்தைத் தவிர்த்தார். சைதன்யர் ஸ்ரீரூபருக்கு, கிருஷ்ணரின் பெருமைகள், தூயபக்தி, இறையன்பு, பாகவதத்தின் சாரம் ஆகியவற்றை எடுத்துக் கூறினார். ஒரு முழுமை பெற்ற வைணவராக ஸ்ரீரூபரை மாற்றுவதற்கு தம்மால் முடிந்தவற்றைச் செய்தார்.

ஸ்ரீரூபரை பிருந்தாவனத்திற்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார் அவரை வங்க நாட்டிலும் பூரியிலும் சந்திப்பதாக உறுதி கூறினார். பிறகு சைதன்யர் மட்டும் வாரணாசி நோக்கிப் பயணமானார். அங்கு சந்திரசேகரர் என்பவர் வீட்டில் தங்கினார் பின்னர் தபனமிஸ்ரரின் தனிப்பட்ட வேண்டுகோளை ஏற்றார். அங்கு சைதன்யர் உணவு உண்டார். இதற்கிடையில் வங்க நாட்டின் தலைநகராக விளங்கிய கௌடா சிறையிலிருந்து திறமையாக தப்பிய சனாதன கோஸ்வாமின் என்பவர் ஸ்ரீரூபரின் கடிதத்தைப் பார்த்தார். உடனே அவர் சைதன்யரைப் பார்ப்பதற்கு விரைந்தார். அவர் ஒரு முகம்மதிய பக்கிரியின் வேடம் அணிந்து வாரணாசியை அடைந்தார். ஆனால் சந்திரசேகரால் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால் சைதன்யர் அவரை அடையாளம் கண்டுகொண்டார். சைதன்யர் கூறியதன் பேரில் சந்திரசேகர் உண்மை அறிந்தார் சைதன்யர் ஸ்ரீ சனாதனரை அன்புடன் வரவேற்றார். இருவரும் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டனர். அவர் தபனமிஸ்ரரிடமும் சந்திரசேகரிடமும் ஸ்ரீசனாதனரை அறிமுகப்படுத்தினார் அவர்

சனாதனரை தன்னுடன் தங்குமாறு கேட்டுக்கொண்டார். அவருக்கு இரண்டு புதிய மேல் அங்கிகளை கொடுக்குமாறு சந்திரசேகரிடம் கேட்டார். ஸ்ரீ சனாதனர் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. சைதன்யரும் அவரது அமைதியான நடுநிலை உணர்வில் மகிழ்ச்சி அடைந்தார். இருப்பினும் ஸ்ரீ சனாதனர் அணிந்திருந்த முகத்திரையினை சைதன்யர் கவனித்து விட்டார். அத்திரையானது மிகவும் விலை உயர்ந்ததாக இருந்தது. உடனே, ஸ்ரீ சனாதனர் வங்க நாட்டு பிச்சைக்காரர்கள் அணியும் சாதாரண உடையை அணிந்தார். பிறகு ஸ்ரீ சைதன்யரிடம் பணிவாகக் கூறினார். "தங்களது கருணையினால் என்னைக் காப்பாற்றினீர்கள், எனது கடமைகள் என்ன? நான் யார்? எனக்கு மட்டும் ஏன் துன்பங்கள் மூன்று மடங்காக அமைகின்றன? எனக்கு நிரந்தரமாக நன்மை தரக்கூடிய ஆனந்தத்தை யார் அளிப்பார்கள்?" உடனே சைதன்யர் பதில் கூறினார். "உங்கள் மீது கிருஷ்ணரின் கருணை பூரணமாக உள்ளது. நீங்கள் எல்லா உண்மைகளையும் அறிந்தவர். நீங்கள் துன்பத்தின் இருப்பிடமாக அமையவில்லை. உண்மையில் நீங்கள் பக்திக் கோட்பாடுகளைப் பரப்புபவராக விளங்குகிறீர்கள்". பிறகு சைதன்யர் வைணவ இயத் தத்துவத்தின் எல்லா உண்மைகளையும் ஸ்ரீ சனாதனருக்குக் கற்பித்தார். அது ஸ்ரீ சனாதனசிக்ஷா என்று கருதப்படுகிறது.

சைதன்யர் வாரணாசியில் தங்கி இருந்தார். ஒருநாள் ஒரு மஹாராஷ்ட்ரீய அந்தணரின் அழைப்பை ஏற்று அவரது வீட்டை அடைந்தார். அங்கு சைதன்யர் பிரகாசானந்த சரஸ்வதி என்பவரைச் சந்தித்தார். அவர் வேதாந்தத்தில் சிறந்து விளங்கினார். மேலும் உடல் வேறு மனம் வேறு இல்லை என்ற கொள்கையை உடையவர். சைதன்யரின் அன்பான முகத்தில் தோன்றிய புன்னகை, அவரது தன்மையான இறை நிறைந்த பார்வை, உறுதியான உடல் வனப்பு, பணிவு, தனித்தன்மை, விவேகம், பளிச்சிடும் அறிவு, அனைத்திற்கும் மேலாக அவர் கிருஷ்ண நாமாவளியைப் பண்ணிசைத்துப் பாடும் விதம் முதலியன அங்கு கூடியிருந்தோரை மிகவும் கவர்ந்தது. பிரகாசானந்தர் சைதன்யரிடம் வேதாந்தத்தைத் தவிர்க்கும் காரணத்தைக் கேட்டார். அதற்கு சைதன்யர் சந்நியாசியின் கடமை பற்றிக் கூறினார். மேலும் வரையறுக்கப் பட்ட அறிவின் துணை கொண்டு அவரால் வேதாந்தக் கருத்துக்களை உணர்ந்துகொள்ள

முடியாது என்று கூறினார். சைதன்யர் இறைவனின் பாதக்கமலங்களை இருப்பிடமாகக் கொண்டார். தமது குழுவின் துணையுடன் வெளிப்பாட்டு முறையைப் பின்பற்றினார். இறைவனும் அவருக்கு எல்லையற்ற அன்பினை அளித்தார். ஆன்மீக சூத்திரம் இறை அன்பு மற்றும் கிருஷ்ணரின் நாமாவளிகளைப் பாடுமாறு தூண்டினார். அவரது நாம சங்கீர்த்தனம் கிருஷ்ணருடன் ஒன்றுபட உதவியது. நாமசங்கீர்த்தனத்தால் சைதன்யர் தன்னை மறந்தார். கிருஷ்ணரது நாமாவளி அவருக்கு அமைதியினைத் தந்தது. அன்று இடைவிடாது கிருஷ்ணரின் துதி பாடினார். பாராயணம் அவரது பெயர். உருவம் உடைமை மற்றும் தனித்தன்மையினைத் தெளிவாக்க ஓர் உந்து சக்தியாக இருந்தது. கிருஷ்ணலீலைகளை எண்ணி வியந்து போற்றினார். அதனால் கிருஷ்ணர் அவரோடு எப்பொழுதும் இருப்பதாக உணர்ந்தார். கிருஷ்ணர் அன்பே உருவானவர். அந்த கிருஷ்ணரது அன்பிற்கு முன்னால் மேம்பட்ட மோட்சத்தைப் பெற்றவர்கள் கொண்ட பலநிலைக் குறிக்கோள்கள் புல்லிற்குச் சமம். உடல்வேறு மனம் வேறு இல்லை என்ற வாதத்தால் பல விவரங்களை உணரலாம். அதனால் பெறப்பட்ட ஆனந்தம் (பிரம்மானந்தம்) ஒரு சிறு துளியே ஆகும்.

சைதன்யரால் அசிந்த்ய பேதா பேத கோட்பாட்டின் கோணத்தில் வேதாந்த விளக்கங்கள் வழங்கப்பட்டன. அந்த உரை பார்வையாளர்களின் மனத்தில் நிலைத்து நின்றது. அவர்கூஞ் சங்கரரின் வேதாந்தக் கருத்துக்களின் உட்பொருளை தெளிவாக உணர்ந்து கொண்டார்கள் மேலும் ஜீவாத்மாவின் நிலையான செயலாக விளங்கும் பக்தியினை உணர்ந்தனர். தூய பக்திக் கோட்பாட்டை வரவேற்றார்கள். சைதன்யரால் கிருஷ்ணரின் புனித நாமாவளி பிரகடனப்படுத்தப்பட்டது. அந்நாமாவளிகளை பண்ணிசைத்துப் பாடினார்கள். பின் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார். இது பிரகாசானந்தரின் விடுதலை பெற்ற (மோட்சம் பெற்ற) நிலையாகக் கருதப்படுகிறது. பிரகாசானந்தரின் மாற்றம் காரணமாக வாரணாசி பகுதி முழுவதிலும் நைமி சரண்யபள்ளியின் ஸ்ரீமத்பாகவதக் கோட்பாட்டு நெறி நிலவியது. பின்னர் சைதன்யர் வாரணாசியிலிருந்து புறப்பட்டு பூரியினை அடைந்தார் அவர் ஜாரீசாந்தா என்ற காட்டுப்பகுதி மார்க்கமாக பயணத்தை மேற்கொண்டார் சப்தகிராமம் என்ற பகுதியின்

செல்வாக்குமிக்க மிராசுதார் கோவர்த்தன மஜூம்தாரின் ஒரே மகனான ரகுநாதர் என்பவர் சைதன்யரைக் காண வந்தார். அவர் ஒரு மிகப்பெரிய பணக்காரர் ஆவார். அவர் சைதன்யரின் பாதகமலங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினார். அப்பொழுது அவர் ஆனந்த பரவசத்துடன் காணப்பட்டார். அவர் சந்நியாசம் மேற்கொண்ட பிறகு ஒருமுறை சாந்திபூர் வந்து இருந்தார். சைதன்யர் அவருக்கு ஆசிகள் வழங்கினார். குழந்தைப் பருவத்திலேயே ரகுநாதர் பற்றுஅற்றவராக இருந்தார். அத்வைத கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்டு இருந்தார். அதற்குச் சைதன்யரின் துணை பெரிதும் உதவியது. அவர் சைதன்யருடன் ஒரு வாரகாலம் தங்கி இருந்தார். பூரிக்கு கிளம்ப வேண்டியிருந்ததால் ரகுநாதரை வீட்டிற்கு அனுப்பிவிட்டனர். சைதன்யரிடம் அளவுகடந்த அன்பு இருந்ததால் பூரி செல்வதற்காக மீண்டும் மீண்டும் வீட்டை விட்டு ஓடிவிட்டார். ஆனால் அவரது தந்தை இரவும் பகலும் அவரைக் கண்காணித்தார். பின்னர் ஒரு நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி ரகுநாதர் பூரி நகரை நோக்கி விரைந்தார். பன்னிரெண்டு நாட்கள் இடைவிடாது போராடி பூரியை அடைந்தவுடன் சைதன்யர் அவரை அன்பாக வரவேற்றார். அவரை நன்கு தழுவிக் கொண்டார். அவர் ரகுநாதரை ஸ்ரீதாமோதர ஸ்வரூபரிடம் ஒப்படைத்தார். அதன்பின்னர் அவரை எல்லோரும் ஸ்வரூபரின் ரகு என அழைத்தார்கள். ரகுநாதர் துறவற வாழ்க்கையை தீவிரமாக மேற்கொண்டார். பிருந்தாவனத்து நினைவில் நிற்கும் ஆறு கோஸ்வாமிகளில் ரகுநாததாசரும் ஒருவர் ஆவார். அவரது வழிபாட்டின் இறுதி நேரத்தில் உணவையும் நீரையும் துறந்தார். ஒருநாளைக்கு இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ் மோர் மட்டும் குடித்து வந்தார்.

இதற்கிடையில் சைதன்யர் கேட்டுக் கொண்டபடி ஸ்ரீசனாதனர் பூரிக்கு வந்து சேர்ந்தார். அவரது இளைய சகோதரர் வல்லபர் (அனுபமா) அவர்களின் மறைவுச் செய்தி ஸ்ரீ சனாதனரைப் பெரிதும் வருத்தமடையச் செய்தது. அவர் தனது வாழ்க்கையை முடித்துக் கொள்ள எண்ணினார். அவ்வாறு செய்யக்கூடாது என்று சைதன்யர் சனாதனரிடம் கூறினார். அச்செய்கை நரகத்திற்குள் தள்ளிவிடும் என்றும் கிருஷ்ணரது அன்பைப் பெறத் தடையாக இருக்கும் என்றும் கூறினார்.

அச்செயல் நியாயமற்றதாகும். அச்செயல் பக்திக்கு பங்கம் விளைவிக்கும் செயல் என்று அறிவுரை கூறினார்.

அந்த ஆண்டின் இறுதியில் சனாதனரை பிருந்தாவனத்திற்கு அனுப்பினார். அங்கு அவர் முன்கூட்டியே அங்கு வந்திருந்த ஸ்ரீரூபரைச் சந்தித்தார்.

ஹரிதாசரைப்போல சைதன்யரிடம் பக்தி கொண்டவர்கள் எவரும் இல்லை. நாளொன்றிற்கு மூன்று லட்சம் புனித நாமாவளிகளைக் கூறவேண்டும் என்ற முடிவினை ஹரிதாசர் மேற்கொண்டு இருந்தார். அது நிறைவேறும் வரை எதுவும் உண்ணக்கூடாது என்று முடிவு எடுத்து இருந்தார். இதில் ஒரு நம்பிக்கையை வைத்து இருந்தார். ஏனைய அனைத்து சீடர்களும் ஹரிதாசரை நாமபிரம்மத்தின் அவதாரமாகக் கருதினார்கள். ஹரிதாசரின் குடிசை பூரியில் சித்தவ குல மரத்தின் அருகே இருந்தது. ஜெகன்னாதரை தரிசனம் செய்வதற்கு ஒரே ஒரு முறை மட்டும் குடிசையை விட்டு வெளியே வருவார். ஹரிதாசர் பணிவின் இருப்பிடமாக விளங்கினார். அவர் புல்லைக் காட்டிலும் எளிமையானவராகத் திகழ்ந்தார். பணிவிலும் பண்பிலும் ஹரிதாசருக்கு நிகர் எவரும் இல்லை.

சைதன்யர் தினமும் பூரியில் கடலில் குளிப்பது வழக்கம். அப்பொழுது ஹரிதாசரின் குடிசையில் சென்று அவரைப் பார்ப்பார். அங்கு சென்று ஹரிதாசரின் ஹரிநாமத்தைக் கேட்டு வருவது வழக்கம்.

ஒருநாள் சைதன்யர் ஹரிதாசரின் இருப்பிடத்திற்கு வந்தார். ஹரிதாசர் படுக்கையில் இருந்தபடி ஹரிநாமத்தினைக் கூறிக் கொண்டு இருந்தார். அவரது குரல் மெலிந்து காணப்பட்டது. சைதன்யர் அவரிடம் என்ன ஆயிற்று என்று கேட்டார். அதற்கு ஹரிதாசர் உடல் ரீதியாக நலமாக இருப்பதாகவும் மனதில் அமைதி இல்லை என்றும் கூறினார். ஹரிநாமத்தின் எண்ணிக்கை முடிவு செய்யப்பட்ட அளவிலிருந்து குறைவாக இருக்கிறது என்றும் கூறினார். அதற்குச் சைதன்யர் 'தங்களின் வழிபாடு பரிசுத்தமானது. நீங்கள் கிருஷ்ணரால் ஆசீர்வதிக்கப்பட்ட சீடர்களில் ஒருவர்' என்று கூறினார். அப்பொழுது ஹரிதாசர் தமது உள்ள வேட்கையை வெளிப்படுத்தினார். அவர் சைதன்யரின் கமலபாதங்களை தமது நெஞ்சோடு வைத்துக்

கொள்ள விரும்பினார். மேலும் நிலா போன்ற சைதன்யரின் கண்கள் மற்றும் நாக்கில் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமாவளி என்றுமே இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அவர் இறக்கும் தருவாயில் இருந்தார். சைதன்யர் அவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். மறுநாள் காலை சைதன்யர் தமது அனைத்து சீடர்களுடன் ஹரிதாசரை காண வந்தார். ஹரிதாசரைச் சூழ்ந்து கொண்டு அவர்கள் சங்கீர்த்தனம் நடத்தினர். அப்பொழுது ஹரிதாசரின் பார்வை சைதன்யரின் மீது நிலைத்து இருந்தது. தேனீ போன்று சுறுசுறுப்பான இரு கண்களும் சைதன்யர் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தன. சைதன்ய சீடர்களின் பாதத் துளி அழுக்குகளை தன் தலையில் வைத்துக் கொண்டார். சைதன்யரின் பாதத்தை தன் மார்போடு இறுக்கப் பிடித்துக் கொண்டார் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் புனித நாமாவளிகளைப் பாராயணம் செய்தார். பின் இன்பப் பரவசத்தில் மூழ்கினார். அவரது கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. உதடுகளில் சைதன்யரின் நாமாவளி ஒலித்தது. அக்காலத்தில் வாசுதேவர் மறைந்ததுபோல் ஹரிதாசர் இவ்வுலக வாழ்க்கையை நீத்தார். ஹரிகிருஷ்ணர் மற்றும் ராமரின் நாமங்களை உரத்த குரலில் கூறத் தொடங்கினார்கள். சைதன்யரும் ஹரிதாசரின் புனித உடலை தனது மடியில் கிடத்தி தன்னை மறந்த நிலையில் ஆடத் துவங்கினார். ஹரிதாசரின் உடலை கடலில் நீராட்டினார்கள். இந்நாள் முதல் இக்கடல் ஒரு புனிதத் தலமாக விளங்கும் என்று சைதன்யர் கூறினார். ஹரிதாசருக்கு இறுதிக் கடன்களை சைதன்யரே செய்தார் தமது சீடர்களுடன் சேர்ந்துகொண்டு புனித நாமாவளிகளைக் கூறியபடியே ஹரிதாசரது உடலை அடக்கம் செய்தார். பின்னர் அதிக அளவில் மஹா பிரசாதம் கொண்டு வரப்பட்டது. அவரது மறைவு நாள் சடங்கு நேர்த்தியாகக் கொண்டாடப்பட்டது.

தமது வாழ்வின் மறுபக்கத்தை சைதன்யர் தாமே ஸ்ரீ ராதாவாக நினைத்துக் கொண்டார். கிருஷ்ணர் பிருந்தாவனத்தை விட்டு மதுரா சென்ற பொழுது எத்தகைய அன்பான பிரிவுத் துயரை அனுபவித்தாளோ அத்தகைய நிலையை சைதன்யரும் அனுபவித்தார். அறிவு கடந்த நிலையில் ஆனந்தப் பரவசத்தில் மூழ்கி இருந்த சமயத்தில் சைதன்யரது உடலில் எண்வகைக் குறியீடுகள் தோன்றின. இரவும் பகலும் சிறிதுகூட ஓய்வு எடுக்காது ஆனந்தக் கூத்தாடினார். இச்சமயத்தில் ரே

ராமானந்தரும் ஸ்வரூப தாமோதரரும் அவரை சமாதானப் படுத்தினார்கள். சண்டிதாசர் வித்யாபதி, கிருஷ்ண கர்ணாம்ருதம், கீதகோவிந்தம் முதலியவற்றிலிருந்து ரே ராமானந்தர் பாடல்களைப் பாடினார். ஸ்வரூப தாமோதரர் கிருஷ்ண லீலை சமபந்தப்பட்ட பக்திப் பாடல்களைப் பாடினார். அப்பாடல்கள் ரே ராமானந்தர் எழுதிய ஜெகன்னாத வல்லபர் என்ற நாடகத்திலிருந்து பெறப்பட்டவை.

இரவு முழுவதும் கிருஷ்ணரின் நாமங்களை இசையோடு உரத்த குரலில் பாடுவது சைதன்யரது வழக்கமாகும். ஸ்ரீ தாமோதர ஸ்வரூபர் அறையில் நிலவிய அமைதியை உணர்ந்தார். எனவே கதவைத் திறந்து பார்த்தார் அறையில் இருந்த ஏனைய கதவுகளும் மூடப்பட்டு இருந்தன. அறையின் உள்ளே சைதன்யரைக் காணவில்லை. சைதன்யரை அவர் சிங்கக் கதவிற்கு அருகே வெட்ட வெளிப்பகுதியில் பார்த்தார். உடல் ஐந்து அல்லது ஆறு அடி உயரமாக இருந்தது. அவர் தன்னை மறந்த நிலையில் இருந்தார். மேலும் பேச்சு மூச்சு இன்றி கிடந்தார் வாயில் நுரை தள்ளி இருந்தது. கண்கள் ஒரே இடத்தில் நிலைகுத்தி நின்றன. பிறகு ஸ்வரூபா தமது குழுவினருடன் உரத்த குரலில் கிருஷ்ண நாமாவளியைப் பாராயணம் செய்தார்கள். அதனைச் சைதன்யரின் காதுகளுக்கு அருகே சென்று கூறினார்கள் பிறகு சைதன்யர் 'ஹரி ஹரி' என்று குரல் எழுப்பியவண்ணம் எழுந்தார். இந்நிகழ்ச்சி அவரை மீண்டும் தன்னிலைக்குக் கொண்டு வந்தது அவரது கைகால்கள் மீண்டும் அவரது உடலில் முன்போல இணைந்தன.

சைதன்யர் பூரியில் உள்ள கடலை நோக்கிச் சென்று கொண்டு இருந்தார். அப்பொழுது சாதக் என்ற சிறு குன்றைக் கண்டார் ஒரு நாள் தொலைதூரத்திலிருந்து அந்த குன்றைப் பார்த்த பொழுது கோவர்த்தனகிரியாக மனதில் நினைத்துக் விட்டார். உடனே அக்குன்றினை நோக்கி ஓடினார். ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து ஒரு பாசுரத்தைப் பாடினார். ஏனெனில் ஸ்ரீமத்பாகவதத்தில் கோவர்த்தனகிரியின் பெருமைகள் கூறப்பட்டுள்ளன. கோவிந்தர் என்ற அவரது தோழர் அவருடன் வேகமாக ஓடினார். ஆனால் ஸைதன்யர் மிகவேகமாக ஓடியதால் கோவிந்தரால் அவரைப் பிடிக்க முடியவில்லை. திடீரென சைதன்யருக்கு வேகம் குறைந்து இயங்க இயலாது கீழே விழுந்தார். சிலை போன்ற நிலையை அடைந்தார் இதுவரை அனுபவித்து

அறியாத புதிய உணர்ச்சிகளைப் பெற்றார். அவரது தோலைக் கவனித்துப் பார்த்தபோது அது அதிகமாக விரிவடைந்து இருந்தது. உடல் முழுவதும் பந்துபோல வீக்கங்கள் இருந்தன. தோலில் இருந்த ரோமக்கால்களில் இருந்து இரத்தம் வந்து கொண்டு இருந்தது. அவரது தொண்டையில் இருந்து செறுமல் ஒலி வந்தது. கண்களிலிருந்து மழைநீர்போல கண்ணீர் வழிந்தோடி கன்னங்களை வருடியது. வாயிலிருந்து பேச்சு வரவில்லை. உடல் வெளுத்து இருந்தது. அது கழுவிய சங்கு போல வெண்மையாக இருந்தது. பலத்த காற்றினால் தாக்கப்பட்ட வாழைமரம்போல அவரது உடல் கீழே விழுந்தது.

சைதன்யரின் உடல் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டு கோவிந்தர் பெரும் குழப்பம் அடைந்தார். தன்னிடமிருந்த பானை நீர் முழுவதையும் சைதன்யர் மீது பைத்தியக்காரர்போல ஊற்றினார். பின்னர் வேகமாக தன்னிடமிருந்த துவாலையால் விசிறினார். இதற்கிடையில் இச்செய்தி மிகவேகமாகப் பரவியது. ஸ்வரூப தாமோதரர், கடாதரர், ஜெகதாநந்தர் ஆகிய அனைவரும் கடற்கரைக்கு விரைந்து ஓடிவந்தனர். சைதன்யரின் புனித உடலில் எட்டுவிதமான சாத்வீகக் குறியீடுகளும் தோன்ற ஆரம்பித்தன. இந்நிலையில் அவரைப் பார்த்த சீடர்கள் கதற ஆரம்பித்தனர். சங்கீர்த்தனத்தைத் தொடர்ச்சியாக பல மணி நேரங்களுக்கு நிகழ்த்தினர். சைதன்யர் கடற்கரையில் மயக்கமுற்ற நிலையில் விழுந்து கிடந்தார். அவர் திடீரென ஹரி நாமத்தைக் கூறியபடி எழுந்து உட்கார்ந்து விட்டார்.

இயல்பு நிலைக்குத் திரும்பிய சைதன்யரைக் கண்ட மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவரது சீடர்கள் மகிழ்ச்சியுடன் உரத்தகுரலில் ஹரி நாமத்தைக் கூறினார்கள். தன்னை கோவர்த்தன குன்று பற்றிய நினைவிலிருந்து இயல்பான நிலைக்குக் கொண்டு வந்த ஸ்வரூபரிடம் சைதன்யர் கூறியது யாதெனில் "நான் கிருஷ்ண லீலையைக் கண்டேன். அது இனிமையாக இருந்தது. அல்லீலை ஆச்சரியம் தரும் வகையில் இருந்தது. அதில் பக்தியுடன் ஈடுபட்டு இருந்தேன். நான் கோவர்த்தன கிரியில் இருந்தேன். அதனைச் சுற்றி பசுமாடுகள் மேய்ந்து கொண்டு இருந்தன. கிருஷ்ணர் அங்கு புல்லாங்குழல் ஊதினார். அப்புல்லாங்குழல் ஒலி கேட்டு ஸ்ரீராதா ஓடிவந்தார். ஓ! அவள் எவ்வளவு அழகாக இருந்தாள். மெய்ம்மறந்த நிலையில் அவளுக்கு ஏற்பட்ட இறை உணர்ச்சியை

என்னால் எடுத்துச் கூற முடியவில்லை. ஸ்ரீகிருஷ்ணர் ஸ்ரீராதாவை ஒரு குகைக்குள் அழைத்துச் சென்றார். எல்லா தோழிகளும் பூப் பறிக்கச் சென்று விட்டார்கள். ஆனால் மீண்டும் நான் கிருஷ்ணரை இழந்தேன். ஏனெனில் சரியான சமயத்தில் என்னை நீங்கள் இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வந்து விட்டீர்கள். கிருஷ்ண லீலைகளைக் காணும் அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்து இருந்தும்கூட என்னால் மீண்டும் அவற்றைக் காண முடியாது. எனக்கு தரப்பட்ட ஆனந்தத்தை இழந்தேன்! ஓ! நான் அதிக வருத்தத்தில் உள்ளேன்" அனைத்து பக்தர்களும் மௌனமாக இருந்தனர். சைதன்யரைத் தேற்றுவதற்கு வார்த்தை எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தனர்.

சைதன்யரை ஒருநாள் சீடர்கள் தெலெங்கி பசுக்களுக்கு இடையே கண்டுபிடித்தனர். அக்காட்சி சிங்கத்தின் வாயிலே இருக்கும் ஆமையைப்போல இருந்தது. சைதன்யர் தன்னை மறந்த நிலையில் இருந்தார். வெளித் தோற்றத்திற்கு அவர் பூசணிக்காய்போல இருந்தார். ஆனால் உண்மையில் சைதன்யர் கிருஷ்ணரின் நினைவாகவே இருந்தார். மெய்ம்மறந்த நிலையிலிருந்து இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டு வரப்பட்டார். அதற்காக அவர் ஸ்வரூபரை வைதார். அவரது மனத்தாங்கல் அதிகமாக இருந்தது. எனவே ஆச்சரியத்துடன் கூறியது யாதெனில் கிருஷ்ணரின் இனிய புல்லாங்குழல் ஒலியை இனி கேட்க இயலாது. அது சொர்க்கத்தைத் தரக்கூடியது. ஒருவரது உடலில், மனதில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் பன்னிரெண்டாவது நிலையில் தான் ஏற்படும்.

ஓர் இரவில் சைதன்யர் ஆய்டோடா என்ற இடத்திலிருந்து கடலைப் பார்த்தார். கடல்மீது சந்திர ஒளி பாய்ந்தது. அக்காட்சி யமுனை ஆற்றின் நீர்போல பளபளத்தது. உடனே சைதன்யர் கடலை யமுனை நதி என நினைத்துவிட்டார். பின்னர் ஆனந்தப் பரவசம் அடைந்தார். யாரும் பார்க்காத சமயத்தில் கடலை நோக்கி ஓடிச் சென்று குதித்து விட்டார். தாம் என்ன செய்கிறோம் என்ற உணர்வே அவருக்கு ஏற்படவில்லை. பின்னர் மூர்ச்சையாகி விட்டார். கடலில் உள்ள பெரிய அலைகள் சில சமயம் அவரை மூழ்கடித்தன. சில சமயங்களில் மிதந்து சென்றார். அவர் உலர்ந்த மரக்கட்டைபோல தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டார். அந்த நேரத்தில் தண்ணீரில் மூழ்கியபடியே யமுனை நதியில் பிரஜ தேவதைகளுடன் நடத்திய கிருஷ்ணலீலைகளைக் கனவு

கண்டுகொண்டு இருந்தார். மூர்ச்சை அடைந்த நிலையில் அவர் கோனார்க் வரை தண்ணீரிலேயே அடித்துச் செல்லப்பட்டார். இதற்கு இடையில் தாமோதர ஸ்வரூபர் மற்றும் ஏனையோரும் சைதன்யரைக் காணாமல் அதிர்ச்சி அடைந்தனர். பூரி நகரின் ஒவ்வொரு பகுதியிலும் அவரைத் தேடினர். அவர்களுக்குச் சைதன்யரிடம் அளவிற்கு மீறிய அன்பு இருந்தது. எனவே, அவர்கள் மிகவும் வருத்தம் அடைந்தனர். அவர்கள் விரக்தி அடைந்த நிலையில் அவரை தேடியபடி கடற்கரை ஓரமாக நடந்து வந்தனர். அதிர்ஷ்டவசமாக அவர்கள் ஒரு மீனவனைச் சந்தித்தார்கள். அவனது வலையில் சைதன்யரின் உடல் சிக்கியிருந்தது. அம்மீனவன் அவரை ஒரு பெரிய மீன் என நினைத்துக் கரையில் இழுத்து போட்டு இருந்தான். சைதன்யரின் உடல் முழுவதும் மண் அப்பிக் கொண்டு இருந்தது. அவரது தோல் வெளுத்து இருந்தது. உடல் பெருத்து காணப்பட்டது. அம்மீனவனின் துணையுடன் அவர்கள் அவரைத் தரையில் கிடத்தினார்கள். பிறகு அந்த பக்தர்கள் கிருஷ்ணநாமாவளியை அவரது காதுகளில் உரத்த குரலில் பாடினார்கள். அதன் காரணமாக சைதன்யர் இயல்பு நிலைக்குத் திரும்பினார். பிறகு பெருத்த ஓசையுடன் துள்ளிக் குதித்தார்.

கிருஷ்ணர் தம் நண்பர்களுடன் நீரில் நடத்திய லீலைகளைக் கண்டதாக சைதன்யர் கூறினார். கிருஷ்ணர் கோபிகைகளின் மார்பினைத் தொட விரும்பினார். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்வதை தடுத்தனர். என்ன அருமையான காட்சி அது. அழகான இறை லீலை என்று சைதன்யர் கூறினார். அக்காட்சி இரச சமுத்திரம் பொங்கி வழிவதுபோல இருந்தது. என்று கூறினார். நான் அனைத்தையும் மறந்து விட்டேன். ராதாகிருஷ்ணர் கோபிகையருடன் நடத்திய இறை விளையாட்டுகளில் மூழ்கினேன். அந்த சமயத்தில் நீங்கள் என்னை அழைத்தீர்கள். ஓ! என்ன துரதிர்ஷ்டம்! பிருந்தாவனத்தின் ஒரே லீலையை மகிழும் வாய்ப்பை நீங்கள் இழக்கச் செய்து விட்டீர்கள்.

கண்ணா யமுனா பிருந்தாவனா
கண்ணா கிருஷ்ணா கோபிகானா
ஸே சுகபங்க கரைலா.

பிருந்தாவனக் கண்ணரின் கோபிகையரின் கானத்தில் பங்கம் ஏற்பட்டுவிட்டது.

ஜெகதாநந்தர் எப்பொழுது நாடியா சென்றாலும் அத்வைதாச்சாரியாரை சந்திப்பது வழக்கம். அந்தக் காலம் சுமார் கி.பி. 1532 அல்லது 1533 ஆகும் ஜெகதாநந்தர் நவத்வீபா பகுதியில் அத்வைதரைச் சந்தித்தார் அப்பொழுது ஆசாரியார் பூரியிலுள்ள சைதன்யருக்காக முதன்முறையாக ஒரு நூற்பாவினை அனுப்பினார் அப்பாடல் புதிருடன் கூடியதாக இருந்தது. ஜெகதாநந்தர் மூலமாக அப்பாடல் அனுப்பப்பட்டது. அந்நூற்பா முற்றிலும் புதிருடன் கூடியதாக இருந்தது. அதில் இவ்வாறு சொல்லப்பட்டு இருந்தது

பால்கே கஹியோ லோக ஹைஹலோ அவுல்
பால்கே கஹியோ ஹதே நபிகே சவுல்
பால்கே கஹியோ கஜே நஹிகோ அவுல்
பால்கே கஹியோ இஹ கஹியேகே பவுல்.

இப்புதிரை கேட்ட சைதன்யர் ஒரு தெய்வீகப் புன்னகையை வீசினார் திடீரென வியப்படைந்தார் 'இதுதான் அவரது கட்டளை'

அத்வைதர் அனுப்பியிருந்த புதிருக்கான பொருளை வெளிப்படையாக அறிய முடியவில்லை. அத்வைதர் தமது வாழ்க்கையை முடித்துக் கொள்ள சைதன்யரிடம் பிரார்த்தித்து இருக்கலாம். ஸ்வரூப தாமோதரரும் அப்புதிரின் உண்மையான உட்பொருளை அறிவதில் தோல்வி அடைந்தார். எனவே, அப்புதிரின் உண்மையான விளக்கத்தை அவரே கேட்டார். அப்பொழுது சைதன்யர் கூறினார், "இறைவனை வணங்குபவர்களில் ஆச்சாரியாரே சிறந்தவர். அவர் வழிபாட்டு முறைகளையும் சமயச் சடங்குகளையும் நன்கு அறிந்தவர் இறைவனை வணங்குவதற்கு முதலில் இறைவனை நினைக்க வேண்டும். இறைவழிபாடு முடிந்தவுடன் கடவுளை மனத்தில் வைத்திருக்க வேண்டும். மேலும் அப்புதிரின் அர்த்தம் என்ன என்பதை நான் இன்று சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று கூறினார். இதுபோன்ற புதிர்களை அத்வைதாச்சாரியார் ஒருவர் தான் எழுத முடியும். இந்தப் புதிருக்கு என்னால் விளக்கம் தர முடியவில்லை.

அவரது பதிலை கேட்டவுடன் எல்லா சீடர்களும் ஆச்சரிய மடைந்தார்கள். ஸ்வரூபதாமோதரர் இதற்கு உடன்படவில்லை.

அந்நாள் முதல் சைதன்யர் பொறுமையின்றி துன்பத்திற்கு உள்ளானார். ஏனெனில் அவர் இன்னும் கிருஷ்ணரின் பிரிவால் பாதிக்கப்பட்டு இருந்தார். அது பல மடங்காக தீவிரமடைந்தது.

அதன்பிறகு சைதன்யர் தன்னை மறந்த நிலையில் இருந்தார். அவர் தம்மை இரவும் பகலும் ஸ்ரீராதாவுடன் இணைத்து கற்பனை செய்து வந்தார். அவர் கிருஷ்ணரின் நீண்டகாலப் பிரிவை பற்றி சிந்தித்து வந்தார். எனவே, சைதன்யரை சமாதானப் படுத்த ஸ்வரூப தாமோதரர் மற்றும் ராமானந்தர் முயற்சி செய்தார்கள். அவர்கள் சண்டிதாசர், வித்யாபதி, ஜெகன்னாத வல்லபர் இயற்றிய பாடல்கள் மற்றும் கீத கோவிந்தம் மற்றும் கிருஷ்ணா கர்ணாம்ருதம் முதலியவைகளிலிருந்து பக்திப் பாடல்களைப் பாடினார்கள். ஆனால் சைதன்யரின் கதறல்கள் நள்ளிரவு வரை நீடித்தது. அச்சமயத்தில் ஸ்வரூபர் அவரது அறைக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்தார். கிருஷ்ணரின் அன்பு சைதன்யரின் மனத்தை, சிலிர்க்க வைத்தது. அவர் கிருஷ்ணரின் நாமாவளியைப் பாடினார். இந்தப் பிரிவுத்துயர் அவரது மனதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் சுவர்மீது முகத்தை அழுத்தி தேய்த்துக் கொண்டார். அவரது முகம், மூக்கு, கன்னங்கள் ஆகிய இடங்களில் சுவரின் மீது மோதியதன் காரணமாக அடிபட்டு இருந்தன. இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால் அவர் தன்னை மறந்த நிலையில் இருந்தார். சைதன்யர் ஆனந்தப் பரவசத்தில் இருந்தார். ஆனால் அவர் இதைப்பற்றி எதுவுமே அறியவில்லை. ஸ்வரூபர் அவரது முணுமுணுப்பைக் கேட்டார். அவர் அறைக்கு உள்ளே சென்று விளக்கு ஏற்றிப் பார்த்தார். சைதன்யரின் முகத்தின் பல இடங்களில் இரத்தம் அப்பியிருந்தது. ஸ்வரூபர் மிகவும் வருத்தமடைந்தார். அவரைப் படுக்கைக்கு அழைத்து வந்தார். பின்னர் அவருக்குப் பணிவிடை செய்தார். அவரைத் தேற்றினார். சைதன்யர் கடைசிகாலம் வரை 'கம்பீரா' என்னும் வீட்டில் வாழ்ந்து வந்தார்.

சைதன்யர் பல இறைலீலைகள் நடத்தினார். கௌட தேசத்து வான்வெளியில் முழு நிலவாக விளங்கினார். நாற்பத்து எட்டு ஆண்டுகள் இந்த உலகத்தில் இருந்தார். அழகிய லீலைகளைப் புரிந்தார். கலப்பற்ற இன்பத்தை உலகிலுள்ள அனைவருக்கும் கொடுத்தார். பின்னர் அவர் நிலைபெற்ற அழகான

வடிவமான உலகத்தாரின் பார்வையில் இருந்து தம்மை மறைத்துக் கொண்டார்.

இம்மண்ணுலகில் இருந்து சைதன்யர் மறைந்த நாள் பற்றிய குறிப்புகள் நம்மை குழப்பும் வகையில் அமைந்து உள்ளன. ஒவ்வொரு நாளும் அவர் ஜெகன்னாதர் கோயிலுக்கு செல்வது வழக்கம். அன்றைய தினமும் கோயிலுக்குச் சென்றார். சைதன்யர் காஸிமிஸ்ரர் வீட்டிலிருந்து கிளம்பினார். கோயிலுக்குள் .சென்றார். ஜெகன்னாதரின் மென்மையான பளபளக்கும் முகத்தை தரிசனம் செய்தார். அவர் கருவறையில் இருந்தார். உடனே கருவறையிலிருந்த கதவுகள் உட்புறமாக தாமாகவே மூடிக் கொண்டன. உண்மையிலே இயற்கையை மீறி நடந்த அந்த செய்கைக்கான காரணம் தெரியவில்லை. இருந்தபோதிலும் அவர் இறைவன் ஜெகன்னாதரின் கமல முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தார். அவர் மெய்ம்மறந்த நிலையை அடைந்தார். "ஓ! ஜெகன்னாத இறைவனே! என்னிடம் அன்பு காட்டுங்கள்! உங்களது கமல பாதத்தில் எனக்குத் தங்க இடமளி" என்று வேண்டினார். இவ்வார்த்தைகளை கூறிய உடனேயே சைதன்யர் ஜெகன்னாத இறைவன் அருகே சென்று கட்டித் தழுவிக் கொண்டார். பின்னர் ஜெகன்னாதருடன் இரண்டற கலந்தார். இந்நிகழ்ச்சி சைதன்யரின் மறைவு குறித்து கிளைக்கதையாக பெரும்பாலான இடங்களில் நிலவுகிறது.

ஆனால் நவீன யுகத்தில் இந்நிகழ்ச்சி பூரணமாக நம்பத்தக்கதாகவும் இல்லை. நம்பிக்கைக்கு உரியதாகவும் இல்லை. சைதன்யரின் வாழ்க்கையை எழுதிய வரலாற்று ஆசிரியர்கள் எவ்வாறு அவர் அனைவரின் பார்வையில் இருந்து வெளிப்படையாக மறைந்து இருக்க முடியும்? என்ற கருத்தில் மாறுபடுகிறார்கள். இந்த நிகழ்ச்சியின் உண்மையையோ அல்லது அதைப்பற்றித் தெரியாதவர்கள் நிறையபேர் உள்ளனர். அவர்கள் சைதன்யரின் மறைவைப் பற்றி மட்டும் தெரிவித்துள்ளார்கள். அவர்களுள் லோசனதாஸர் என்பவர் மட்டும் சைதன்யரின் மறைவு பற்றி (அப்ரகாத லீலா) தமது சைதன்ய மங்களம் என்ற புத்தகத்தின் கடைசி அத்தியாயத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

ஜெகன்னாத இறைவன் ஆலயத்திற்குள் சென்ற சைதன்யர் ஸ்ரீ ஜெகன்னாதருடன் இரண்டற கலந்துவிட்டார் என

பிருந்தாவன தாஸர் கருதுகிறார். அவர் இறைவன் அடி சேர்ந்த சரியான நாளும் நேரமும் குறிப்பிடவில்லை. பிருந்தாவன தாஸர் சைதன்ய பாகவதம் என்ற நூலை எழுதியுள்ளார். அந்த பழைய கையெழுத்துப் பிரதியில் சைதன்யர் மறைந்ததைத் தவிர வேறு எதையும் அவர் குறிப்பிடவில்லை. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பு அம்பிகாசரன் பிரம்மச்சாரி என்பவர் சைதன்ய பாகவதர் அப்ரகாசித அத்யயத்ரயா என்ற பெயர் கொண்ட ஒரு சிற்றேட்டை வெளியிட்டார். அப்புத்தகம் இதுவரை அச்சில் ஏறாத சைதன்ய பாகவதம் என்னும் புத்தகத்தின் மூன்று அத்தியாயங்களைக் கொண்டது புதியதாக மூன்று அத்தியாயங்கள் வெளியிடப்பட்டன. அவற்றுள் இறுதி அத்தியாயத்தில் சைதன்யரின் மறைவு குறித்துச் சில புதிய செய்திகள் எழுதப்பட்டு உள்ளன. பதினான்காவது அத்தியாயத்தில் ஒரு செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது சைதன்யர் கிருஷ்ணரின் பிரிவால் ஒரு நாள் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தார். ஜெகன்னாத ஆலயத்தில் உள்ள பாண்டாக்கள் மற்றும் புரோகிதர்களின் தடைகளைச் சைதன்யர் பொருட்படுத்தவில்லை. அவர் கோயிலுக்குள் சென்றார். அந்த இடத்தில் பாண்டாக்கள் கையில் பிரம்புடன் காணப்பட்டனர். அவர்கள் வேகமாக சைதன்யர் இருந்த இடத்திற்கு விரைந்து சென்றனர். சைதன்யர் ஒரு பிச்சைக்கார வேடத்தில் மாற்று உடை அணிந்து மதன கோபாலனின் இடத்திற்குச் சென்றார். அதன்பின்னர் எவருக்கும் அவர் இருக்கும் இடம் தெரியவில்லை.

லோசனதாஸரும் சைதன்ய மங்களத்தில் இதே கருத்தினைக் கூறுகிறார் ஆனால் ஜெகன்னாதரது ஆலயத்தில் சைதன்யரின் மறைவு ஏற்படவில்லை என்று அவர் கருதுகிறார். ஆனால் குண்டீசவாடி என்ற இடத்திற்கு அருகே அது நிகழ்ந்தது. கி.பி.1534ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று பிற்பகல் நேரத்தில் இந்தச் சம்பவம் நடந்தது.

சைதன்யரின் மறைவு குறித்து சில புதிய செய்திகளைச் 'சைதன்ய மங்களம்' என்ற தமது படைப்பில் ஜெயநந்தர் தருகிறார். அப்படைப்பின் எட்டாவது காண்டத்தில் சைதன்யரின் மறைவு கூறப்பட்டுள்ளது. அந்தச் சம்பவம் இயற்கைக்கு மீறிய கவிதை நடையில் மிகைப்படுத்தப்பட்ட செய்தியிலிருந்து மாறுபடுகிறது. இது தனித்தன்மை வாய்ந்ததாகும். ஆடி மாதம் நடைபெற்ற

தேரோட்ட விழாவின்போது சைதன்யர் தன்னை மறந்த நிலையில் இறைவனை நினைத்து நடனமாடிக் கொண்டு இருந்தார். அப்பொழுது ஒரு செங்கல் துண்டில் இடித்துக் கொண்டார். அதனால் அடி பலமாக விழுந்தது. வலி தாங்காமல் துடித்தார். பின்னர் டோடா கோபிநாதர் ஆலயத்தில் ஆடி மாதம் சப்தமி திதி அன்று இரவு சுமார் 11 மணி அளவில் மரணம் அடைந்தார் இவ்வாறு ஜெயநந்தர் கருதுகிறார் சைதன்யரின் மறைவு வியக்கத்தக்கும் வண்ணம் அமைந்து உள்ளது. அவரது திடீர் மறைவு பற்றிய செய்தியை பக்தி ரத்னாகரம் என்ற நூலில் காணலாம். அந்நூல் நரஹரி சக்கரவர்த்தியால் எழுதப்பட்டு உள்ளது. அவரது நூலின்படி நரோத்தம் தாகூர் என்பவர் பூரி நகருக்கு வந்து இருந்தார். சைதன்யரின் மறைவு, தாகூரின் பூரி விஜயத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு உள்ளது. அச்செய்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு உள்ளது. மாமுதாகூர் என்பவர் கடாதரரின் சீடராவார். அவர் கோபிநாதர் ஆலயத்தின் புரோகிதராக இருந்தார். அவர் தான் சைதன்யரைக் கடைசியில் பார்த்த செய்தியை நரோத்தமரிடம் கூறினார். சைதன்யர் இந்த கோபிநாதர் ஆலயத்திற்கள் நுழைந்தார். ஆனால் அதன் பின்னர் அவர் வெளியே வராது மறைந்து விட்டார். இதை உணர்ந்த கடாதரர் நினைவினை இழந்து கீழே சாய்ந்து விட்டார் ஏனைய புரோகிதர்கள் உரத்த குரலில் அழுதனர். பக்திரத்னாகரம் என்ற படைப்பில் கூறிய செய்திபடி கி. பி. 1534ல் மாசி மாதம் (பிப்ரவரி) மறைந்தார். ஆனால் மற்றவர்கள் கருத்துப்படி சைதன்யரது மறைவு கி. பி. 1534ல் ஆடி மாதம் (ஜூலை) நிகழ்ந்தது.

கிருஷ்ணதாச கவிராஜர் சைதன்ய சரிதாம்ருதம் என்ற சிறப்பான நூலை எழுதி உள்ளார் அந்த படைப்பில் உண்மையிலேயே அவர் சைதன்யரின் மறைவு குறித்து ஒன்றும் குறிப்பிடவில்லை சைதன்யர் மெய்ம்மறந்த நிலையில் இருந்தார் ஆனந்தப்பரவசத்தில் மூழ்கினார். பின்னர் அவர் இறந்து விட்டார் அவரது கருத்துப்படி சைதன்யர் 48வது வயதில் 1455 சகாப்த ஆண்டில் மறைந்தார். இருந்தபோதிலும் சைதன்யர் பற்றிய கருத்துப்படி அவர் 1455 சகாப்த ஆண்டு ஆடி மாதம் 31ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று அவ்வுலகை விட்டு மறைந்தார் அந்நாள் வளர்பிறையின் ஏழாவது நாளாகும் சைதன்யரின் மறைவு நாள் சர்ச்சைக்கு உரியதாக அமைந்து உள்ளது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய செய்தி ஆகும்

நீலாகலா என்ற இடத்தில் சைதன்யரின் வாழ்வின் பெரும்பகுதி செலவிடப்பட்டு உள்ளது. எனவே அவரது நீண்ட வாழ்வின் ஏற்பட்ட சில உண்மைச் சம்பவங்கள் ஒரிய சீடர்களால் எழுதப்பட்ட படைப்பிலிருந்து நமக்கு கிடைத்து இருக்கலாம். சைதன்யரின் வாழ்க்கை பற்றிய விவரங்களை நாம் ஒரிய மொழி மற்றும் இலக்கியங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். அவையாவன: 1) மாதவர் எழுதிய சைதன்ய விலாசம், 2) ஈஸ்வர தாசர் எழுதிய சைதன்ய பாகவதம், 3) திவாகரதாசர் எழுதிய ஜெகன்னாத சரிதாம்ருதம், 4) கோவிந்த தேவர் எழுதிய கௌர கிருஷ்ணோதய காவியம், 5) வைணவதாசர் வழங்கிய சைதன்ய சாக்தம் இப்பட்டியலில் கடைசியாக குறிப்பிடப்பட்ட நூல் சைதன்யரின் மறைவு குறித்து பரபரப்பூட்டும் வகையில் கூறுகிறது. சைதன்யர் இரவு 11 மணி அளவில் உணர்வற்ற நிலையில் இருந்தார். ஜெகன்னாத கோயிலுக்குப் பின்புறம் உள்ள கருட முத்திரையுடன் காணப்பட்ட ஒரு தூணிற்குப் பின்னால். சந்தன விஜய சடங்கிற்குப்பின் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டது. ஸகல ஜெகன்னாதர் அதாவது சைதன்யர் அசலதரு பிரம்ம ஜெகன்னாதரின் சந்நிதானத்திற்குள் சென்று பெற்ற கண நேர தரிசனத்தில் எல்லா கதவுகளும் தாமே மூடிக் கொண்டன என்று நூல் ஆசிரியர் கருதுகிறார்.

சைதன்யரின் மறைவு இயற்கையானதா என்ற வினாவை பல முரண்பாடாக கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. அவர் இறைவனுடன் இரண்ட கலந்து விட்டார் என்ற கருத்தை ஏற்க முடியவில்லை. ஏனெனில் அவரது உயிரற்ற உடல் இருந்திருக்க வேண்டும். அவர் கடலில் மூழ்கி விட்டார். என்றோ ஒரு பிச்சைக்காரன்போல மாறுவேடத்தில் எங்கேயோ சென்று விட்டார் என்பதையும் நம்ப முடியவில்லை. ஒரு தற்கால சிந்தனையாளரின் கூற்றுப்படி அவுல்சந்த் மற்றும் சைதன்யரின் அடையாளங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. சைதன்யர் ஜெகன்னாதர் கோயிலிலிருந்து பிச்சைக்காரன் வேடத்தில் நழுவி விட்டார். பின்னர் பல பகுதிகளைச் சுற்றி வந்தார். கடைசியாக நாடியா என்ற இடத்தை அடைந்தார். அதன் பின்னர் சைதன்யர் அவுல்சந்த் என்று அழைக்கப்பட்டார். கர்த்தபாஜபள்ளியின் சிறந்த சமய போதகராகப் போற்றப்பட்டார். இந்த கருத்தை ஏற்றுக்கொண்டால் சைதன்யர் 284 ஆண்டுகள் இவ்வுலகில்

வாழ்ந்தார் என்ற உண்மை புலப்படும். இது முற்றிலும் இயலாத ஒன்று. அவருக்கு மரணம் இயற்கையாக நிகழவில்லை. அவரது மறைவு அந்த காலத்து ஒரிய நாட்டு சரித்திரத்துடன் சம்பந்தப் பட்டது. பிரதாபருத்ரன் என்ற அரசன் ஒரிய நாட்டின் மிகச் சிறந்த முறையில் ஆட்சி நடத்தினான் பின்னர் அந்த அரசன் சைதன்யரின் சீடராக மாறினான். இது நாம் அனைவரும் அறிந்த செய்தி. ஆனால் சைதன்யர் ஆரம்பத்தில் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை. பிரதாபருத்ரன் தனது வாழ்வின் இறுதி நாட்களில் நிர்வாகத்தில் அதிகமாக அக்கரை காட்டவில்லை. சைதன்யரை கிருஷ்ணரின் அவதாரமாக நினைத்தான். சைதன்யருடன் மதசம்பந்தப்பட்ட கருத்துகளை பரிமாறிக் கொண்டான். தனது பெரும்பாலான நேரத்தை சைதன்யருடனேயே செலவு செய்தான். அரசன் அதிகாரத்தில் பற்றற்று இருந்தது அரசு அதிகாரிகளுக்கு பெரிய மனக்குறையாக இருந்தது. ஜெகன்னாத ஆலயத்தில் இருந்த பாண்டாக்கள் பொறாமை அடைந்தார்கள். ஏனெனில் அரசன் ஜெகன்னாதரை விட சைதன்யருக்கு அதிக மதிப்பு கொடுத்தான். எனவே அவர்கள் சைதன்யரை மறைமுகமாகத் தீர்த்துக்கட்ட முடிவு செய்தனர். கோவிந்த வித்யாதரர் என்பவர் பிரதாபருத்ரன் என்ற அரசனின் படைகளில் முக்கிய தலைவராக இருந்தார். அவரது துணையுடன் சதித்திட்டம் தீட்டப்பட்டது. எனவே சைதன்யர் கொல்லப் பட்டார் என்பது வரலாறு தரும் செய்தியாகும்.

இதற்குச் சான்றாக சைதன்யரின் மறைவிற்குப் பின் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் திகழ்கின்றன. பிரதாபருத்ரன் என்ற அரசன் தன் குடும்பத்தினருடன் கட்டாக் சென்று இருந்தான். அச்சமயம் சைதன்யரின் மறைவு குறித்த செய்தி வெளியானது. சைதன்யரின் சீடர்கள் உடனேயே பூரியிலிருந்து பிருந்தாவனத்திற்கு விரைந்து சென்று விட்டார்கள். கிருஷ்ண வழிபாட்டில் சங்கீர்த்தனம் முக்கிய அங்கமாக விளங்கியது. அது சைதன்யரின் மறைவிற்குப் பிறகு கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளுக்கு முழுவதும் நிறுத்தப் பட்டது. வைணவ சமுதாயம் தலைசிறந்த ஆசிரியரின் மறைவால் ஐம்பது ஆண்டு காலம் பெரிய அதிர்ச்சியில் மூழ்கியது. நாடு முழுவதும் நிலவிய அவர்களது சங்கீர்த்தன இசை எதிர்பாராமல் திடீரென நின்று விட்டது. சங்கீர்த்தன ஒலி கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலத்திற்கு வங்காள நாடு மற்றும் ஒரிசா பகுதிகளில் எதிரொலிக்கவில்லை.

சைதன்யரின் சீடர்கள்
(சைதன்ய சம்பிரதாயம் அல்லது பரிகாரங்கள்)

இவ்வுலகில், தமது சித்தாந்தக் கூறுகளைப் பரப்புவதற்கு பெரும்பாலான சமய போதகர்கள் நூல்களை இயற்றவில்லை என்பது நன்கு அறியப்பட்ட, அதே நேரத்தில் தனித்தன்மையுடைய உண்மை ஆகும் தத்துவ மற்றும் சமயவினையினைச் சார்ந்த சீடர்களும், தோழர்களும் தாங்களாகவே தங்களது முறையான பள்ளிகளை முறைப்படுத்திக் காட்டினர். கிறித்தவ மதத்து பீட்டர் மற்றும் பால் போல கௌடிய வைணவ இயலின் முக்கிய சித்தாந்தக்கூறுகளை ஸனாதனர் மற்றும் ரூபர் போன்றோர் முறைப்படுத்தியுள்ளனர். சைதன்யர் தமது வாழ்நாளிலேயே இறையன்பினை (கிருஷ்ணபிரேமை) சொற்பொழிவாற்ற ஆவலாக இருந்தபோதிலும், அவர் தாமாகவே எந்த தத்துவபள்ளி அல்லது தனிக்குழுவினைத் தோற்றுவிக்கவில்லை. இருப்பினும், சில சமயங்களில் அவர் சில பயனுள்ள விளக்கப்பேருரைகளை தமக்கு அருகாமையிலுள்ள சீடர்களுக்கு அறிவித்து உள்ளார். கௌடிய வைணவ இயத்தின் சிறந்த ஆதாரமாக இவை தோழர்களுக்கு உதவியாக விளங்கின. பிருந்தாவனத்து கோஸ்வாமின்கள் முக்கியமாக, ஸ்ரீசனாதனர், ஸ்ரீரூபர், ஸ்ரீஜீவர் ஆகியோர் வைணவ இயத்தின் மூல ஆதாரத்தினை தோற்றுவிக்காமல் இருந்திருந்தால், மூலக்கோட்பாடுகளை பறைசாற்றாது இருந்திருந்தால் இப்புதிதாக தோற்றுவிக்கப்பட்ட சமய நம்பிக்கையானது ஒரு குறிப்பிட்ட மண்டலப்பகுதி அல்லது ஒருசில மக்களின் வாழ்வியல் அமைப்பாக இருந்திருக்கும். மனக்கிளர்ச்சியைத் தூண்டும் போக்கு மற்றும் அனுபவம் கடந்த அறிவின் மூலதத்துவ ஆராய்ச்சி நடைகொண்ட சைதன்ய-நம்பிக்கை வங்கநாட்டு சமூகம் மற்றும் கலாச்சாரத்தில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. அவை சைதன்யர் மறைந்தவுடனேயே முழுமையாக மறைந்திருக்கும். எனவே வைணவ இயலிற்கு அவர்கள் ஆற்றிய பங்கினை நாம் முறையாக மதிப்பிடவேண்டும். சைதன்யரின் சீடர்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது கௌடர்களின் சீடர்கள் என்றும் மற்றும் பிருந்தாவனத்துச் சீடர்கள் எனக் குறிப்பிடலாம் உத்கல தேசத்தினைச் சார்ந்த

மற்றொரு பிரிவு உள்ளதாக ஒருசிலரின் கூற்றுப்படி தெரிய வருகிறது. சைதன்யரின் தோற்றத்திற்கு வெகுகாலத்திற்கு முன்பே வங்கத்தில் சில சீடர்கள் இறைவன் கிருஷ்ணரின் புனித நாமத்தை இசைப்பண்ணோடு பாடுவதில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. அவர்களுள் ஸ்ரீவாஸர், சந்திரசேகரர், ஜெகதீசர், சோபிநாதர், கங்கதாஸர், புண்டரீக வித்யாநிதி மற்றும் முகுந்தன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சைதன்யரின் மிக முக்கிய சீடர்களுள் அத்வைதாச்சாரியார், நித்யானந்தர் மற்றும் ஹரிதாசர் (அவரது முகம்மதிய தோழர்) குறிப்பிடத்தக்கவர்கள்.

அத்வைதாச்சாரியார்

சைதன்யரின் பெரும்பாலான சீடர்களைப் போலவே அத்வைதாச்சாரியரும் ஸ்ரீ ஹட்டத்து நீடுதங்கி வாழும் குடியிருப்பாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். சைதன்யரின் பிறப்பிற்கு கிட்டதட்ட அரை நூற்றாண்டிற்கு முன்பு கி.பி. 1435ல் ஸ்ரீஹட்டத்து நவகிராமம் என்ற பகுதியில் உள்ள பர்ஜானா எனும் இடத்தில் அத்வைதர் அவதரித்தார். அவர் தந்தையார் குவேரதர்க்க பஞ்சானனர் ஒரு சிறந்த புகழ் வாய்ந்த அறிஞராகத் திகழ்ந்தார். அவரது இளமைப் பருவத்தில் அத்வைதர் கமலாக்ஷ (கமலகர்) பட்டாச்சாரியார் என்று அழைக்கப்பட்டார். கமலாக்ஷர் தமது பெற்றோருடன் ஸ்ரீஹட்டத்தினை விட்டு, சாந்திபூரில் நிலையாகத் தங்குவதற்கு வந்தார். அவர் ஜோதிடம், இந்திய தத்துவத்தின் ஆறு முறைமைகள் மற்றும் நான்கு வேதங்களைக் கற்றார். வேதங்களில் தமது இணையற்ற முழு நிறைவு நோக்கிய திருத்த வளர்ச்சிக்காக வேத பஞ்சானனர் என்ற புகழ்மிக்க பட்டத்தினை வென்றார். அத்வைதாச்சாரியார் என்ற பெயரானது பெரும்பாலும் அவரது ஆரம்ப காலத்தினுடைய வேதாந்த தத்துவத்தினது சமயகுருவின் முன் அறிவிப்புக் கட்டளைப்பள்ளியுடைய முன் நினை செய்திகளின் இலக்கிய வடிவான திரட்டினை அறிவிப்பதாக அமைந்தது. சாந்திபுரத்தில் வசித்துக் கொண்டு நவத்வீபத்தில் ஒரு பாடசாலையினை நடத்தி வந்தார். சைதன்யரின் மூத்த சகோதரரான விஸ்வரூபா அப்பள்ளியில் பயின்றார். அதன் பின்

அத்வைதர் சைதன்யரின் சீடராக விளங்கினார். இருந்தபோதிலும் ஆரம்பகாலத்தில் தான் கொண்டு இருந்த வேதாந்த கருத்துகளிலிருந்து அவர் மாறுபடவில்லை. அவர் உணர்ச்சி பூர்வமாக பக்தியுடன் அறிவு சார்ந்த அத்வைத கோட்பாடுகளை திருத்தி பக்குவப்படுத்தப்பட்டதில் நம்பிக்கை கொண்டார் என ஒரு சாரார் கருதுகின்றனர்.

சைதன்யரின் வருகைக்கு முன்பாக நவத்வீபமானது சமரச முறையில் வறண்ட ஞான கோட்பாட்டு கலாச்சாரத்தில் மூழ்கி இருந்தபொழுது அத்வைதர் ஹரியின் நாமாவளிகளை ஸ்ரீவாஸரின் இல்லத்தில் பண்ணமைத்து இசையோடு பாட வைணவர்களின் குழுவினரை ஒருங்கிணைத்து முன் நடத்திச் சென்றார். அத்வைதரின் அர்ப்பணம் செய்த நீண்ட கால ஆசையானது சைதன்யரின் வெளிப்பாட்டினை விரைவாக்கியது. பிருந்தாவனத்து கோஸ்வாமிகளின் வைணவ நம்பிக்கைக்கு பலமான அடிப்படையாக அமைந்தது. அது சைதன்யரால் சொற்பொழிவு ஆற்றப்பட்டது. ஆனால் கௌடரின் சீடர்கள் சைதன்யரை கிருஷ்ணரின் அவதாரமாகவே கொண்டார்கள். இம்முதுமை தளர்ச்சியுற்ற ஆசாரியர் அல்லலுறும் ஆன்மாக்களை கட்டறுத்து விடுவிக்கவும் மற்றும் ஹரியின் நாமாவளிகளை போதிக்கும் செயல்கட்கும் சைதன்யரை ஈடுபடுத்தி இருக்கலாம்.

நித்யானந்தர்

வைணவ நம்பிக்கைக்கு நித்யானந்தர் வழங்கிய பங்கு மிகுந்த பயபக்தியுடன் பெருமதிப்புடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இன்றுகூட சிலர் நிடாய் என்பவரை நிமாயின் மூத்த சகோதரராகக் கருதுகின்றனர். (இது எவ்வாறேனும் உண்மைக்குப் புறம்பானது). சைதன்யர் தாமே அத்வைதரையும் நித்யானந்தரையும் புனித நாமாவளிகளை (நாமதர்மம்) வங்கத்தில் இசைப் பண்ணோடு பரப்புவதற்கு அறிவுறுத்தினார். அவரிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பானது வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டது. இது முக்கியமாக வைணவ நம்பிக்கையில் அவரது முயற்சி மூலமாக வங்கத்தில் பெருவாரியான எதிர்செயல் மற்றும் ஏற்பினை உருவாக்கியது. அவரது உண்மையான பெயர் பெரும்பாலும் குவேரராகும். அவர் பிர்பம் மாவட்டத்திலுள்ள ஏக்சகா கிராமத்தில் கி.பி.1478ஆம் ஆண்டு பிறந்தார். அவரது

தந்தையார் பெயர் ஹடாய் பண்டிதர் அல்லது ஹாடோ ஓஜா மற்றும் அவரது தாயார் பெயர் பத்மாவதியாக இருந்தது.

குழந்தைப் பருவத்திலிருந்தே நித்யாநந்தர் ஒரு இரவலருடன் பல பகுதிகளுக்குத் தீர்த்த யாத்திரைகளை மேற்கொண்டார். அவரது குறுகியகால வாசத்தில் மாதவேந்திரபுரியினைச் சந்தித்தார் அச்சமயம் அவர் பக்தி கலாசாரத்தினால் (பக்தி தர்மம்) கவரப்பட்டார். அவரது ஆரம்பகால வாழ்வில் சைவ இயத்தைப் பின்பற்றினார் என்பதனை அவதூதர் என்ற பட்டம் அறிவுறுத்துவதாக அமைகிறது. இருப்பினும் மாதவேந்திர புரியினுடனான சந்திப்பு பக்தி கலாசாரத்தினை நோக்கி அவரது பற்றுதலை மேலோங்கச் செய்தது. சைதன்யர் நவத்வீபத்தில் தோன்றியுள்ளார் என்பதனை கேட்டவுடனேயே கி.பி.1509இல் அங்கு வந்து சேர்ந்தார். அவர் சைதன்யரைவிட வயதில் கிட்டத்தட்ட எட்டு வயது மூத்தவர். சைதன்யரின் தாயார் சசிதேவி அவரை தமது மூத்த மகன் விஸ்வரூபராகக் கருதினார் சீடர்களுக்கு பலராமனது அவதாரமாக அவர் கருதப்பட்டார் ஜெகாய், மாதாய் ஆகிய நவத்வீபத்தின் இரு இகழத்தக்க போக்கிரிகளுடன் எதிர்பட்டு இறுதியில் அவ்விருவரையும் வைணவ இயத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார். உண்மையில் சைதன்யர் போதித்தபடி அன்பின் மதத்தினை (பிரேமதர்மம்) பரப்புவதற்கு நித்யானந்தர் வங்க நாட்டிற்கு விரைந்தார். அவர் முதன்முறையாக சைதன்யரின் உருவ வழிபாட்டினை அறிமுகப்படுத்தினார். வைணவ நம்பிக்கை மற்றும் இயக்கத்தின் வரலாற்றில் சைதன்யரின் முக்கியத்துவம் அடங்கியிருப்பதற்கான காரணம் யாதெனில் அவர் சைதன்யரின் அன்பான மதத்தினை சாதி மற்றும் முறைப்பட்ட சமயக் கோட்பாடுகளைப் பொருட்படுத்தாது போதனை செய்தார். சைதன்ய நம்பிக்கையின் தாராள மனப்பான்மையானது அனைவருக்கும் விரிவுப்படுத்தப் பட்டது. மேலும் நித்யானந்தரது தனிச் சார்பற்ற தன்மை காரணமாகவே ஒவ்வொருவரும் இணைந்தனர். நித்யானந்தர் தமது ஆழமான தொலைநோக்குப் பார்வையினால் கௌடிய வைணவ இயத்தில் ஒரு முழு நிறைவான புதிய நோக்கினை கொணர தம்மால் இயன்ற வகையில் முயற்சித்தார். அதன் முடிவு மனதில் ஆழ்ந்து பதியவைக்கத் தக்கதாயும், ஆக்க வளமுடையதாகவும் அமைந்தது.

பிருந்தாவனத்து ஆறு கோஸ்வாமின்கள்

பிருந்தாவனம் இந்துக்கள் புனித யாத்திரை மேற்கொள்ளும் ஒரு புனிதத் தலமாகும். இந்த கோஸ்வாமின்கள் இயற்றிய படைப்புகளில் இலக்கு இயல் நிறைவு உள்ள தாக்கங்கள் பிரதிபலித்து இருக்கின்ற காரணத்தினால் கௌடிய வைணவ இயம் மற்றும் அதன் தத்துவமும் தத்துவத்தின் தனிப்பட்ட ஒரு கிளையாக உருவானது. அது ஒரு வேளை கௌடா மற்றும் உத்கலாவிற்கு மட்டும் வரையறுக்கப்பட்டு இருந்தால் அது மூல ஆதார உண்மையினை சார்ந்த அறிவின் ஒரு புதிய கிளையாக தானாகவே பரவியிருந்து இருக்காது.

கிருஷ்ணதாச கவிராஜர் குறிப்பிட்டபடி ஆறு கோஸ்வாமின்கள் ஸ்ரீரூபர், ஸ்ரீசனாதனர், ரகுநாதபட்டர், ஸ்ரீஜீவர், கோபாலபட்டர் மற்றும் ரகுநாததாசர் ஆகியோர் ஆவர். வைணவர்கள் வட்டாரத்தில் இந்த கோஸ்வாமியின்களில் சனாதனர், ரூபர் மற்றும் ஜீவர் ஆகியோர் சிறந்து விளங்குகின்றனர். (பிரசித்தமானவர்கள்) ஏனைய மூவரும் தியானம் மற்றும் வழிபாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

ரகுநாதபட்டர்

கிருஷ்ணதாச கவிராஜரின் சைதன்ய சரிதாம்ருதத்தில் ஒரு பணிவு நயம் வாய்ந்த வைணவ இரவலராகத் தாமே திகழ்ந்தார். ரகுநாதர் பற்றிய குறிப்பு எவ்விடத்திலும் கிருஷ்ணதாச கவிராஜரின் சைதன்யாம்ருதத்தில் நாம் காண இயலவில்லை. ரகுநாதரின் தந்தையான தபனமிஸ்ரர் சைதன்யரின் முதல் சீடராகத் திகழ்ந்தார். இரகுநாதர் சமைப்பதில் சிறந்து விளங்கினார். சைதன்யர், ரகுநாதர் சமைத்த உணவினை அடிக்கடி உண்டு மகிழ்ந்து வந்தார். சைதன்யரின் அறிவுரையின் பேரில் ரகுநாதர் பிருந்தாவனத்திற்கு வந்தார். பின்னர் ரூபர் மற்றும் சனாதனரிடமிருந்து பாகவதத்தின் பாடங்களைப் பெற்றுக் கொண்டார். அவர் இன்னிசை எழுப்புகின்ற குரல்வளம் பெற்றிருந்தார். மேலும் இசையில் முழு நிறைவான திறம் பெற்றிருந்தார். வைணவர்களின் வட்டாரத்தில் அனைவராலும் பயபக்தியுடன் அவர் நினைக்கப்படுகிறார். அவரது பணிவு நயம்

வாய்ந்த மற்றும் முழு நிறை நலம் வாய்ந்த வாழ்வினை வாழ்ந்ததால் ரகுநாதர் வேறு எந்த படைப்பிணையும் இயற்றவில்லை.

ரகுநாத தாஸர்

ஹூக்ளி மாவட்டத்தில் மிகப் பிரசித்தமான சப்தகிராமத்தினது மிராசுதார் கோவர்த்தனரின் புதல்வராக ரகுநாததாஸர் திகழ்ந்தார். அவரது பிறப்பும் வளர்ப்பு முறையும் ஓர் அரசருக்குரிய முறையில் அமைந்தது ராம்கேலி செல்லும் வழியில் சாந்திபூரில் உள்ள அத்வைதரின் இல்லத்தில் சைதன்யர் தங்கியிருந்தபோது பதின்மூன்று வயது முதல் பத்தொன்பது வயது வரை நிலையிலிருந்த ரகுநாதர் அவரைச் சந்தித்தார். சைதன்யர், அச்சிறுவனை முழு வளர்ச்சியடையும்வரை காத்திருக்குமாறு அறிவுரை கூறினார். அவரது தந்தையார் அவரைக் கண்டிப்பாக கண்காணித்து இருந்தபோதிலும் மாணவ வயதினை அடைந்த ரகுநாதர் நீலாகலாவில் இன்னலுக்குட்பட்ட பயணத்தினை மேற்கொண்டு சைதன்யருடன் தொடர்பு கொள்ள ஓடிவந்து விட்டார். சைதன்யரும் தமது இளம் சீடராக அவரை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு அவருக்கு ஒழுங்கான கல்வியினை அளிப்பதற்கு ஸ்வரூபதாமோதரிடம் அவரை ஒப்படைத்தார். ரகுநாதரின் வேண்டுகோளுக்கு இணங்க சைதன்யர் பெரும்பாலும் சிக்ஷாஷ்டகம் எனப் பெரும்பாலும் கருதப்படும் வைணவ தத்துவம் பற்றிய எட்டு அடி வரையறை செய்யுட்களை அவருக்கு கூறினார். அவர் தனது வாழ்வின் பிற்பகுதியில் அனைத்தையும் துறந்த இரவலனுக்கான வழிபாட்டிற்குரிய, ஏனையோர் உண்ட எச்ச மிச்சங்களை ஏற்றுக்கொண்டு ஒரு வாழ்வினை மேற்கொண்டார். ரூபர் மற்றும் சனாதனரின் மறைவிற்குப்பிறகு ரகுநாதர் இயற்கை எய்தினார்.

ரகுநாதர் வைணவ தத்துவத்தில் மட்டும் வல்லுநராகத் திகழ்ந்ததோடு மட்டுமல்லாது வடமொழியிலும் சிறந்த அதிகாரம் செலுத்தும் திறமையினைப் பெற்றிருந்தார். ஆகமொத்தம் 29 பாசுரங்கள் அவரால் இயற்றப்பட்டு உள்ளதாக கண்டு எடுக்கப் பட்டுள்ளது. விலாப குசுமாஞ்சலி, பிரேமா பராபிதா ஸ்தோத்திரம் போன்ற பாசுரங்கள் ஸ்தலமாலை (பாசுரங்களின் மாலை)யில் மற்றவற்றிற்கு இடையில் அவரால் இயற்றப்பட்டு உள்ளது.

கோபாலபட்டர்

வைணவ வட்டாரத்தில் கோபால பட்டர் பற்றிய மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அவரது உண்மையான ஆய்வுக் கட்டுரையில் அவரைப் பற்றிய எந்த ஒரு நிலையான தகவலையும் நாம் அறிய முடியவில்லை. கிருஷ்ணதாச கவிராஜர் அவரை ஆறுகோஸ்வாமின்களில் ஒருவராகக் குறிப்பிட்டு அதிக மரியாதை செலுத்தியிருந்தபோதிலும், கோபாலபட்டர் பற்றி அவர் ஐயுறுத்ததக்க வகையில் மிகுதியாக பேசாது உள்ளார். பிருந்தாவனத்து மிக மரியாதைக்குரிய ஆசான்களாக ரூபரும் சனாதனரும் திகழ்ந்தபோதிலும் முகம்மதியர்களுடன் அவர்களது உடனியல்வு காரணமாக அவர்கள் ஆசான்களாக விளங்குவதனை மறுத்தனர். எனவே சமயவகையில் துவக்கம் மற்றும் அறிவுரை கூறும் செய்தியினைச் செயல்படுத்தும் செய்கையானது பணிவு நயம் சார்ந்த இந்த கோஸ்வாமியிடம் ஒப்படைக்கப்பட்டது. இருந்தபோதும் உண்மையான வைணவ ஆய்வுக் கட்டுரைகளில் இவரைப்பற்றிய எதுவும் குறிப்பிடப்படவில்லை வைணவர்களின் சமுதாயம் மற்றும் வரலாற்றினை சார்ந்த பிற்கால சில படைப்புகளில் கோபால பட்டரை பற்றிக் குறிப்பிடப்பட்டு இருந்தபோதிலும் அவை பெரும்பாலும் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன.

சைதன்யர், தென்னிந்தியாவில் மழை காலத்தில் நான்கு மாதங்கள். திருமலா என்ற ஒரு வைணவ சீடரின் இல்லத்தில் குறுகியகாலம் தங்கியிருந்தார் என்று கூறப்படுகிறது. கோபாலபட்டர் அந்த திருமலையின் புதல்வராவார். சில வைணவ ஆசிரியர்கள் கருதுவது யாதெனில் திருமலைபட்டர், வேங்கடபட்டர் மற்றும் பிரபோதானந்த சரஸ்வதி ஆகிய மூவரும் சகோதரர்கள் ஆவர். அவர்கள் வைணவ வழிபாட்டு முறையினை சார்ந்தவர்கள். மேலும் லெஷ்மிநாராயணனை வழிபடுபவர்கள் ஆவர்.

மேலும், கோபால பட்டர் மிகச்சிறந்த வைணவ ஸ்மிருதி சாஸ்திரமான 'ஹரி பக்தி விலாசம்' இயற்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நூல் இருபது பாகங்களைக் கொண்டது. வைணவர்கள் மேற்கொள்ள வேண்டிய சமுதாயச் சடங்குகள் மற்றும் கடமைசளை வெளிப்படுத்தும் நூலாகும். திருநூல்

கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட பக்தியானது, (வைதி பக்தி அல்லது சாஸ்திர மார்கீய பக்தி) இதில் விளக்கப்பட்டு உள்ளது. இப்படைப்பில் தந்திர சாத்திரம் பற்றிய சடங்குகள் வைணவர்களுக்கு மிகவும் பிரியமான குறிப்பாக தொடக்கச் செய்கையும் குறிப்பிடப்பட்டு உள்ளன இரச யாத்திரை பற்றிய விந்தையான அமைதியினையும் ஆதரவளித்துக் காப்பாற்றுகிறது. கோபாலபட்டர் சைதன்யரின் வழிபாடு அல்லது சைதன்ய உருவ நிலை நாட்டம் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை.

ரூபர் மற்றும் சனாதனரின் மறைவிற்குப் பிறகு கோபாலபட்டர் பிருந்தாவனத்து வைணவர்களது ஆசான்(குரு) ஆக ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். பிற்காலத்தில் சிறந்த வைணவத் தலைவராக விளங்கிய ஸ்ரீநாதாச்சாரியார் கோபால பட்டரின் சீடராவார். மேலும் அவர் வைணவத் தத்துவம் பற்றிய பாடங்களை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

சனாதன கோஸ்வாமின்

வைணவத் தத்துவத்திற்கு மிக முக்கியமான மூல ஆதாரமாக சனாதனர், ரூபர், ஜீவர் என்ற பெயர் கொண்ட பிருந்தாவனத்து இம்மூன்று கோஸ்வாமின்கள் இயற்றிய வடமொழி படைப்புகள் விளங்குகின்றன. அவர்களது படைப்புகள் பாதுகாக்கப் பட்டிருக்குமானால் சைதன்யரின் சமயக் கோட்பாட்டு முறையினை ஒரு புகழ் பெற்ற மதமாக (சமய அமைப்பாக) தாமாக மாற்ற இயலாது இருந்திருக்கும். இம்மூன்று கோஸ்வாமின்களும் தென்னிந்தியாவை சார்ந்த அந்தணர்கள் ஆவர் அவர்களுள் சனாதனர் மூத்த சகோதரராகவும் ரூபர் இரண்டாவதாகவும் மூன்றாவதாக வல்லபர் அல்லது அனுபமா திகழ்ந்தனர். ஜீவர் வல்லபரின் புதல்வர் ஆவார். சனாதன கோஸ்வாமியின் முன்னோர்கள் உண்மையில் கர்நாடகத்தினைச் சார்ந்தவர்கள். ஆனால் தங்களது குல மரபிற்குரிய (மூதாதையர் மரபு) வீட்டை விட்டு வங்க நாட்டில், அரசியல் மற்றும் குடும்ப இடர்பாடு காரணமாக வந்து தங்கினர் சனாதனரின் தந்தையார் குமாரதேவர் ஆவார். தாவிர்காஸ் என்பது ரூபரின் பட்டமாகவும் சாகர் மல்லிக் என்பது சனாதனரது பட்டமாகவும் இருந்தது அவர்கள் கௌட அரசன் ஹுசைன் ஷாவின் அமைச்சர்களாக இருந்தனர். ஹுசைன் ஷாவின் பெருஞ் செல்வத்திற்குக் காப்பாளராக

அனுபமா அல்லது வல்லபர் விளங்கினார். ஆனால் அவர்கள் முகம்மதிய மதத்தைத் தழுவவில்லை.

அவர்களது உறவு தொடர்ந்து முகம்மதியர்களுடன் இருந்த காரணத்தினால் அந்தணர் மற்றும் வைணவ வட்டாரங்களில் முற்றிலும் திறந்த மனப்பான்மையுடன் பழகத் தயக்கம் காட்டினர். எனவே ஒரு சாரார் அவர்களைப் பிராலி முகம்மதியர்கள் என அழைத்தனர். இது எவ்வாறேனும் நம்பத்தக்கதாக அமையவில்லை. உண்மையில் அவர்கள் ஒரு உண்மையான வைணவரின் குறிப்பிடத்தக்க இயற்பண்புகளுடன் எப்பொழுதும் பழிபாவத்திற்கு அஞ்சுகிறவர்களாகவும், பணிவு நயம் மிக்கவர்களாகவும் திகழ்ந்தனர். நியாய தத்துவத்தின் தலைசிறந்த அறிஞராகத் திகழ்ந்த வித்யாவாசஸ்பதி பாடசாலையில் சனாதனர் பயின்றார். பிருந்தாவனம் செல்லும் வழியில் கௌடாவில் சைதன்யருடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. ஆயின் வைணவ நம்பிக்கையில் தாராள மனப்பான்மை நோக்கி சைதன்யரை அவர்கள் சந்தித்தலிருந்தே அவர்கள் கவரப்பட்டார்கள். ஹுசைன் ஷா அரசருடன் அவரது கலிங்க (ஒரிசா) படையெடுப்பிற்கு உடன் செல்ல விருப்பமற்றவராக விளங்கியதால் அவர் சிறையிலடைக்கப் பட்டார். இருப்பினும் சனாதனர் சமாளித்து தப்பி பிருந்தாவனத்திற்கு விரைந்தார். அவ்விடத்திற்கு ரூபர் முன்கூட்டியே விரைந்து இருந்தார். அவர்கள் சைதன்யரால் தூண்டப்பட்டனர். வைணவ நம்பிக்கை மற்றும் கலாச்சாரத்தினுடைய வளர்ச்சிக்கு சனாதனரின் பங்கு பெரிதும் பாராட்டத்தக்கதாக அமைகிறது. கி.பி. பதினாறாவது நூற்றாண்டின் மத்தியில் சனாதனர் மறைந்தார்.

ஜீவ கோஸ்வாமின் அளித்துள்ள பட்டியல்படி சனாதனர் கீழ்க்கண்ட படைப்புகளை இயற்றினார்.

1. பிருஹத் பாகவதாம்ருதம்
2. ஹரி பக்தி விலாசம்
3. லீலாஸ்தவம் அல்லது தசம சரிதம் (கிடைக்கவில்லை)
4. வைணவடோஸானி

மேலே குறிப்பிடப்பட்டுள்ள படைப்புகளில் பிருஹத் பாகவதாம்ருதம் ஆனது கௌடிய வைணவ இயலின் தத்துவம் சார்ந்த கவிதை சார்ந்த படைப்பாகும். கோபால பட்டர் தொடர்புடன் ஹரிபக்தி விலாசம் விவாதிக்கப்பட்டு உள்ளது.

ஸ்ரீமத் பாகவதத்தின் (ஸ்கந்தா) பத்தாவது பகுதியின் விளக்கவுரையாக வைணவ டோஸானி விளங்குகிறது. இந்நூலானது ஜீவகோஸ்வாமியினால் சுருக்கப்பட்டு இலகு டோஸானி என்று கருதப்படுகிறது.

ரூப கோஸ்வாமின்

தவிர்காஸ் என்ற பெயரால் ரூபர் அழைக்கப்படுகிறார். அவர் ஹுசைன்ஷாவின் அரசவையில் மிக உயர்ந்த பதவியினை வகித்தார். சனாதனரைப் போலவே அவரும் நெடுங்காலத்திற்கு முன்பு சைதன்யரை சந்தித்தபோது வைணவ நம்பிக்கையானது தாராள மனப்பான்மை கொள்கை மற்றும் மனிதப் பண்பினால் கவரப்பட்டார். ஒரு சில சாக்கு போக்குகளால் ரூபர் ராம் கேலியினை விட்டுச் சென்றார். பின்னர் சைதன்யரைச் சந்தித்தார். அதன்பின் சைதன்யரும் அர்ப்பணிக்கப்பட்ட முழு ஈடுபாடுடைய சீடரை புகுமுகவினைகளாற்றி சேர்த்துக் கொண்டார். ஸ்ரீ சைதன்யரின் அறிவுரைப்படி ரூபர் பிருந்தாவனத்திற்குச் சென்றார். பின்னர் வைணவ நம்பிக்கை மற்றும் தத்துவம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை இயற்றினார். தனது மூத்த சகோதரர் ஸனாதனருக்கு முன்பாகவே ரூபர் இறந்துவிட்டார். அவரால் இயற்றப்பட்ட படைப்புகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது.

1. கவிதை	-	ஹம்ஸதூதம், உத்தவ சந்தேசம், ஸ்தவ மாலை
2. நாடகம்	-	விதாக்த மாதவம், லலிதாமாதவம், தன கேலிக முடி.
3. இரசத்தத்துவம் மற்றும் நல்லியல்புகள் வாய்ந்த கவிதை	-	பக்தி ரசாம்ருத சிந்து உஜ்வல நீலா மணி
4 கவிதை ஏட்டின் தொகுப்பு	-	பத்யாவலி
5. நாடக இயல் நூல்	-	நாடக சந்திரிகா
6 சமயம்	-	சம்ஷிப்த பாகவதாம்ருதம்

இப்படைப்புகளுள் விதாக்த மாதவம், லலிதா மாதவம் மற்றும் உஜ்வலநீலாமணி ஆகியவை பல காரணங்களுக்காக புகழ் வாய்ந்தனவாகும். ரூபர் தமக்குள்ளேயே ஒரு கவிஞரின் ஆற்றலையும் ஒரு நுட்பமான நம்பிக்கை ஆதாரமுள்ள திறனாய்வாளராகவும் இரண்டற ஒன்றுபட்டு உள்ளார். பதினாறாவது மற்றும் பதினேழாவது நூற்றாண்டினது வைணவ நம்பிக்கை தத்துவம் மற்றும் இலக்கியமாக அவரது பக்திரஸாம்ருத சிந்து மற்றும் உஜ்வல நீலாமணி ஆகியவை பெருமளவில் பேணத்தக்கதாக அமைந்தன.

ஜீவ கோஸ்வாமின்

பிருந்தாவன கோஸ்வாமியின்களின் மூன்று புகழ் பெற்ற கோஸ்வாமின்களில் ஜீவர் ஒரு தனிப்பட்ட நற்சான்றினைப் பெறும் தகுதியுடையவராகிறார். ஜீவர் முக்கியமாக தமது பகுப்பாராய்ச்சி முறை, வினைத்திறம் மற்றும் முரண்பாடில்லாத ஆன்மீக வலிமைக்காக பெயர் பெற்றுத் திகழ்கிறார். சனாதனர் அடிப்படையில் ஒரு உரையாசிரியராவார். ரூபர் ஒரு கவிஞர் மற்றும் கலை, பண்பாடு, சுவை முதலியவற்றின் திறனாய் நடுவர் ஆனால் அவர்களது மருமகனான ஜீவர் முக்கியமாக தத்துவஞானியாகத் திகழ்ந்தார்.

இந்த உலக வாழ்வினை சைதன்யர் விட்டுச் சென்றபொழுது ஜீவர் ஒரு சிறுவனாகத்தான் இருந்தார். மிகவும் இளமைப் பருவத்திலேயே அவர் இல்லற வாழ்வினைத் துறந்தார். பின்னர் நவத்வீபத்தினை அடைந்தார். நித்யானந்தரின் தூண்டுதலின்பேரில் அவர் வாரணாசி சென்று மதுசூதன வாசஸ்பதியின் மேற்பார்வையில் வியாகரணம், ஸ்மிருதி மற்றும் வேதாந்தத்தினைப் பயின்றார். அவர் தமக்குள்ளேயே நுட்பமான உள் எழுச்சி கொண்ட தத்துவ ஞானியாகவும் ஒருங்கிணைப்பு சக்தி கொண்ட ஒரு சமயத் தலைவராகவும் விளங்கினார். அவர் கீழ்க்கண்ட படைப்புகளை இயற்றியுள்ளார்.

1. கவிதை : கோபால சம்பூ, சங்கல்ப கல்ப துருமம், மாதவமகோத்ஸவம், கோபால விருந்தாவளி.

2. இலக்கணம் மற்றும்
இரசசாஸ்திரம் : ஹரி நாமாம்ருத வியாகரணம்,
சூத்திர மாலிகா, ரஸாம்ருத சேசம்.
லோசனாலோசனி

3. வைணவ ஸ்மிருதி மற்றும் சமயத்தின் கருத்தியல் திட்டம்

கிருஷ்ணாச்சாரிய தீபிகா
கோபால தபனி,
பிரம்ம சம்ஸ்துதா
கிரம சந்தர்ப்பம்
லகுடோசானி

4. வைணவ தத்துவம் : பாகவத சந்தர்ப்பம் அல்லது சத்
சந்தர்ப்பம், ஸர்வ ஸம்பதினி

இப்பட்டியல் தாமாகவே ஜீவ கோஸ்வாமினின் பல்வகைப் பட்ட திறமையினை வெளிப்படுத்துகிறது. ரூபகோஸ்வாமின் பக்தி மற்றும் உணர்வு (ரஸம்) பற்றி திறமையாக பகுப்பாய்வு செய்தது போலவே ஜீவ கோஸ்வாமினும் தமது தனித்தன்மை வாய்ந்த மனத்தின் அறிவுத்திறம், முற்றிலும் உணர்ச்சி வயப்பட்ட மதத்தினை ஓர் இறைமை வாதபண்டிதர்க்குரிய முயற்சியாக வலிந்து பெறப்பட்ட திறமை நோக்கில் கௌடிய வைணவ இயலின் ஊடுருவலான கற்றாய்வினை மேற்கொண்டார். ஜீவ கோஸ்வாமின் போன்றவர்களின் பெருந்திறமையினது முயற்சி பாதுகாக்கப்பட்டு இருக்குமேயானால் கௌடிய வைணவ இயம் ஓர் உலக முழுதளாவிய சமயமாக மாறியிருந்துயிருக்க முடியாது.

சைதன்ய போதனைகள்

சைதன்யர் ஒருவரி கூட எழுதவில்லை. சில நேரங்களில் தமது நண்பர்கட்கு விளக்கப் பேருரைகளை வழங்கியுள்ளார். மேலும், அவர் வாழ்ந்த சமகாலத்தில் பிரசித்தி பெற்ற அறிஞர்களுடன் நிகழ்ந்த நன்கு உணர்ந்த விவாதங்கள் அவரது போதனைகட்கான சிறந்த அடிப்படையினை ஏற்படுத்திக் கொடுத்தது. அவரது வாழ்க்கையே அவரது செய்தியாக அமைந்து இருந்தது

சைதன்யர் ஒருமுறை ஸ்வரூப தாமோதரர் மற்றும் ரே ராமானந்தரிடம் கூறியது யாதெனில் நாமாவளிகளைப் பாராயணம் செய்வதனால் மனிதன் செய்யக்கூடிய அனைத்து தீங்குகளும் மனதிலிருந்து களையப்படுகின்றன. அது அனைத்து நல்லவற்றையும் உறுதி செய்கிறது. மேலும் மனதில் கிருஷ்ணரின் மீதான அன்பினை எழுச்சியுறச் செய்கிறது. ஒரு பெருந்தீ தோன்றும் பொழுது அஃது அருகிலுள்ள ஒவ்வொருவரையும் வருத்துகிறது. இவ்வுலகில் நமது வாழ்வும் குறிப்பாக குடும்ப வாழ்வு மற்றும் உறவுடன் கூடி வாழும் மனித சமுதாயத்தில் அச்சம் தரத்தக்க சீற்றமும் (வெப்பமும்) வெளிப்படுகிறது. இவ்வாறாக அது நம்மையும் வாட்டி வதைத்து சுட்டு பொசுக்குகிறது. கிருஷ்ண சங்கீர்த்தனமானது அவ்வெப்பத்தினை மெல்ல அமைதிப்படுத்துகிறது. மேலும் எரியும் உணர்வினை நீக்கி விடுகிறது. குமுதமலர்கள் நிலாவொளியில்தான் மலர்ச்சியுறுகின்றன. இல்லாவிடில் மலர்வதில்லை. கிருஷ்ண சங்கீர்த்தனமும் அந்நிலவொளியினை ஒத்ததாகும். அது மிக நுட்பமான அனைத்து நேர்த்தியான அழகு வாய்ந்த மலர்களை நமது மனங்களில் மலரச் செய்ய உதவுகிறது. இது உண்மையான அறிவின் ஆன்மாவாகும். இது மனதின் கழி மகிழ்வுடைய நிலையினை மேம்படுத்துகிறது. கிருஷ்ண சங்கீர்த்தனத்தின் ஒவ்வொரு அடிப்படை அறிவுக்கூறும் வாழ்வின் அமிழ்தத்தினை சுவைத்து பாராட்ட உதவுகிறது. அஃது ஆன்மாவினை மறதிக்கு உட்படுத்தாமல் நினைவில் வைத்துப் பேணுகிறது. இவ்வாறாக இது வேறு எந்த வழி வகைகள் மற்றும் நெறிமுறைகளை விட புகழ் பெற்றதாக விளங்குகிறது.

ஹரியின் நாமாவளியினை உச்சரிப்பதற்கு எவ்வித கடினமான இறுக்கமான நியதியும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நாமாவளிகளை பண்ணிசைத்துப் பாடுவதற்கும் செப்புவதற்கும் எந்த நேரமும், எக்கணமும், எவ்விடமும் மிகவும் உகந்ததாகும். இப்புண்ணிய நாமாவளிகளை இன்னிசைத்துப் பண்ணிசைத்துப் பாடுவதால் விளையும் அனைத்து விளைவுகளையும் ஒருவர் முயன்று அடைய விரும்பினால் அவர் மிகப் பணிவானவராகத் திகழ வேண்டும். தமது வாழ்வில் ஏற்படும் அனைத்து இன்னல் களையும் ஒரு மரம்போல தாங்க வேண்டும் அவர் தமது தனிப்பட்ட அங்கீகாரத்திற்காக ஏங்கக் கூடாது. ஆனால் அதற்குப்பதிலாக எந்நேரமும் அவர் அனைவரையும் உயர்வாக மதித்துப் போற்ற வேண்டும். மேலும் அவர் எந்நேரமும் கிருஷ்ணரின் நாமாவளியினைப் பண்ணிசைத்துப் பாடியும் செப்பிய வண்ணமாகவும் திகழ வேண்டும். வாழ்வில் ஒருவனது மதிப்பு உள்ளியல்பான மற்றும் வெற்றியினுடைய அளவு கோலானது ஒருவன் எவ்வளவு செல்வம் அடிப்படையிலேயே பெற்றிருக்கிறான் என்பதாகும். ஆனால் இது ஆதாரமற்றது. சைதன்யர் நமக்குக் கற்பித்தது யாதெனில் ஒருவன் கிருஷ்ணரிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறான் என்பதாகும். கிருஷ்ணரிடம் பக்தியுடன் இருப்பதற்கு எவ்வளவு தன்னலமற்ற அன்பினை ஒருவன் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் அளவுகோலாக இருக்கிறது. அதன் மூலம் ஒருவனது உண்மையான மதிப்பு இவ்வுலகியல் வாழ்வில் சீர்தூக்கி மதிப்பிடப்படவேண்டும். உண்மையில் எவன் ஒருவன் கிருஷ்ணர் மீது இந்த பக்தி, இந்த அன்பு முதலியவற்றைக் கொள்ளவில்லையோ அவன் ஏழையாவான். அவன் ஏழ்மையிலான வாழ்வினை நடத்தி வருகிறான். ஒருவன் கிருஷ்ணரிடம் இவ்வன்பினை நல்க வேண்டி பிரார்த்திக்க வேண்டும். முக்கிய இத்தன்னலமற்ற பக்திக்காக அவரது நாமங்களைச் செப்பவும், இசைப்பண்ணோடு பாடவும் விருப்பப்பட வேண்டும். இதனை அடையாவிடில் நமது வாழ்வு பயனற்றதாகும்.

அவரது கிருஷ்ணப்பிரிவு உணர்ச்சியின் உச்சத்தில் ஸ்ரீராதாவினது ஊழியர்களும் தோழிகளும் கொடூரமான, இதயமற்ற கிருஷ்ணரை மறந்து விடுமாறு அவருக்கு அறிவுரை கூறுவதாகக் கூட அவர் உணர்ந்தது உண்டு கிருஷ்ணருக்கு

இராதா பற்றிய எவ்வித எண்ணமும் கிடையாது. அவர்கள் சைதன்யரிடம் கிருஷ்ணரை முழுவதும் மறந்து விடுமாறு பணித்தனர். அவர்கட்கு பதில் கூறும் முகத்தான் சைதன்யர் அறிவித்தது யாதெனில் எவ்வித எதிரான சூழ்நிலைகள் வந்தால்கூட கிருஷ்ணர் ஒருவர்தான் புகலிடம் எனக் கூறினார். சைதன்யர் அன்பின் ஆழமான உணர்வுகளை இவ்வுலகிற்கு பலர் அறியச் செய்தார். அதனையே ஸ்ரீராதா தமதன்புக் கிருஷ்ணரிடம் கொண்டு இருந்தார். தமது சொந்த வாழ்வு மூலமாக கிருஷ்ணரின் உச்ச ஒருமித்த பேரின்பத்தைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்பதனைக் கற்பித்து உள்ளார்.

விரஜரசத்துடைய உணர்வுகளை முழுவதும் உணர்ந்து பாராட்டி சைதன்யர் முற்றிலும் மூழ்கியிருந்தபோதிலும், அவர் ஒரு கணம் கூடத் தமது தாயார் சசி தேவியினையும், பிறந்த இடமான நாடியாவினையும் மறக்கவில்லை. ஒவ்வொரு ஆண்டும் ஜெகதாநந்தர் மூலமாக தமது தாயாருக்கு நேர்த்தியான உடைகளை அனுப்புவது வழக்கம். ஜெகன்னாத இறைவனது மஹாபிரசாதமும் கோயிலிலிருந்து குறிப்பாக பெறப்பட்டு அவரது மகனால் அவருக்கு (தாயாருக்கு) அனுப்பப்பட்டது. மேலும் நவத்வீபத்திலுள்ள ஏனைய சீடர்களுக்கும்கூட மஹாபிரசாதம் அனுப்பப்பட்டது. ஆனால் அவரது தாயாருக்காக சிறப்பான பாசமிக்க அக்கறையோடு மற்றும் அன்பின் ஆழ்ந்த கொடு உணர்வுடன் மகனால் அனுப்பப்பட்டது. ஜெகதாநந்தர் ஆண்டிற்கொருமுறை நவத்வீபத்திற்கு சென்ற பொழுதெல்லாம் சசிதேவியிடம் சைதன்யரின் கட்டளைக் கேற்ப அவரிடம் (தாயாரிடம்) கூற வேண்டிய அனைத்தையும் கூறினார். எப்பொழுது எல்லாம் பூரியிலிருந்து ஜெகதாநந்தர் நவத்வீபத்திற்குத் திரும்பி வந்தாரோ, அப்பொழுது எல்லாம் தமது நேரம் முழுவதையும் சசி தேவியருகேயமர்ந்து சைதன்யரின் அனைத்து விளையாட்டு லீலைகளையும் கூறிய வண்ணம் கழித்தார். சசி, சிறிது நேரத்திற்கு அவரது அருமைக்குரிய நிமாயின் பிரிவுத்துயரினை மறந்தார். உலகம் முழுவதற்கும் நிமாயின் தனிப்பட்ட வெளிப்பாடாக அமைந்தது யாதெனில் அன்னை அனைத்தையும் விட மேலானவர் இதன்மூலம் அவர் நமக்கு வாத்ஸல்ய ரசம் என்பதனைக் கற்பித்துள்ளார் மேலும் தமது தாய்க்கு மகன் செய்யும் கடமை என்ன என்பதனையும் கூறியுள்ளார்.

சைதன்யரின் தத்துவம்

சங்கரர், ராமானுஜர், காண்ட், ஹெகல் போன்றவர்கள் போல் எண்ணப் போக்கில் ஒரு தத்துவ ஞானியாக சைதன்யர் விளங்கவில்லை. தத்துவஞானிகள் இயல்கடந்த உளநிலை ஆய்வு அண்டப்படைப்பு கோட்பாடு, ஒழுக்கவியல், உளநூல் போன்றவற்றில் சார்பு உள்ளவர்களாக இருப்பார்கள், என்று பெரும்பாலும் கூறுகிறோம் அவர்களது விவாதங்களானது எளிதில் நிலைநாட்டக்கூடியதாகவும், முறைப்படுத்தப் பட்டதாகவும், சில நேரங்களில் சர்ச்சைக்குரியதாகவும் கூட அமைகின்றன

எவ்வாறேனும் சைதன்யர் அந்த வகையினைச் சார்ந்தவர் அல்லர். தத்துவத்தினைப் பற்றி கூற என்ன உள்ளது, அவர் எப்பொருளை பற்றியும் ஒருவரி கூட எழுதவில்லை. தமது வழித்தோன்றல்களுக்காக எவ்வித படைப்புகளையும் விட்டுச் செல்லவில்லை. எனினும் அவர் உயர்ந்த நிலையினையுடைய தத்துவஞானியாகக் கருதப்படுகிறார். அவர் செப்பிய ஒவ்வொரு வார்த்தையும் உயர்ந்த தத்துவ அர்த்தங்களைக் கொண்ட கருத்து வளமிக்கதாய் திகழ்ந்தது. ஏனையோருக்கு அவர் அளித்த நெறிமுறை கட்டளைகளானது புலமையில் அறிவாழமிக்க இயல் கடந்த உளநிலை ஆராய்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு திகழ்ந்தன. அவை ஒத்திசைவானதாகவும், எளிதில் நிலை நாட்டக்கூடியதாகவும் நிலை பேறுள்ளதாகவும் திகழ்ந்தன. சைதன்யரின் வாழ்க்கையின் அடிப்படையிலான தத்துவம் மற்றும் போதனைகள் அவரது மிகவும் புலமை நிரம்பிய இலக்கிய மேதைக்கு இயல்பான ஆறு திருத்தூதர்கள் எனப் பொதுவாக அழைக்கப்படுகிற அவரது மிகச்சிறந்த ஆறு சீடர்களால் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

நமது பழமையான மெய்யுணர்வாளர்களின் உள் உணர்வால் அறியப்பட்ட உணர்தலை உபநிடதங்கள் அங்கமாகக் கொள்ளுதலை இந்தியச் சிந்தனையாளர்கள் அடிப்படை தத்துவமாகக் கொண்டு உள்ளனர். எல்லையற்ற தொடர்ச்சியான பல்வேறு பாட்டுத் தொகுதிகளாலான உபநிடத எண்ணங்களானது

வாதாராயனார் என்ற ஒருவரால் ஐநூறு நூற்பாக்களாக முறைப்படுத்தப்பட்டு உள்ளது. அவர் மதிக்கவொண்ணா பெருமையுடைய செயற்றிறனையும் நுழைபுலத்தினையும் பெற்றிருந்தார். இதன் தொகுப்பானது பிரம்ம சூத்திரங்கள் என்று அழைக்கப்படுவது. இந்நூற்பாக்களுக்கு விரிவான விளக்கமான ஆய்வுக் கட்டுரைகளை சங்கரர், ராமானுஜர், நிம்பார்க்கர், மத்வர், வல்லபர் போன்ற இந்திய சிந்தனையாளர்கள் அனைவரும் எழுதியுள்ளனர். தங்களது தனிச்சிறப்பால் அறியப்பட்ட மற்றும் சூழ்நிலைகளால் உணரப்பட்ட தனிப்பட்ட அனுபவங்களினால் வெவ்வேறு மதிப்புரைஞர்கள் இயல்பு மாறிய கருத்து விளக்கங்கள் அளித்தனர். இவ்வாறாக பிரம்மசூத்திரங்களின் ஒரே உண்மையினது ஐந்து மாறுபட்ட வகை முறைகளை அல்லது பள்ளிகளைக் கொண்ட வாழ்க்கை வழியானது தோன்றியது.

அவ்வைந்து முறைகள் கீழ்கண்டவாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன. அவையாவன:-

1. அத்வைத வாதம் - சங்கரரின் முழுமையான ஒரு பொருண்மை கோட்பாடு.

2. விசிஷ்டாத்வைதம் - இராமானுஜர்

3. பேத அபேத வாதம் - நிம்பார்க்கரின் சமய குருவின் முன்னறிவிப்புக் கட்டளையான இரு பொருள் வாதம்.

4. துவைத வாதம் - மத்வைதரின் இருபொருள் வாதம்.

5. சுத்த அத்வைத வாதம் - வல்லபரின் புனிதமான ஒரு பொருண்மை வாதம்.

சைதன்யர் தமது அசிந்த்ய பேத அபேத வாதத்தில் - வேற்றுமையில் ஒற்றுமை - தனித்தன்மையினால் தனித்து ஒளிர்கிறார். சைதன்யர் நமது இம்மைக்குரிய வாழ்விலிருந்து மறைந்த பிறகு ஸ்ரீஜீவ கோஸ்மின், பலதேவ வித்யாபூஷணரால் வாத பொருத்தமுடைய உட்பொருள் வெளிப்படுத்தப்பட்டு நிலைநாட்டப்பட்டுள்ளது. இப்பகுப்பாய்வானது, அசிந்த்ய பேத அபேத வாதம் உச்ச உண்மையினை நோக்கிச் செல்லும் இரு முக்கியமான பணிவடக்கமுள்ள அணுகுதல்களை தெளிவாக

வெளிக் கொணர்கின்றன. உண்மையான அறிவு மூலம் (ஞான மார்க்கம்) - மற்றது தூய அன்பின் மூலம் - பக்தி மார்க்கம் - ஆகும். ஞான மார்க்கமானது குறைபாடு அற்ற மெய்ம்மையினை அவரது தனித்தன்மையுடன் உணர்வதனை முயற்சி செய்யும் குறிக்கோள்களில் ஈடுபடுகிறது அதே நேரத்தில் பக்தி மார்க்கமானது உச்ச உண்மையானது; அர்ப்பணம் செய்யும் பணிக்கு வழிகாட்டுகிறது. ஞானமார்க்க சீடர்கள் விவேக முள்ளவர்களாக கருதப்படுகிறார்கள். விவேகமுள்ளவர்களுள் சங்கரர் முதன்மையானவராகத் திகழ்கிறார். இராமானுஜர், நிம்பார்க்கர், மத்வர், வல்லபர் ஆகியோர் சீடர்களாகத் (பக்தர்களாக) கருதப்படுகிறார்கள். சீடர்களின் அதிகார எல்லையில் அரசராக, சைதன்யர் கருதப்படுகிறார். உண்மையைக் கூற வேண்டுமேயானால் அவர் புனித மற்றும் அர்ப்பணம் செய்யப்பட்ட சீடரின் வேடத்தில் தாமே கடவுளாக விளங்குகிறார்.

இறையன்பின் கருத்தியல் திட்டம்

(பிரேம தத்துவம்)

சைதன்யரின் பங்குகளில் (பிரேமதத்துவம்) இறையன்பின் கருத்தியல் திட்டமானது. ஒரு மாண்புமிக்க பங்காகக் கொள்ளப் படுகிறது. அவர் தமது மனத்தின் ஆழத்தினை சனாதன கோஸ்வாமினிடம் தெளிவு செய்தார். "அன்பானது (பிரேமை) இவ்வுலகில் அனுபவபூர்வமான மிக உயர்ந்த மதிப்பாகத் திகழ்கிறது." உண்மை மற்றும் மதிப்பின் படிப்படியான ஒழுங்கு முறையே சிதைவுபடாத வாழ்க்கை வழியாகத் திகழ்கிறது. மதிப்பில் உண்மையானது நிறைந்து இருக்கும். முழு நிறை நலத்தினது மதிப்புகள் மூன்று உள்ளன. சத்தியம் - உண்மை, சிவம் - நன்மை, சுந்தரம் - அழகு உணர்வுநிலையுடைய முன்னுள்ள நிலையில் இம்மூன்று முழு நிறை நல மதிப்புகள் மிகுவாக எக்காலத்திற்கும் பண்பு உருவப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன. அந்த உணர்வு நிலையுடைய முன்னுள்ள நிலையே முழுவதும் பேரின்ப நிலையாகத் திகழ்கிறது. செறிவுறப்பட்ட பேரின்பமே ஆனந்தமாகத் திகழ்கிறது. மேலும் பிரேமை அன்பும் ஆனந்தமும் ஒன்றே. மேலும் ஆனந்தம் பிரேமையினையொத்ததாகத் திகழ்கிறது.

மனத்தின் விழிப்பு நிலையானது பலவாறாக கருத்தில் உருவாக்கப்படுகிறது. அவை கோசம் அல்லது உறைகள் என அழைக்கப்படுகின்றன. அதன் வெளிப்புறமயமான உறையானது நிறை முழுமையான கருத்து மூலம் ஆகும். அண்மையில் அதன் அடுத்த உட்புறமான உறையானது நினைவு நிலையாக உள்ளது. இந்நிலையானது பிராணமயகோசம் மற்றும் மனோமய கோசம் என இரு நிலைகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன அதாவது வாழ்வு மற்றும் மனம் மூன்றாவது நிலை அறிவுத்திறமாகும்-விஞ்ஞானமயகோசம். மேலும் மிகவும் ஆழ்ந்துள்ள உறையானது அல்லது கடினமான உட்பிரிவானதே ஆனந்தமய கோசமாகும். அதாவது அன்பானது செறிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆனந்தமும் பிரேமையும் முழுதொத்தவையாகக் கொள்ளப்படுகின்றன. அன்பினை உணர்தலும் இறைவனை உணர்தலும் ஒன்றேயாகும்.

சைதன்யரின் கூற்றுப்படி இறுதியான அடிப்படையாக மனத்தின் விழிப்பு நிலை திகழ்கிறது. (சைதன்யம்) அத்வைத வேதாந்தத்தின் கூற்றுப்படி உணர்வு நிலைக்கு எவ்வித சக்தியும் கிடையாது. ஆனால் சைதன்யர் கருதுவது யாதெனில் மனத்தின் விழிப்பு நிலைக்கு சக்தி இருக்கத்தான் செய்கிறது. (இச்சா சக்தியானது) மனத்திண்மை மனத்தின் விழிப்பு நிலையின் சக்தியாக விளங்குகிறது கிரியை, ஞானம் மற்றும் ஆனந்தம் - செய்யும் மனத்திண்மை, அறியும் மனத்திண்மை மற்றும் அனுபவிக்கும் மனத்திண்மை ஆகிய மூன்று வகைகளாக மனத்திண்மையானது அறிந்து கொள்ளப்படுகிறது. இம்மூன்று வளர்ச்சிப்படிகள் வாழ்க்கையானது செய்கையில் அறிவில் மற்றும் ஆனந்தத்தின் சொல் திறனில் காணப்படுகின்றன. இம்மூன்று பிரிவுகளும் பிரிக்க முடியாதவையாகும். அறிதல் என்பதே வாழ்வதற்கும் ஆனந்தத்தினை உணர்வதற்குமாகும். வாழ்தல் என்பதே அறிவதற்கும் மகிழ்வாக இருப்பதற்குமாகும். மகிழ்தல் என்பது அறிவைப் பெற்றிருந்தாலும் உள்ளத்தால் தன்மையினை உணர்தலுமாகும். மனத்திண்மையானது ஒற்றுமையினை உருவாக்குகிறது என இது புலப்படுத்துகிறது இது செய்வதோ அறிவதோ அனுபவிப்பதோ அல்ல. ஆனால் அனைத்தையும் உடன் நிகழ்வதாக்குவதாகும். இவ்வாறாக மனத்திண்மையின் ஒற்றுமையானது மனத்தின் விழிப்பு உணர்வு நிலையின் போதுமான சக்தியாக திகழ்கிறது அதனையே சைதன்யர் அன்பு எனக் கருதுகிறார். அது மிக ஆழ்ந்த சக்தியாகவும் (அந்தரங்கசக்தி) கருதப்படுகிறது

ஸ்வரூபசக்தி என்ற வார்த்தைக்கு இரு அர்த்தங்கள் உண்டு. முதலாவது கிருஷ்ணரின் ஸ்வரூபமானது அவரது சக்தியுடன் முழுவதும் ஒத்திருத்தலாகும். இரண்டாவது சக்தியானது கிருஷ்ணரின் ஸ்வரூபத்தில் இருந்து வெளிப்பட்டதாகும். முதலில் கூறப்பட்டு உள்ள உட் கருத்தின்படி கிருஷ்ணர் மற்றும் இராதை ஆகிய இருவரும் ஒருவரே. இரண்டு நோக்குகளும் ஒருபோதும் பிரிக்க முடியாதனவாகும். உதாரணமாக நெருப்பும் அதன் எரிப்பு சக்தி திறனுமாகும் இரண்டாவது கூற்றின்படி இராதா என்பவர் கிருஷ்ணரிடமிருந்து முறையாக வெளிவந்த மற்றுமொரு தனி மனிதர் நிலையாகும். இக்கருத்தின்படி இராதா மற்றும் கிருஷ்ணர் ஆகிய இருவரும் தனிப்பட்ட மனிதர்கள் பின்னர் அவர்கள் ஒரு விளக்கின் இரு திரிகளாகத் திகழ்கின்றனர் அவர்கள் தங்களுக்குள்ளாகவே ஒளிரச் செய்து ஒவ்வொருவரின் வாழ்வினையும் பொருள் செறிந்ததாக உருவாக்குகின்றனர்

இரசத்தின் கருத்தியல் திட்டம்

(இரசத் தத்துவம்)

சைதன்யரின் இறைநிலை நோக்கினது தன்னேரில்லாத மற்றும் குறிப்பிடத்தக்க தெளிவான முனைப்புக்கூறு இரசத்தத்துவத்தில் அடங்கியுள்ளது. வைணவ இலக்கியத்தில் இரசத்தின் பயனானது மிகவும் முக்கியமாக ஒரு தனித் துறைக்குரிய துறைச் சொல்லாக மற்றும் தனித்தன்மைப்பட்ட சொல்லாகத் திகழ்கிறது. கவரும் பண்பு கொண்ட நறுமணச்சுவை என்பதே இரசத்தின் பொருள். ஏதேனும் ஒரு பொருள் இன்பம் தருவதாகவோ, அல்லது அனுபவிக்கத்தக்கதாகவோ திகழுமேயானால் அப்பொருள் இரசத்தினைக் கொண்டு இருக்கிறது எனலாம். ஒரு பொருளின் இன்பம் தருகிற மதிப்பு இரசம் எனக் கொள்ளப்படுகிறது. அனைத்து இரசங்களும் இறைவனின் இரசமாகக் கருதப்படுகின்றன. ஒரு பொருளில் உள்ள அப்பொருளை மகிழ்ச்சியாக்குகிற பொருளாக இறைவன் உருவாக்குகிறார்.

வாழ்வு என்பது மகிழ்வினை உணர்த்துகிறது. மகிழ்வு என்பது வாழ்வினை உணர்த்துகிறது. இந்து தத்துவமானது மிகப் பொருத்தமாக இந்த ஒரே சொல்லாம் இரசத்தினை மோதி வீழ்த்தியுள்ளது அது ஒரே பொருளின் இரு பகுதிகளையும் சுட்டிக் காட்டுகிறது. இரசம் என்பது ஒவ்வொரு உயிர் வாழும் மற்றும் வளரும் பொருளின் உயிர் துடிப்புடைய சாறாகத் திகழ்கிறது. வாழ்வு மற்றும் ஆன்மாவின் விரிவாக்கமாக ஆனந்தத்தின் பண்புக்கூறாக இது திகழ்கிறது.

சைதன்யர் கடவுளைப் பிரேமமயரசராஜா என்று கூறுகிறார். அதாவது இரசத்தின் அரசன் மற்றும் அன்பின் பண்புருவ இறைமையாகக் கருதுகிறார். ஒரே சாறின் இரு பண்புக் கூறுகளாக அன்பினையும் ஆனந்தத்தினையும் கொள்ளலாம் அதுவே இரசமாகும். மனத்தின் விழிப்பு நிலையினது நுண்பொருட் கூறாக இரசம் கருதப்படுகிறது மேலும் இறைவனே இரசகானமாவார். அதாவது ஒருமுகப்படுத்தப்பட்ட இரசமே

இறைவன். அன்பினைத் துய்த்து மகிழும் பொழுது அதன் உண்மையான நோக்கில் ஒரு தோழன் இன்றியமையாத நிலையினைப் பெறுகிறான் தாமே முழுமையான நோக்கினை அடைவதற்கு இறைவன் தமது தோழர்களை உருவாக்குகிறான். வேற்றுமையில் ஒற்றுமையினை ஆரம்ப நிலையிலேயே வெளிப்படுத்த இறைவன் கூட்டாளிகளை உருவாக்குகிறான். இதுவே சைதன்யரின் கோட்பாட்டினது சாறு ஆகும்

இருவரிடையேயும் அன்பின் இரண்டுருவான உணர்தலில் ஒரு வெளிப்படையான வேறுபாடு வினவப்பட்டபோதிலும் இராதையும் கிருஷ்ணரும் உண்மையில் ஒருவரையொருவர் முழுதும் ஒத்திருந்தார்கள். தான் எனும் தன்மையினை உளதாக்குதல் (கிருஷ்ணர்) என்பது மிக உச்ச ஆனந்தத்தினுடைய மயக்கும் ஆற்றல் கொண்ட கருத்து உருவம் ஆகும். வெளிப்பாட்டுத் தன்மையினை எய்தப்பெறுதல் (இராதை) என்பது அவ்வன்பான வாழ்வினது சந்தத்தினது பரம்பொருள் மற்றும் அகச்சார்பான சாறு ஆகும்.

அன்பின் இனிமையானது நட்பு, தாய்-சேய் உறவு மூலமாக சேவகன்-தலைவன் உறவிலிருந்து வளர்கிறது. இறுதியில் அன்பான உறவாக மனைவியில் முடிவடைகிறது. வெளிப்பாட்டுத் தன்மையினை எய்தப்பெறும் இராதா இவ்வாறாக தான் எனும் தன்மையினை உளதாக்கும் (கிருஷ்ணரை) மெல்ல மெல்ல நெருங்குகிறது. மேலும் இறுதியில் மீண்டும் இரண்டும் ஒன்றாக இணைகின்றன இவ்வொன்றாக்கம் நிகழும்பொழுது இறைமையானது மிகவும் செழிப்பானதாகவும் மிகவும் இனிமையானதாகவும் திகழ்கிறது. வெளிப்பாட்டுத்தன்மையினை எய்துதல் மற்றும் தான் எனும் தன்மையினை உளதாக்குதல் ஆகியவற்றினுடைய தெய்வ நிலைக்குரிய கூட்டு இணைவு அதாவது இர்ாதையும் கிருஷ்ணரும் ஆகிய இருவர் - அவரே சைதன்யர் - இராதை, கிருஷ்ணரின் மாறுபாடான கொள்கையாகவும், கிருஷ்ணர் அவர்களது இறுதியான கூட்டிணைவில் சைதன்யரில் நிறுவப்பட்டார் இதுவே அகநிலையான அன்பின் வாத முறை ஆராய்ச்சியாகும்.

எனவே சைதன்யரின் தத்துவமானது அவரது தனி மனிதர் சிறப்பியல்பிலேயே தனிப்பட்ட தன்மையில் உச்ச நிலை அடைதலைக் காண முடிகிறது. ஓர் உவமையற்ற தனி மனிதர் சிறப்பியல்பினையொத்த சாறுடன் கூடிய அவரது சொந்தத் தத்துவத்தினை வேறு எங்கும் காண இயலாது. இது சற்றே, ஓர் எதிர்பாராத இயல் நிகழ்ச்சியாக இருந்தபோதிலும் இது வரலாற்றினது உண்மையான தலையாய கொள்கையாகவும் அறிவு ஆதார அனுபவமாகவும் திகழ்கிறது.

எட்டடி போதனைகள் (சிக்ஷாஷ்டகம்)
(போதிக்கப்பட்ட கோட்பாட்டின் எட்டடி பாடல்கள்)

சைதன்யர் மனித இனம் முழுமைக்கும் பெரும்பாலும் போதிப்பது யாதெனில் கலப்பற்ற பக்தியின் (பக்தி யோகத்தின்) வழிபாட்டு மரபில் வழிவகைகள் (சாதனா) மற்றும் நிறைவு (சாத்யம்) ஆகிய இரண்டும் முழுதொத்தவையாகும். மேலும், அந்நிறைவானது மிகச் சிறந்த மற்றும் உச்ச வழிவகைகள் அல்லது மனித வாழ்க்கை நெறியின் உச்ச உயர் குறிக்கோள் நலமானது, புனித நாமாவளியினைப் பண்ணிசைத்தலேயாகும். (நாம சங்கீர்த்தனம்) இந்த இரும்பு யுகமான கலிகாலத்தில் உச்ச இறைவனாம் கிருஷ்ணர் புனிதநாமமாக இறங்கி வந்து அருள்கிறார். அப்புனித நாமாவளியானது இவ்வுலகு முழுவதையும் மீட்பதற்காக மேதகவுரிமையுடன் உரித்தாக்குகிறது. அனைத்து திருநூல் சார்ந்த புலமையினது தொகையாக்கம் மற்றும் சாரம் பகர்வது யாதெனில் புனித நாமாவளியானது அனைத்துப் புனித மந்திரவாசகங்களின் சத்துச்சாறாகத் திகழ்கிறது. தன்னை மறந்த வெளியுணர்வில் மாற்றம் செய்யப்பட்ட பெருமகிழ்ச்சி கொள்கின்ற ஆனந்தப்பரவசம் மற்றும் முழுதான பேரின்பத்தில் சிலிர்த்து சைதன்யர் கூறினார். "ஏ தாமோதர ஸ்வரூபரே! மற்றும் ரே ராமானந்தரே! கேட்பீர்களாக, இக்கலிகாலமாகிய இரும்பு யுகத்தில் அனைத்து உலகத் தீங்குகளிலிருந்து விடுபட உச்ச மற்றும் மிகவும் நம்பவைக்கும் ஆற்றலுடைய சஞ்சீவியாகிய கிருஷ்ணரின் புனித நாமாவளியினை இசைப்பண்ணமைப்பதே தீர்வாகும்."

சைதன்யரது மறைவிற்குச் சிறிது நேரத்திற்கு முன்பு ரே ராமானந்தரை வரவிருக்கும் அனைத்துக் காலத்திற்கும் பக்தி மூல மெய்ப்பொருள் ஆராய்ச்சியினை நினைவில் வைத்திருக்குமாறு சைதன்யர் கேட்டுக்கொண்டதாக ஊகிக்கப் படுகிறது. அதனை தற்காலத்தில் சிக்ஷாஷ்டகம் என்று கருதப் படுகிற தமது எட்டு செய்யுட்களில் கொள்கை கோட்பாட்டினைச் செயலுருவப் படுத்தியுள்ளார். தமது சீடர்களுக்குத் திடமான வழித்துணைக்காக அவர்களது ஆன்மயியல் மேம்பாட்டிற்காக அவர் விளக்கப் பேருரைகளை நிகழ்த்தினார் இவ்வெட்டு செய்யுள்களும் அவரது தனிச்சார்பான இசைப்பாட்டுக்கள் ஆகும் (எவ்வாறேனும் ஒரு

சிலரின் கூற்றுப்படி எட்டு பாடல்களுள் ஐந்து பாடல்கள் மட்டும் அவரால் இயற்றப்பட்டன. அவரது ஆன்மீக மனநிலை சார்பிற்கான சத்துச்சாற்றிற்குக் கொள்கை கோட்பாடுகளை செயலுருக் கொடுத்தல்) அவை பெரிய அளவில் மனித இயல்பிற்கு முதலும் கடைசியுமான அவரது செய்தியாக அமைகிறது.

சிக்ஷாஷ்டகம்

புனித நாமாவளியினைப் பண்ணிசைப்பதின் ஏழுதள மடிப்பின் பயனிறையுடைமை:

சேதோ தர்ப்பணமார்ஜானம்
பவ மஹா தாவாக்னி நிர்வாபனம்
ஸ்ரேய கைரவ சந்திரிகா விதரணம்
வித்யா வதூ ஜீவனம்
ஆனந்தாம் புதி வர்த்தனம் பிரதிபாதம்
பூர்ணாம்ருத ஸ்வதானம்
ஸர்வாத்மஸ்பைனம் பரம்
வித்யதே ஸ்ரீகிருஷ்ண சங்கீர்த்தனம்..............................1

(1)

மாசு சூழ் நம் மனக்கண்ணாடியிலிருந்து
அனைத்து அழுக்கு அகற்றி
பிறப்பு இறப்புத் தளையிலிருந்து
காட்டுத் தீயாம் பற்று தணித்து
நிலை பேறு நன்மை கருதி நிலவொளி
கதிர்களை அல்லி மலர் மீது சிந்தி
அவரது அழகு மணப்பெண் வாழ்வின்
சுடரொளிச் சிந்தனை ஆழ்ந்து
ஆனந்தக்கடல் தோற்றுவித்து
ஒவ்வொரு சொல்லும் அமுது தரும்
ஆன்மாவின் அனைத்திடத்திலும்
அமைதி நல்கும்
கலப்பு அற்றதும்
தனிச்சுவை நிறை ஸ்ரீ கிருஷ்ணரது
நாமாவளி தன்னைப்
பண்ணிசைத்துப் போற்றுவோம்.

நமது இதயக் கண்ணாடியிலிருந்து மாசுகளை தேய்த்து பளபளப்பாக்கி, பிறப்பு மற்றும் இறப்பு தளையிருந்து பற்று ஆசை உடைய மிகப்பெரிய காட்டுத் தீயினை தணித்து, நிலைபேறுடைய நன்மைக்காக அல்லிமலர்மீது நிலவொளிக் கதிர்களைச் சிந்தி, அவரது கவர்ச்சிமிக்க வாழ்வின் மனமார்ந்த சுடர்வீசுகின்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்து, ஆனந்தக்கடலை ஏற்படுத்தி, ஒவ்வொரு சொல்லும் பூரண அமிர்தத்தினை நல்கும் ஆன்மாவின் ஒவ்வொரு உறுப்பிலும் அமைதியினை உறுதிப்படுத்தும் கலப்பற்ற தனிச்சுவையான ஸ்ரீ கிருஷ்ணரின் புனித நாமாவளியினைப் பண்ணிசைத்து மும்முரமாக பெருமைப்படுத்துவோம்.

புனித நாமாவளியின் தனிச்சுவை வளம்

நாம்னாம் அகாரி பஹுதா நிஜஸர்வசக்திஷ்
தத்ரார்பிதா நியமித ஸ்மரணேன கால
எதாத்ருசி தவ கிருபா பகவன்ம மாபி
துர்தைவம் இதர்சம் இஹாஜனி நானுராகா...............................2

(2)

நினது நாம வெளிப்பாடு பலவாறாக ஆகி ஊடுருவும் தன்மையது
அதனை நினைவில் கொள்ள கால நேரம் ஏதும் கிடையாது
நினது உயர் பரிவால் எனது உணர்வு மகிழ்கிறது ஆயின்,
உனது நாமாவளிக்கு அன்பு செலுத்தும் திறன் எனக்கேது?

பலவாறாக வெளிப்படுத்தப்பட்டுள்ள உனது நாமாவளிகள் உனது அனைத்து சக்திகளையும் ஊடுருவச் செய்கின்றன உனது நாமாவளியினை நினைவிற்குக் கொண்டுவர ஒரு குறிப்பிட்ட காலம் கிடையாது. இறைவா! உனது பரிவு அவ்வளவு உயர்ந்துள்ளது. அது எனது துயர் தருகிற உணர்விற்கு நிறைவான மகிழ்ச்சியினை அளிக்கிறது, ஏனெனில் உன்னுடைய நாமாவளிகளை என்னால் அன்பு செலுத்த இயலவில்லை.

புனித நாமாவளியினைப் பகரத் தகுதி

த்ருணாத் அபி சுனிசேனா
டரோர் அபி ஸஹிஷ்நுணா
அமானினா மானதேன
கீர்த்தனியா சதா ஹரி: 3

புல்லினும் எளிமை மரம் போல் பொறுமை
மன வெறுப்பின்றி சுயமதிப்பு பெறல் மற்றும்
அவரவர் கடமையைச் செவ்வன செய்தலே
ஹரிநாமம் செப்புவோர் ஒவ்வொருவர் கடமை

சிறு புல்லைவிட எளிமையாக பணிவும், ஒரு விடா முயற்சியுடைய மரம்போல் பொறுமையும், மன வெறுப்பில்லாமல் ஒருவர் தமது மதிப்பினைப் பெற்றிருத்தல், அவர்களுக்குரிய அனைத்து மரியாதையினையும் காண்பித்தல், எந்நேரமும் ஹரியின் நாமாவளியினைச் செப்புதல் ஒருவரது கடமையாகும்.

புனித நாமாவளியினைப் பகருவதற்கான பிரார்த்தனை வழிமுறை

ந தனம் ந ஜனம் ந சுந்தரம்
கவிதாம் வா ஜெகதீச காமயே
மம ஜென்மானி ஜென்ம நிஸ்வாரே
பகவதாத் பக்திர் அஹய்து கி த்வயீ...................4

பொருள் வேண்டேன் மக்கள் வேண்டேன்
அழகு வேண்டேன் ஒப்பீடு வேண்டேன்
இறைவா! என் நிலை மறந்து மன்றாடி வேண்டுவேன்
என்றும் நினது அடிமையாய் இருக்கவே
எண்ணற்ற பிறவிகள் நான் எடுத்த போதும்
எப்பொழுதும் என் இதயம் நின்பாதத்தில்
நிலைத்திருக்க அருள்புரியும் விலை மதிப்பற்ற
என் அன்பு சரணடைய வரம் வேண்டுவேன்

செல்வம் வேண்டாம், மக்கள் வேண்டாம், அழகு வேண்டாம் ஒப்பீடு வேண்டாம். ஓ! இறைவனே நான் ஏங்குகிறேன் (சிந்தனையில் ஆழ்ந்திருத்தலில்கூட) தன்னை மறந்தும் கூட மன்றாடாது உனது அடிமையாகயிருப்பதனை விரும்புகிறேன். கணக்கற்ற பிறப்புகள் எடுத்தபோதும் உனது பாதங்களில் எனது இதயம் சரணடையும் இத்தனித்தன்மை வாய்ந்த வரம் கேட்கிறேன். விலை மதிப்பில்லா அன்பு சரணடையட்டும்.

புனித நாமாவளியினைப் பாராயணம் செய்பவரது உண்மையான கருத்து உருவாக்கல்

அயி நந்த தனுஜ கிங் கரம்
பதிதம் மாம் விஷமே பவாம்புதௌ
கிருபாய தவ பாத பங்கஜ
ஸ்தித தூலிச திருசம் விசின்தயா.........................5

நந்தகுமாரா நான் உன் சேவகன்
சம்சார சாகரத்தில் மூழ்கியவன்
உன் அருளாலே உன் தாள் பணியும்
ஒரு சிறு தூசாக மாறுவேனே

நந்தகுமாரனே! நான் உனது சேவகன். பயங்கரமான இவ்வுலகக் கடலில் நான் வீழ்ந்து விட்டேன். உனது கருணையாலே உனது பாதக் கமலங்களில் விழும் ஒரு சிறு தூசியாக நான் பற்றிக் கொள்கிறேன்.

நயனம் கல தஸ்ருதாரயா
வதனம் கத்கத ருத்தயா கிரா
புலகைர் நிசிதம் வபு கதா
தவ நாம கிரஹனே பவிஷ்யதி 6

கண்களில் நீர் மல்கும்
செவிகளில் அன்பொலி நிறைந்திருக்கும்
உதடுகளில் உன் பெயர் ஒட்டியிருக்கும்
இறைவனே நின் நாமம் செப்பும்போது

இறைவா! உனது நாமாவளியினைச் செப்பும்போது எனது கண்களில் எப்பொழுதும் கண்ணீர் நிறைந்து இருக்கும். என்து ஒலியானது அன்பினால் உலர்ந்து இருக்கும் எனது உதடுகள் அனைத்து வார்த்தைகளினாலும் திணற அடிக்கப்பட்டிருக்கும். எனது அனைத்து உறுப்புகளும் மென்மையான உணர்வினால் அதிர்வுறும்.

யுகாயிதம் நிமேஷேன
சக்ஷுஷா பிராவ்ருஷாயிதம்
சூன்யாயிதம் ஜகத் ஸர்வம்
கோவிந்த விரஹேன மே 7

கணநேரம் ஊழியாக மாறுமே
கண்ணிமை சகலத்தையும் களங்கமாக்குமே
இருள்மயமாக்கும் சூலுற்ற மேகம் போல்
கோவிந்தனைக்காணாது என் மனம் வாடுமே.

கோவிந்தனைக் காணாத எனக்கு ஒருகணப் பொழுது ஓர் ஊழிக் காலமாகக் கழிகிறது. கண்ணிமையானது அனைத்தையும் கறைப்படுத்துகிறது. பொழியும் மேகமானது இருண்ட பருவத்தினை ஏற்படுத்துவதுபோல் இவ்வுலகு முழுவதும் எனக்கு கவர்ச்சியற்றதாக வெறுமையானதாக, இழப்பிற்குரியதானதாகத் தோன்றுகிறது.

ஆச்லிஷ்ய வா பாதரதாம் பினஷ்து மாம்
அதர்ஸனான் மர்மஹதாம் கரோது வா
யதா ததா வா விததாது லம்படோ
மத்பிராணனா தஸ்து ஸ ஏவ நாபரஹ்........................8

இறைவனே! நீயெனை எவ்விதம் நடத்தினாலும்
என்வாழ்வு உனக்காகத்தான்
நின்வாயிலில் எனை இகழினும் புகழினும்
என் மனதில் உன் நினைவுதான்

இன்பத்திலும் துன்பத்திலும் என்
இதயம் நினைப்பது நின்னைத்தான்
மாறும் இயல்புடைய என்
மனத்திற்குத் தலைவன் நீதான்.

ஓ! இறைவனே! நீ என்னை வெறுப்புடன் நடத்தினாலும் சரி மென்மையாக அணைத்துக் கொண்டாலும் சரி நிலை பேறுடைமைக்காக எனது வாழ்வு அவனுக்கு மட்டுமே அளிக்கப்பட்டு உள்ளது. அவனது வாயிற்படியில் என்னை இகழ்ந்து புறக்கணித்தாலும் சரி, என்னுடன் ஒத்துப்போவதாக இருந்தாலும் ஆனந்தப் பரவசத்தில் அல்லது துயரில் அவனிடம் மட்டும் தான் எனது எண்ணங்கள் நிலைத்து நிற்கும். அவர் என்னை வரவழைத்தாலும் அல்லது ஒப்புக் கொண்டாலும் அடிக்கடி மாறும் இயல்புடைய அந்த பொழுதுபோக்குடன் என் இதயம் அவனை மட்டும்தான் வணங்கும். வேறு யாரும் எனது தலைவனாக இருக்க முடியாது.

தமது சமய சார்பான உரைகளின் போது சைதன்யர் இவற்றைத் தமது நெருங்கிய தோழர்களிடம் செப்பினார் அவர் தமது இளமைக் காலத்தில் இலக்கணத்திற்கு விளக்கவுரை எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது. அது அவரது காலத்தைச் சார்ந்த புலவர்களால் போற்றப்பட்டுப் பாராட்டப்பட்டது. இவைகளைத்தவிர அவர் வேறு ஏதேனும் இயற்றியுள்ளாரா என்பது (ஐயமற்ற நிலையுடன்) நமக்கு உறுதியுடன் தெரியவில்லை.

இச் செய்யுட்களானது அடிப்படையான ஆழ்ந்த பெருமதிப்பினையும் உயர் இலக்கியல் நிறைவுகளையும் தெளிவு செய்கின்றன. மூன்றாவது செய்யுளில் இயம்பப்பட்டுள்ள கம்பீரமான கருத்தானதைப் போன்று இயற்றுதல் மிகக் கடினம். குறிப்பாக நான்காவது செய்யுளானது அனைத்து உலக ஆசைகளையும் துறந்து இறைவனிடம் சரணாகதி அடைவதனைப் பறைசாற்றுகிறது. இச்செய்யுட்களின் முக்கிய தனிச்சிறப்பு யாதெனில் அவை ஒரு குறிப்பிட்ட சமூகத்தினைச் சார்ந்த அல்லது தத்துவ ஞானத்திற்குரிய நோக்கினை வெளிப்படுத்தவில்லை என்ற அனுபவச் செய்தியினை வெளிப்படுத்துகிறது. எனவே, இவைகள் எந்த மத அல்லது தத்துவ கோணத்தினை, நோக்கத்தினைச் சார்ந்தவர்கட்கும் எல்லா காலத்திற்கும் உரிய மக்களுக்கு ஒரு வேண்டுகோளாகத் திகழ்கின்றன.

சைதன்யரின் பங்கு

பதினைந்து மற்றும் பதினாறாம் நூற்றாண்டினைச் சார்ந்த மன உரமிழந்த வங்கச் சமுதாயத்தின் சூழ்நிலைப் பொருத்தத்தில் சைதன்யரின் பங்கினை மதிப்பீடு செய்வது என்பது ஒரு மிகச் சுலபமான பணியாகாது. முகம்மதிய ஆட்சியாளர்களால் ஆட்சி செலுத்தப்பட்ட அக்கால இந்து சமுதாயத்தின் கலாச்சார மறுமலர்ச்சி இயக்கதினது ஒருசார்புரிமை பேச்சாளராகச் சைதன்யரை நாம் ஓரளவு கருதலாம். நடைமுறையில் நிலவுகிற சாதி முறைக்கு எதிராக நேரடியாக இருந்தார் எனக்கொள்ள முடியாது. ஆனால் சமுதாயத்தினது நிலைகுலைவான தீங்குகளை நோக்கிச் செல்லும் மக்கள் கூட்டத்தினது உணர்வு நிலையினை எண்ணங்களை உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிவரச் செய்யப் பெரும்பாடுபட்டார். (சைதன்யர் தோன்றிய காலமானது அனைத்து வழிகளிலும் நிலப்பண்ணை உரிமை முறை காலமாகக் கருதப்பட்டது) ஊழியமானியத்திற்குரிய கால சட்டத்திற்குரிய பாதுகாத்துக் கொள்ளும் இயல்புடைய மாறுதல் விரும்பாத குறுகிய மன நிலையினைக் கடுமையாகப் புறக்கணித்து சைதன்யர் தமது விரிவான முற்போக்கு பார்வை, அனைத்து உயிர்களுக்கும் அன்பின் பண்பினை விரித்துரைத்தல், கடவுள்பக்தி மற்றும் குறிப்பாக நாம சங்கீர்த்தனையை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றை போதித்தார். கிருஷ்ணரை வழிபாடு செய்வதில் சாதி மற்றும்திருமுறைக் கோட்பாட்டினைப் பொருட்படுத்தாது அனைத்து மக்களுக்கும் உரிமையினை நிலைநாட்டினார். பூரியிலும் ஜெகன்னாதக் கடவுளினது தேரிற்கு முன்பாக வாழ்வின் அனைத்து தரப்பட்ட மக்கள் சார்ந்த இறைமையன்பின் மிகப் பெரிய திருவிழாவினை ஏற்பாடு செய்வதில் வெற்றிகரமாக விளங்கினார். மாறுதல் விரும்பாதோர் மற்றும் மரபுக்கோட்பாட்டினரால் பண்பு விரித்துரைக்கப்பட்ட அக்கால சமுதாயத்தினது சூழ்நிலை பொருத்தத்தில் எல்லோருக்கும் சம உரிமைகள் வேண்டுமென்று வற்புறுத்துகிற துணிகர முயற்சிகளாக நாம் கருதலாம். ஆயின் சமுதாயத்தில் உயர்வு தாழ்வு வேறுபாட்டினைக் களைந்து சமூக ஒற்றுமையினைத்

தோற்றுவித்தல் ஏகாதிபத்திய ஆட்சியினை (ஆட்சியாளர்கள்) அடியொடு ஒழித்தல் ஆகியவை நோக்கி எல்லோருக்கும் சம உரிமைகள் வழங்க வேண்டுமென்று வற்புறுத்துகின்ற முயற்சிகள் வெறுப்படையச் செய்தனவோ என எண்ணத் தோன்றுகிறது. இம்மதிப்பில் சைதன்யரை புத்தருடன் ஒப்பிட்டு நோக்கலாம். அவர்கள் சந்தேகமற சமுதாயத்தின் மிகப்பெரிய சீர்திருத்தவாதிகள் ஆவர். ஆனால் எதிர் கிளர்ச்சி செய்பவர்கள் அல்லர். மற்றும் அடிப்படை மாறுபாடுகள் செய்யக்கூடியவர்கள் அல்லர்.

மனிதத்தன்மை நோக்கி ஓர் ஆழ்ந்த பெருமதிப்பினை உபநிடதங்கள் உறுதியான கால எல்லையில் பறை சாற்றுகின்றன. வைணவ நம்பிக்கை மற்றும் மதத்தில் மனிதத்தன்மைக்கான வெற்றியாக எதிரொலிக்கப்பட்டுள்ளது. இரவீந்திரநாத் தாகூரின் கூற்றுப்படி மனித இயல்பின் அன்பு சைதன்யரின் ஒழுக்கத்தினைப் பெரிதும் தனித் தன்மையளித்துக் காட்டுகிறது. சைதன்யர் போதித்த மனிதத் தன்மைக்கு அவர் நல்கிய மதிப்பு அப்பெரிய கவிஞனை திணற அடிக்கக்கூடிய அளவிற்கு மனதில் பதியவைத்து உள்ளது. பதாவளி இலக்கியத்திலும் ஒவ்வொன்றிலும் மனிதனது விஞ்சி மேற்பட்டிருக்கும் திறனானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வரலாற்றின் இடைக்காலத்திய ஏனைய மதத்தலைவர்கள் போலவே, சைதன்யர் சீர்திருத்தவாதிப் பணியினை மேற் கொண்டார். புற உலகில் தோன்றுவதெல்லாம் கருத்தளவே ஆகும் என்ற கொள்கையை உடையவர். அவர் மக்களின் மனதில் சமகாலத்தவர்கட்கு பரிவிரக்கம் தருபவராக இருந்தார். உறுதியான கால எல்லையில் உணர்வுமிக்க தகுதிகளை பறைசாற்றுபவராகவும் தோன்றினார். இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் போன்றவைகளில் படைக்கும் திறனுள்ள செயல் உரிமையினது ஒரு விசித்திர வெளிப்பாடு சமூக கலாச்சார விழிப்புணர்வில் இதன் விளைவாகக் காணப்பட்டது ஆனால் சைதன்யர் போன்றவர் உச்ச இயல்பு பற்றிய அறமுறை இறுதி இலக்கு நலமானது யாதெனில் அவர் தற்காலத்தினது விளைபயனைவிட வருகையாளராகத் திகழ்ந்தார் அவரைப்பற்றி சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, யாதெனில், "மனிதனால் எக்காலத்திலும் கருக்கொள்ளப்பட்ட உயர்ந்த தத்துவத்தினது உயர்

விளக்கவுரையாளராக ஒளிபோல் விளங்கும் ஒரு தனி மனிதராக மட்டுமல்லாது அதே நேரத்தில் மக்கள் அல்லது கூட்டம் என்று கருதப்படுகிற வரையறுத்ததைக் கூற முடியாத அந்த மூல தத்துவத்தினது மனிதனையும் செய்கையினையும் வார்படமாக்கும் திறன் வாய்ந்த ஆசிரியராகவும் திகழ்ந்தார். அவர் செயல்துறை கோட்பாளராகவும் செயல்துறைச் சார்ந்த தம் அரிய செயற்கூட்டுறவு சேர்க்கையாகத் திகழ்ந்தார். அவரது தேர்ச்சியான மாயவித்தையானது சமமான அளவில் மூலவாய்ப்பு வளம் நிறைந்த ஒழுக்க தருக்க முறையுடன் ஈடுயிணையானதாகயிருந்தது மேலும் அவர் உயர் ஆசானாகத் திகழ்ந்தார். அவர் அன்பினையும் பகுத்தறிவினையும் ஒன்றாக சீதனமாக வழங்கும் திறமை பெற்றிருந்தார். தமது இம்முறையீட்டினால் ஒருசேர அறிவுத்திறனையும் உணர்வினையும் நாடு முழுவதிலும் உருமாற்றம் செய்ய முடிந்தது.

சைதன்யரின் பங்கினை ஒரு மாறுபட்ட் கோணத்திலிருந்து நாம் மதிப்பீடு செய்யலாம். பதினைந்தாவது நூற்றாண்டைச் சார்ந்த பழங்கால நாட்டம் கொண்ட வங்க சமூகத்தின் மனநிலைச்சார்பு (எண்ணங்களை) தமது ஆற்றல் வாய்ந்த தனிமனித நிலை துணைகொண்டு விசாலமாக்கியுள்ளார். நமக்குத் தெரியவருவது யாதெனில் சுதந்திர வங்காள சுல்தான்களின் பகுதியில் சைதன்யர் தோன்றினார். வங்க சுல்தான்கள் அடிக்கடி அண்டை நாடுகளுடன் சிறு கலகங்களில் ஈடுபட்டனர். இதன் விளைவாக மக்கள் மிக அபூர்வமாக வங்கத்தைவிட்டு வெளியேறினார்கள் அக்கால வங்கத்தின் வர்த்தகர்களும் வியாபாரிகளும் சோம்பேறியாக இருந்தனர். அதனால் வெளி வர்த்தகர்களால் வெளியுலக வியாபார நிலைய அறிக்கைகள் முழுவதுமாகக் கைப்பற்றப்பட்டன. அக்கால வங்க சமுதாயத்தின் தொடர்பு இணைப்பானது வெளி உலக வங்க உலகுடன் முழுவதும் பாதிக்கப்பட்டது பிருந்தாவனம் மற்றும் பூரி பகுதிகளுக்குத் தீர்த்த யாத்திரைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டதால் புதிய தொடர்புகளுக்கு புது வழியினை ஏற்படுத்தியது.

ஸ்ரீ சைதன்யரின் தொடர்பானது மிகப்பெரிய விரிவான சூழ்நிலைப் பொருத்தத்திலும் நோக்கப்படலாம். அவர் அடிக்கடி

இறை ஆனந்தப் பரவசத்தில் மூழ்கியிருந்தபோதிலும் இந்தியாவின் கலாச்சார வரைபடம் ஆனது, அவரது இதய அரசு பீடத்தில் என்றும் நிலைத்திருந்தது இல்லாவிடில் வைணவ இயக்கத்தினுடைய தலைவர்களாக பிருந்தாவனத்திற்கு அக்கால ஆறு பெரும் அறிஞர்களை அனுப்பியிருந்து இருக்கலாம். அரசியல் கண்ணோட்டத்தில் மட்டுமல்லாது தத்துவ மற்றும் ஆன்மீக கோணத்திலும் கௌடாவானது பெரும்பகுதியான இந்தியாவிலிருந்து மனமுறிவு கொள்ளவில்லை. வங்கத்தின் அறிவு சார்ந்த மற்றும் ஆன்மீக மரபானது ஒரு தனியான பருமானத்தினைக் கூட்டியது. அவர் இந்தியா முழுவதனையும் ஒரு மதத்தில் ஒன்று இணைக்க முயற்சி செய்தார். இக்கோணத்தில் தேசீய ஒருமைப்பாட்டினை உண்மையில் உருவாக்குபவராகக் கருதப்படலாம்.

மதச் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் மரபுகளை மீறி பெண்ணுரிமையினை நிலை நாட்டியவர் சைதன்யர் ஆவார் இவ்வாறாக, நித்யானந்தரின் துணைவியாராம் ஜானவி தேவியினை பிருந்தாவனத்தில் சமய போதகராக நாம் காண்கிறோம். மேலும் கேதுரியில் நடைபெறும் உச்சகட்டங்களில் ஆசானாகவும் நாம் காண்கிறோம். சீதாதேவி, நந்தினி, மாலினி, மாதவி - ஆகிய அனைவரும் முறையே மத சம்பந்தப்பட்ட கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டனர்.

நமது இத்தொல்லுலகானது பல அறப்போர்களை அனுபவித்துள்ளது. அவ்வறப்போர்கள் இறுதியில் தங்கு தடையற்ற இரத்தத்தினைச் சிந்தியுள்ளது. ஆனால் சைதன்யரால் வெற்றி வாகை சூடப்பட்ட ஆன்மீக வெற்றியானது ஒரு துளி இரத்தம் கூட சிந்தாமல் பெறப்பட்ட மாறுபட்ட வகையாகும் இவை போன்ற நிகழ்ச்சிகட்கு இணையான நிகழ்வுகள் அரிதாக நிகழ்கின்றன.

இம்மிகப்பெரிய, தனி மனிதரின் வாழ்க்கை முழுவதுமானது மேலான ஆய்விற்கும், ஆழ்ந்த பகுப்பிற்கும் தகுதியுற்றிருக்கிறது. அவர் மதிப்பு ஆய்வாளப்பட்டுள்ளார். மேலும் உலகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தொடர்ந்து மதிப்பு ஆய்வில் ஈடுபடுத்தப்படுவார். நவீன சமூகத்தின் சிறந்த சிந்தனையாளர்களில்

ஒருவராகத் திகழும் காரல்மார்க்ஸ் 'அவரை சீர்திருத்தவாதியாகவும் சாதிமுறைக்கு எதிராக குரல் கொடுத்த விரிந்த மனப்பான்மை யுடைய சார்புரிமை பேச்சாளராகக் குறிப்பிட்டுள்ளார்.

விண்வெளி உந்து கூண்டுகள், கணிப்பொறிகள் மற்றும் மின்னணுவியல் கொண்ட நவீன உலகிலும் அவரது தொடர்பு நீண்ட ஐநூறு ஆண்டு காலச் சிறப்பாகும். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவர் இன்னும் விவாதத்திற்குரிய பொருளாகத் திகழ்கிறார் என்ற உண்மை நிகழ்ச்சி போதுமான அளவு நிரூபிக்கப்பட்டுள்ளது. சைதன்யரால் போதிக்கப்பட்ட மதம் திணற அடிக்கிற வகையில் உள்ளது. அதே சமயத்தில் ஏற்றுக் கொள்ளும் தன்மை மற்றும் விரைந்த விரிவடைந்த நிலையானது இந்நாட்களிலும் வைணவ இயலின் தொடர்பினை சந்தேகமில்லாமல் நிரூபணம் செய்கிறது.

PRONUNCIATION KEY உச்சரிப்பு வழிகாட்டும் குறிப்பு

புத்தகத்தில் உச்சரித்தபடி	மாதிரி எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளைக் குறித்து காட்டுகிற குறிகளுடன் கூடிய எழுத்துப் பெயர்ப்பு முறை
Acaladarubrahma	அசலதாருப்ரம்மா
Acarya	ஆசார்யா
Acintyabhedobhedavada	அசிந்த்யபேதா பேதவாதம்
Advaidacarya	அத்வைதாச்சாரியா
Advaitavada	அத்வைதவாதம்
Advaita Vedanta	அத்வைத வேதாந்தம்
Aitota	அய்டோடா
Ananda	ஆனந்தா
Ananthapadmanabha	அனந்த பத்மநாபா
Annamayakosa	அன்னமயகோசா
Antarangasakti	அந்தரங்கசக்தி
Aparadhbhanjaner pat	அபராத பஞ்ஜனர்பாதம்
Aprakavalila	அப்ரகவலீலா
Asadha	ஆஷாடா
Aulcand	அவுல்சாந்த்
Avadhuda	அவதூத
Baladeva Vaidayabhusana	பலதேவவித்யாபூஷணா
Balarama	பலராமா
Bhagavahamrha	பாகவதாம்ருத
Bhagavadasandarbha	பாகவத சந்தர்ப
Bakti Rasamrda Sindhu	பக்தி ரசாம்ருதசிந்து
Bhakti Ratnakara	பக்தி ரத்னாகர
Bharati	பாரதி

Bhedabhedavada	பேதாபேதவாதம்
Brahamananda	பிரம்மானந்தம்
Brahmananda Bharathi	பிரம்மானந்த பாரதி
Bramasamhita	பிரம்மசம்ஹிதா
Brahmasutra	பிரம்மசூத்திரம்
Brahabhavavatamra	பிருஹத்பாகவதாம்ருதா
Brahaspati	பிருஹஸ்பதி
Burò Ganga	புடோ கங்கா
Caitanyabhagavta	சைதன்ய பாகவதா
Caitanya Cariramrta	சைதன்ய சரிதாம்ருதா
Caitanya Mangala	சைதன்ய மங்களா
Caitanya Vilasa	சைதன்ய விலாசா
Candidasa	சண்டிதாஸா
Cand Kazi	சாந்த் காஸி
Cand Pata	சாந்த்பாடா
Candrasekara	சந்திரசேகரா
Cathurmasya	சாதுர்மாஸ்யா
Cathupathi	சதுஸ்பதி
Damodra Panditha	தாமோதர பண்டிதர்
Damodra Svarupa	தாமோதரஸ்வரூபர்
Danakeli Kaumadhi	தானகேலி கௌமுதி
Danalila	தானலீலை
Dandabhanga	தண்டபங்கம்
Darubrahma	தாருபிரம்மா
Dasamacarita	தஸம சரிதா
Devadasi	தேவதாசி
Devananda	தேவானந்தா

Doha	தோஹா
Duvadasadasa	துவாதச தஸா
Duvaitavada	துவைத வாதம்
Gadadhara	கடாதரர்
Gambhira	கம்பீரம்
Ganga	கங்கை
Gangadasa	கங்காதாசர்
Garudastambha	கருடஸ்தம்பம்
Gauda	கௌட
Gaudavanga	கௌடவங்க
Gaudiya	கௌடியர்
Gaurakrishnodayakavya	கௌரகிருஷ்ணோதயகாவியம்
Gaurangaravada	கௌரங்கரவாதம்
Gauranga	கௌரங்கா
Gitagovinda	கீதகோவிந்தம்
Gopala	கோபாலன்
Gopala Bhatta	கோபால பட்டர்
Gopala Cambu	கோபால சம்பூ
Gopala Mantra	கோபால மந்திரம்
Gopala Tapani	கோபால தாபனி
Gopala Virudavali	கோபால விருத்தாவளி
Gopi	கோபி
Gopinatha	கோபிநாதர்
Gosvamin	கோஸ்வாமின்
Govindadasa	கோவிந்ததாசர்
Govinda Vidyadhara	கோவிந்த வித்யாதரர்
Gundicamandira	குண்டிசாமந்திரம்

Gundicavati	குண்டிசாவாதி
Hamsaduta	ஹம்சதூதம்
Haribhakti Vilasa	ஹரிபக்திவிலாசம்
Haridasa	ஹரிதாசர்
Harikrishna	ஹரிகிருஷ்ணர்
Harinama	ஹரிநாமம்
Harinamamrta	ஹரிநாமாம்ருதம்
Ichchasakti	இச்சாசக்தி
Isvarapuri	ஈஸ்வரபுரி
Jagdisa	ஜெகதீசர்
Jagai	ஜெகாய்
Jagannathacaritamtra	ஜெகன்னாத சரிதாம்ருதம்
Jagannatha mistra	ஜெகன்னாத மிஸ்ரர்
Jagannatha Vallabha	ஜெகன்னாத வல்லபம்
Jahanavi Devi	ஜான்னவி தேவி
Janardana	ஜெனார்தனர்
Jayananda	ஜெயானந்தர்
Jita mishra	ஜித மிஸ்ரர்
Jiva	ஜீவன்
Jnana	ஞானம்
Kadca	கட்சா
Kalapahad	காலாபஹாட்
Kalapavyakarna	கலாப வியாகரணம்
Kalavati	கலாவதி
Kaliya	காலியன்
Kamalakanta	கமலா காந்தா
Kamalakara	கமலாகரம்

Kamalaksha	கமலாக்ஷம்
Kanainatshala	கானாய்நாட்ஷாலாம்
Kartabhaja	கர்த்தாபஜா
Kasi Mistra	காஸிமிஸ்ரர்
Kavikarnapura	கவிகர்ணபூரம்
Kesava Bharathi	கேசவபாரதி
Kesava Bhatta	கேசவபட்டர்
Khanda	கண்ட
Kholbhangar danga	கொல்பாங்கார் தாங்கா
Kosa	கோசம்
Krishna	கிருஷ்ணர்
Krishnacaryadipika	கிருஷ்ணாச்சாரிய தீபிகம்
Krishnadasa Kaviraja	கிருஷ்ணதாச கவிராஜர்
Krishnakarnamtra	கிருஷ்ணகர்ணாம்ருதம்
Krishnakirtana	கிருஷ்ணகீர்த்தனம்
Krishnalila	கிருஷ்ணலீலை
Krishnalilamrta	கிருஷ்ணலீலாம்ருதம்
Krishnananda	கிருஷ்ணானந்தம்
Krishnaperma	கிருஷ்ணபிரேமை
kriya	கிரியை
Ksiraprasada	க்ஷீரப்பிரசாதம்
Kulinantra	குலீனதந்திரம்
Kumaradeva	குமாரதேவர்
Kuvera Pandita	குவேர பண்டிதர்
Kuvera Tarka Pancanana	குவேர தர்க்க பஞ்சானனம்
Lashutosani	இலகு தோஷானீ
Lakshmana Seva	இலக்குவ (லஷ்மண) சேனர்

Lakshmi Devi	இலக்குமி தேவி
Lakshmi Narayanan	இலக்குமி நாராயணன்
Lalita Madhava	லலிதா மாதவம்
Lila	லீலை
Lilastrava	லீலாஸ்தவா
Locanadasa	லோசனதாஸர்
Locana Rocani	லோசன ரோசனீ
Madanagaopla	மதன கோபாலர்
Madhai	மாதாய்
Madhava	மாதவர்
Madhavamahotsava	மாதவ மகோத்ஸவம்
Madhavendrapuri	மாதவேந்திரபுரி
Madhavi	மாதவி
Madhusudanavacaspathi	மதுசூதன வாசஸ்பதி
Madhava	மாத்வர்
Mahabharata	மகாபாரதம்
Mahabhava	மஹாபாவம்
Maharaprabhu	மகாபிரபு
Mahaprasada	மகாபிரசாதம்
Maladhara Basu	மாலாதரபாசு
Malini	மாலினி
Mamu Thakura	மாமுதாகுரர்
Mangalakavya	மங்கலகாவியம்
Mangalaarathi	மங்கல ஆரத்தி
Manomayakosa	மனோமய கோசம்
Mayapura	மாயாபுரம்
Mayavada	மாயாவாதம்

Mishrapurandara	மிஸ்ரபுரந்தரர்
Mrdanga	மிருதங்கம்
Mukunda Sanjaya	முகுந்த சஞ்சயம்
Murari Gupta	முராரி குப்தர்
Naimisaranya	நைமிசாரண்யம்
Namabhajana	நாம பஜனை
Nama Brahma	நாம பிரம்மம்
Nama Dharma	நாம தர்மம்
Nama Yajna	நாம யக்ஞம்
Nandini	நந்தினி
Narahari Chakravarti	நரஹரி சக்கரவர்த்தி
Narasimha Deva	நரசிம்ம தேவர்
Narayani	நாராயணீ
Narottama Thakura	நரோத்தம தாகூரர்
Nataka Candrika	நாடகசந்திரிகா
Navadvipa	நவத்வீபா
Navyanyaya	நவ்யந்யாயம்
Nilacala	நீலாகலா
Nilambara Chakravarthy	நீலாம்பர சக்ரவர்த்தி
Nimai	நிமாய்
Nimbarika	நிம்பார்க்கர்
Nityananda	நித்யானந்தர்
Narasimhadeva	நரசிம்ம தேவர்
Nyaya	நியாயம்
Padavali	பதாவளி
Padmavati	பத்மாவதி
Padyavali	பத்யாவளி

Pala	பாலர்
Pancali	பாஞ்சாலி
Panda	பாண்டா
Paragal Khan	பராகல் கான்
Paramanandapuri	பரமானந்தபுரி
Pathasala	பாடசாலை
Prabhodananda Saraswati	பிரபோதானந்த சரஸ்வதி
Prahalada	பிரஹலாதர்
Prakasananda	பிரகாசானந்தர்
Prakasananda Sarasvati	பிரகாசானந்த சரஸ்வதி
Pranamayakosa	பிராணமயகோசம்
Prataparudra	பிரதாப ருத்திரர்
Premamayarasaraja	பிரேமமயரஸராஜா
Premaparavidha Stotra	பிரேமா பரவித ஸ்தோத்திரம்
Pundarika Vaidyanidhi	புண்டரிக வித்யாநிதி
Purusottama	புருஷோத்தமர்
Pusti Marga	புஷ்டிமார்க்கம்
Radha	ரத
Radhai	ராதை
Radhakrishna	ராதாகிருஷ்ணர்
Raghunatha Bhatta	ரகுநாத பட்டர்
Raghunatha Dasa	ரகுநாத தாஸர்
Rama	இராமர்
Ramakeli	இராமகேலி
Ramananda	இராமானந்தர்
Ramanuja	இராமானுஜர்
Ramanujacarya	இராமானுஜாச்சாரியர்

Ramayana	இராமாயணம்
Ramayet	இராமாயெட்
Rasalila	இராசலீலா
Rasamrtasesa	இரசாம்ருத சேஷா
Rasasastra	இரசசாஸ்திரம்
Rasayatra	இரசயாத்திரா
Ratayatra	இரத யாத்திரை
Ray Lakshmania	இராய லெஷ்மேனியா
Ray Ramanandar	ரே ராமானந்தர்
Rukmini	ருக்மிணி
Rupa	ரூபம்
Sasi Devi	சசிதேவி
Sadhana	சாதனா
Sadya	சாத்யம்
Sakabda	சகாப்தம்
Sasigopala	சசி கோபாலர்
Sakti	சக்தி
Samkalpakalpadruma	சங்கல்பகல்ப துருமர்
Samkirtana	சங்கீர்த்தனம்
Samksiptabhagavathmtra	சம்ஷிப்த பாகவாதாம்ருதம்
Sampradaya	சம்பிரதாயம்
Sanatana	சனாதனர்
Sanatana Mishtra	சனாதனமிஸ்ரர்
Sannyasa	சந்நியாசம்
Sapta Grama	சப்தகிராமம்
Saptamitithi	சப்தமி திதி
Sarasvati	சரஸ்வதி

Saravabhauma	சார்வபௌமம்
Saravasamvadini	சர்வ சம்வாதினி
Sastra	சாத்திரம்
Sastra Marigyabhati	சாஸ்திர மார்க்கீயபக்தி
Sastric	சாஸ்திரிக்
Satsandarbha	சத் சந்தர்ப்ப
Sattvika	சாத்வீகம்
Sikshashaka	சிக்ஷாஷ்டகம்
Sita Devi	சீதாதேவி
Sivam	சிவம்
Sloka	சுலோகம்
Smarta	ஸ்மார்த்தர்
Smriti	ஸ்மிருதி
Smitrisastara	ஸ்மிருதிசாஸ்திரம்
Sridhama	ஸ்ரீதாமர்
Sridhaara	ஸ்ரீதரர்
Srihari	ஸ்ரீஹரி
Sir Isvarapuri	ஸ்ரீ ஈஸ்வரபுரி
Sri Jiva	ஸ்ரீ ஜீவர்
Sri Krishna	ஸ்ரீ கிருஷ்ணா
Srimadbhavavata	ஸ்ரீமத் பாகவதம்
Srimadhavendarpuri	ஸ்ரீமாதவேந்திரபுரி
Srimadhusudana	ஸ்ரீ மதுசூதனர்
Srinathacarya	ஸ்ரீநாதாச்சாரியார்
Sriradhakrishna	ஸ்ரீராதாகிருஷ்ணர்
Srirupa	ஸ்ரீரூபர்
Srisanatana	ஸ்ரீசனாதனர்
Srisanatanasiksa	ஸ்ரீசனாதனசிக்ஷா

Sri Srikrishna Caitanya Caritamrta	ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ண சைதன்ய சரிதாம்ருதா
Srivasa	ஸ்ரீவாஸர்
Stavamala	ஸ்தவமாலா
Suddhavaitavada	சுத்த அத்வைத வாதம்
Sukhi	சுகி
Suklapaksa	சுக்லபட்சம்
Sutra malika	சூத்திரமாலிகை
Svarupasakthi	ஸ்வரூபசக்தி
Tapana mishra	தபனமிஸ்ரா
Telangi	தெலங்கி
Tirta	தீர்த்தம்
Tirumalla Bhatta	திருமல்ல பட்டர்
Tota Gopinatha	டோடா கோபிநாதர்
Uddhavasandesa	உத்தவ சந்தேஸம்
Ujjvalanilamani	உஜ்வல நீலாமணி
Upanisad	உபநிஷதம்
Upendra Mishra	உபேந்திர மிஸ்ரர்
Utkala Desa	உத்கல தேசம்
Vadarayana	வாதராயனர்
Vadhisimha	வாதிசிம்மர்
Vaidhibakthi	வைத்திபக்தி
Vaisnava	வைணவர்
Vaisnavathosani	வைணவ தோஷனி
Vaisnavisam	வைணவயியம்
Vallabhabhatta	வல்லப பட்டர்
Vallabacarya	வல்லபாச்சாரியர்
Vallalasena	வல்லாலசேனர்

Varnasramadhayma	வர்ணாஸ்ரமதர்மம்
Vasudeva Saravabhauma	வாசுதேவ சார்வ பௌமம்
Vatsalyarasa	வாத்ஸல்யரசம்
Vedanta	வேதாந்தம்
Vddapancanana	வேதபஞ்சானனம்
Venkata Bhatta	வேங்கட பட்டர்
Vidagamadhava	விதக்த மாதவம்
Vidyapathi	வித்தியாபதி
Vidyavacaspathi	வித்யா வாசஸ்பதி
Vijayadasami	விஜயதசமி
Vijayanana Mayakosa	விஞ்ஞான மயகோசம்
Vilapakusumanjali	விலாப குசுமாஞ்ஜலி
Visistadvaitavada	விசிஷ்டாத்வைதவாதம்
Visnu	விஷ்ணு
Visnu bakti	விஷ்ணு பக்தி
Vishnupriya	விஷ்ணுப்ரியா
Vishnupriya Devi	விஷ்ணுப்பிரியா தேவி
Visvambarha	விஸ்வம்பரர்
Visvarupa	விஸ்வரூபர்
Vrajamandala	விரஜமண்டலம்
Vrindavana	பிருந்தாவனம்
Vrindavana Dasa	பிருந்தாவனதாசம்
Vyakarana	வியாகரணம்
Vyapti	வியாப்தி
Yamuna	யமுனை
Yamunacarya	யமுனாச்சாரியர்
Yogabitha	யோகபிதா
Yuktavairagya	யுக்த வைராக்கியம்

தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தக விளக்கப் பட்டியல்

1. பெங்காலிர் இதிஹாஸ், நிஹாரஞ்சன் ரே, கல்கத்தா, 1980.

2 பெங்காலிர் சரஸ்வத அவதன், தினேஷ்சந்திர பட்டாச்சாரியா, கல்கத்தா, 1951.

3. பங்களார் வைஷ்ணவ தர்மா, பிரமதனாத தர்க்கபூஷணம், கல்கத்தா புல்க்கலைகழகம், 1939

4. பங்கிய சாஹித்யிர் இதிவ்ருதா பாகம் - 2, அஸித்குமார் பந்த்யோபாத்யாயர், கல்கத்தா, 1966

5. பங்களா சாகித்ய ரூப ரேகா பாகம் 1, கோபால் ஹல்டார் கல்கத்தா, 1363 பி எஸ்.

6. சைதன்யரும் அவர்து காலமும், தினேஷ் சந்திரசென், கல்கத்தா பல்கலைக்கழகம், 1922.

7. சைதன்ய பாகவதம், பிருந்தாவனதாஸதாகூரர், பதிப்பு சுகுமார் சென், சாகித்ய அகாடமி, புதுதில்லி, 1971

8. சைதன்ய சரிதாம்ருதம் கிருஷ்ணதாஸ கவிராஜர் பதிப்பு, சுகுமார்சென் சாகித்ய அகாடமி, புதுதில்லி, 1960.

9. சைதன்ய சரிதர் உபாதான், பீமன்பெஹாரி மஜூம்தார், கல்கத்தா பல்கலைக்கழகம், 1959.

10. சைதன்ய மங்களம், ஜெயானந்தர் பதிப்பு பீமன்பெஹாரி மஜூம்தார், ஏஷியாடிக் சொசைடி, கல்கத்தா 1971.

11. சைதன்ய மங்களம், லோசனதாஸ தாகூரர், பதிப்பு அதுல கிருஷ்ண கோஸ்வாமி, கல்கத்தா 1913

12. எத்னோலாஜிகல் நோட்புக்ஸ் ஆஃப் கால் மார்க்ஸ் 23ஆம் பதிப்பு லாரன்ஸ் கிரேடர் வான் கார்கம், கம்பெனி, 1974.

13. கௌடர் இதிஹாஸ் பாகம் - 1, ரஜனிகாந்த சக்கரவர்த்தி, மால்டா 1909.

14. வங்க சரித்திரம் பாகம் 2, பதிப்பு ஜே.என். சர்க்கார், டாக்கா பல்கலைக்கழகம், டாக்கா, 1948.

15 ஒரிய சரித்திரம் பகுதி 1 ராகல்தாஸ் பந்தயோபாத்யாயர், கல்கத்தா 1930-31

16. கன்ஹாகேலே தோமாபை, ஜய்தேவ் முகர்ஜி, ஜார்கிரம், 1971.

17. மஹாபிரபு ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ண சைதன்யர், அவரது இணையற்ற தனிமனிதர் நிலை மற்றும் தத்துவம், மஹா நம்பிரத பிரம்மச்சாரி, கல்கத்தா 1986.

18. ஸ்ரீசைதன்ய தேவர், சுந்தரானந்த வித்யவினோதர், கல்கத்தா 1946.

19. ஸ்ரீ சைதன்ய தேவ ஓ டஹார் பர்ஸாத்கன், கிரி சங்கர் ராய் சௌத்ரி, கல்கத்தா பல்கலைகழகம் 1957.

20. வங்கத்தில் வைணவ நம்பிக்கை மற்றும் இயக்கம், எஸ்.கே.டே, கல்கத்தா 1961

"சைதன்யர் (1486-1533) வைணவ அருட்தொண்டர் மற்றும் அறிவு கடந்த மெய்யுணர்வாளர். மற்றும் கிழக்கு இந்தியாவில் கௌடிய வைணவ இயக்கத்தின் முதன்மைச் சிற்பியாகத் திகழ்பவர். அவர் ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் அவரது கூட்டாக அமைந்த இராதையின் உணர்வினது கருத்து உருவமாக கருதப்படுகிறார்.

பழைமையைப் பேணுகின்ற நலிவுற்ற சமூகத்தில் பிறந்த சைதன்யர் அக்காலத்தில் நிலைநாட்டப்பட்ட மதிப்புகட்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தார். சைதன்யரின் வருகையால் துவக்கப்பட்ட வைணவ இயக்கமானது வங்காள நாடு மற்றும் கிழக்கு இந்தியா முழுவதும் பரவி கிட்டத்தட்ட இருநூற்றாண்டுகட்கு மக்களுக்கு அகத்தூண்டுதல் அளித்தது.

மனித ஆன்மா மற்றும் இறைவனுக்கு இடையே பரஸ்பர அன்பானது உயர்ந்த சொல் உயர்வினது சின்னமாகக் கிருஷ்ணரது புராணக்கதையும் அவரது இறை இணை கூட்டாளியாக இராதாவும் சைதன்யருக்குத் திகழ்ந்தது. பக்தியானது மதத்தின் பழக்கங்களினது ஏனைய அனைத்து வடிவங்களையும் கடந்து விட்டது என உணர்ந்தார். மேலும் இறையுணர்ச்சிக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டார்.

சைதன்யர் ஒரு புலவராகத் திகழ்ந்தபோதிலும் அவர் எழுத்தில் எவ்வித வழித்தோன்றல்களையும் விட்டுச் செல்லவில்லை. இருப்பினும், வைணவப் புலவர்களது இணையற்ற பதங்களிலிருந்து அவரது அன்பில் ஆனந்தப் பரவசத்தினது அழகிய காட்சியினைக் கண்டவர்கள் அளவிடமுடியாத அளவிற்கு தமது இலக்கியத்தினைச் செல்வாக்கு உள்ளதாகச் செய்து உள்ளனர். இப்பதங்களின் பெரும்பாலான பகுதிகள் (இராதா-கிருஷ்ணரின் அன்பு) இராதை மீது இருந்த கிருஷ்ணரது அன்பினுக்காக முழுவதும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அவை ஓர் ஆழ்ந்த ஆன்மீக முக்கியத்தினைக் கொண்டுள்ளன.

அவரது சீடர்களால் அநேக வாழ்க்கை வரலாற்றிற்குரிய படைப்புகள் இயற்றப்பட்டு உள்ளன. கோவிந்த தாசர் இயற்றிய கர்ச்சாக்கள் (உரைகள்), கிருஷ்ண தாசர் இயற்றிய சைதன்ய சரிதாம்ருதம் ஜெயநந்தர் இயற்றிய சைதன்ய மங்கல் மற்றும் பிருந்தாவன தாசர் இயற்றிய சைதன்யபாகவதம் முதலிய மதிப்பிடத்தக்கவையாகும்.

இத்தனி வரைவு நூலின் ஆசிரியர் முனைவர் அசோக் சாட்டர்ஜி சாஸ்திரி ஒரு திறனாய்வாளராகவும் சிறந்த புலவராகவும் திகழ்கிறார். மேலும் அவர் (கிரிபித் மேமோரியல்) கிரிபித் நினைவு மற்றும் உமேஷ்சந்திர வித்யா ரத்ன பரிசுகளைப் பெற்றுள்ளார். தற்சமயம் அவர் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத்துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் திகழ்கிறார்.

இத்தனி வரைவு நூலில் முனைவர் சாஸ்திரி அவர்கள், இந்தியர்களின் மதசமூக மற்றும் இலக்கிய வாழ்வில் சைதன்யரது மிகப் பெரிய செயல்விளைவினது முக்கியத்துவத்தினை தெளிவாகத் தொகுத்துள்ளார்.

Caitanyar (Tamil) Rs. 25
ISBN - 81-260-0633-1